552
2.53

# நேஷனல் தமிழ் மாலை

SCANNED
13 JUN 1953

நான்காம் படிவம்

பொதுப் பகுதி

பதிப்பாசிரியர் :
டாக்டர் மா. இராசமாணிக்கனர்
விவேகானந்தர் கல்லூரி, சென்னை.

SCANNED

TB
031 (8)
N53
135560.

நேஷனல் பப்ளிஷிங் கம்பெனி
6, கொண்டி செட்டித் தெரு, சென்னை-1

5333
2-5-53

# நேஷனல் தமிழ் மாலை

## நான்காம் படிவம் : பொதுப் பகுதி

13 JUN 1953

பதிப்பாசிரியர் :
டாக்டர் மா. இராசமாணிக்கனார்
M. A., L. T., M. O. L., (Ph. D.)
விவேகானந்தர் கல்லூரி, சென்னை.

நேஷனல் பப்ளிஷிங் கம்பெனி
6, கொண்டி செட்டித் தெரு, சென்னை–1

காப்பிரைட்] 1953 [விலை ரூ. 1–4–0

முதற் பதிப்பு—1952
இரண்டாம் பதிப்பு—1953

APPROVED FOR CLASS USE
BY THE MADRAS TEXT BOOK COMMITTEE
[*Fort St. George Gazette of* 13-5-53,
*Supplement to Part I-B, Page* 87.]

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
சென்னை-600 008.
135560
T3
031
N53

Kabeer Printing Works, Madras (2210)

# முன்னுரை

1. நேஷனல் தமிழ் மாலை என்னும் பெயருடன் வெளிவரும் இப்பா—உரை மாலைகளின் தொகுதி, நான்காம் படிவம்—பொதுப் பகுதிக்கு உரியது; கல்வித் துறையினர் அண்மையில் (4—7—'52) வெளியிட்ட பாட இயலை உளங்கொண்டு தயாரிக்கப்பட்டது.

2. பொதுப் பகுதியில் 400 வரிகளைக் கொண்ட செய்யுட் பகுதி வேண்டும் என்பது பாட இயலின் விதி. இந்நூலில் ஏறத் தாழ **457** வரிகள் தரப்பட்டுள்ளன. இவற்றிலிருந்து மனப்பாடத் திற்கு உரிய 100 வரிகளைத் தமிழாசிரியர் தம் விருப்பம் போலத் தேர்ந்தெடுத்துப் பிள்ளைகளை மனப்பாடம் செய்யச் சொல்லலாம். ஒவ்வொரு செய்யுட் பகுதியின் முதலில் ஆசிரியர் குறிப்பும், நூலின் விளக்கமும், ஈற்றில் அருஞ்சொற்பொருள், கேள்விகள், பயிற்சி என்பனவும் தரப்பட்டுள்ளன. அருஞ்சொற் பொருள் என்னும் தலைப்பில் தேவையான இலக்கணக் குறிப்புக்கள் சிலவும் தரப்பட்டுள்ளன. வருணனைப் பகுதி கதை தழுவி வருவ தாதலின், கதையையும் சொற்பொருளையும் எளிதில் உணரத்தக்க வாறு கதைப் பகுதிக்குப் பின் வைக்கப்பட்டுள்ளது.

3. உரை*ப் பகுதி 'இராயல்' 50 பக்க அளவில் பலவகைப் பாடங்களைக் கொண்டதாதல் வேண்டும் என்பது பாட இயலின் விதி. இதனை உளங்கொண்டே இந்நூலில் ஏறத்தாழக் குறிப்பிட்ட அளவில் வருமாறு 14 பாடங்கள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாடத்தின் முதலில் ஆசிரியர் குறிப்பும், ஈற்றில் அருஞ்சொற் பொருள், கேள்விகள், பயிற்சி என்பனவும் தரப்பட்டுள்ளன.

4. ஆசிரியர் ஒரு பாடத்தைக் கற்பிக்குமுன் மாணவர் தாமே முயன்று படித்தறிதற்கு உறுதுணையாகவே முன்னுரை, அருஞ் சொற் பொருள் முதலியன தரப்பட்டுள்ளன. மாணவர் ஊக்கத் துடன் பயிற்சிகளை விடாது செய்வராயின், கட்டுரை வரையும் திறமை கைவரப் பெறுவர்.

5. தத்தம் பாடல்களையும் உரைப் பாடங்களையும் இந்நூலில் சேர்த்துக்கொள்ளத் தம் இசைவு தந்துதவிய பெருமக்களுக்கு எனது உளமார்ந்த நன்றி உரியது. இதனை என்னுடன் இருந்து பரிசோதித்து, நன்முறையில் வெளிவர உதவி புரிந்த வித்துவான் சி. முருகேசனார்க்கும் (தமிழாசிரியர், முத்தியாலுப்பேட்டை உயர் நிலைப் பள்ளி, சென்னை), வித்துவான் பு. செல்வராசனார்க்கும் (தலைமைத் தமிழாசிரியர், அப்துல் ஹக்கீம் உயர்நிலைப் பள்ளி, சென்னை) எனது நன்றி என்றும் உரியது.

6. இந்நூலை மாணவர்க்குப் பயன்படச் செய்யும் அறிஞர் அனைவர்க்கும் என் பணிவார்ந்த வணக்கமும் நன்றியும் உரிய.

விவேகானந்தர் கல்லூரி,<br>சென்னை.

மா. இராசமாணிக்கம்

---

* உரைநடை - வாசக நடை (Prose style)—Lexicon I, P. 452. எனவே, உரை - வசனம் எனப் பொருள்படும்.

# உள்ளுறை


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| | **பா மாலை** | | |
| I. | வாழ்த்து | | |
| 1. | கடவுள் வாழ்த்து | ... | 1 |
| 2. | தமிழ்த்தாய் வாழ்த்து | ... | 3 |
| II. | அறவுரை | | |
| 1. | நான்மணிக்கடிகை | ... | 4 |
| 2. | திருக்குறள் | ... | 6 |
| 3. | சோமேசர் முதுமொழி வெண்பா | ... | 11 |
| III. | கதை | | |
| 1. | ஆசிய ஜோதி | ... | 13 |
| 2. | இரட்சணிய யாத்திரிகம் | ... | 16 |
| 3. | குசேலோபாக்கியானம் | ... | 20 |
| 4. | நளவெண்பா | ... | 23 |
| IV. | புனைந்துரை | | |
| | பாண்டவர் வழிநடைக் காட்சி | ... | 28 |
| V. | சிறு நூல்கள் | | |
| 1. | திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி | ... | 31 |
| 2. | நால்வர் நான்மணி மாலை | ... | 33 |
| 3. | திருவரங்கக் கலம்பகம் | ... | 36 |
| 4. | காந்தி பிள்ளைத்தமிழ் | ... | 38 |
| VI. | பல சுவை | | |
| 1. | கலைசைச் சிலேடை வெண்பா | ... | 41 |
| 2. | சீட்டுக் கவி | | 42 |
| 3. | தனிப் பாடல்கள் | ... | 43 |

| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|

## உரை மாலை


1. நாகரிகம் ... 46
 —திரு. P. இராமநாதன் அவர்கள், M.A.
2. குளிர்கால வருணனை ... 51
 —புலவர் மயிலை சிவ. முத்துக்குமாரசுவாமி முதலியார் அவர்கள்
3. சோழர் காலத்தில் கிராம ஆட்சி ... 55
 —திரு. மு. சண்முகம் அவர்கள், B.A. (Hons.)
4. பெண்கள் பந்தாட்டம் ... 59
 —டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள், M.A., (Ph.D.)
5. மனோன்மணீயம் ... 64
 —வித்துவான் R. பழநியாண்டி முதலியார் அவர்கள்
6. எனது ஜப்பான் செலவு ... 70
 —திரு. சு. இராமசுவாமி நாயடு அவர்கள், முன்னாள் மேயர், சென்னை.
7. தொழிற்கல்வி ... 76
 —திரு. ச. ஆறுமுக முதலியார் அவர்கள், M.A., B.O.L., L.T.
8. சோழமாதேவி (நாடகம்) ... 81
 —திரு. வி. நரசிம்ம ஐயர் அவர்கள், M.A.
9. தமிழன் கண்ட மலேயா (கடிதம்) ... 86
 —திரு. அ. மு. பரமசிவானந்தம் அவர்கள், M.A., M.Litt.
10. பூம்புகார் நகரம்—I ... 92
 —டாக்டர் மா. இராசமாணிக்கனார், M.A., L.T., M.O.L., (Ph.D.)
11. பூம்புகார் நகரம்—II ... 98
 —டாக்டர் மா. இராசமாணிக்கனார், M.A., L.T., M.O.L., (Ph.D.)
12. பல்லவர் காலத்துச் சிற்பங்கள் ... 103
 —திருவாட்டி R. ஜனுபாய்அம்மையார் அவர்கள், B.Sc. (Hons.)
13. கிராமப் பொருளாதாரம் ... 112
 —திரு. நேமம். நடராசன் அவர்கள், M.A., M.Litt.
14. பழந்தமிழ் உரை நடை ... 120
 —அடியார்க்கு நல்லார்

# இசைவு பெற்றுப் பதிக்கப்படுபவை

| பாடம் | இசைவளித்தோர் |
|---|---|
| **பா மாலை** | |
| 1. தமிழ்த்தாய் வாழ்த்து | கரந்தைக் கவியரசு அரங்க வேங்கடாசலம் பிள்ளையவர்கள். |
| 2. (1) ஆசிய ஜோதி : புத்தரும் பிம்பிசாரனும் | திரு. கே. குமாரசாமிப் பிள்ளை அவர்கள், புத்தேரி. |
| (2) மலரும் மாலையும் : விண்ணப்பம் | ,, |
| 3. காந்தி பிள்ளைத்தமிழ் | ராய. சொக்கலிங்கம் அவர்கள், அமராவதி புதூர். |
| 4. பாரதி அறுபத்தாறு : பெண்விடுதலை | சென்னை அரசாங்கம். |
| **உரை மாலை** | |
| 1. குளிர்கால வருணனை | புலவர் மயிலை. சிவ. முத்துக்குமார சுவாமி முதலியாரவர்கள். |
| 2. பெண்கள் பந்தாட்டம் | (1) டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள், M.A., (Ph. D.)<br>(2) பழநியப்பா பிரதர்ஸ், சென்னை. |
| 3. எனது ஜப்பான் செலவு | (1) திரு. சு. இராமசுவாமி நாயடு அவர்கள், சென்னை.<br>(2) வெள்ளையன்பதிப்புக்கழகம், கண்டனூர். |
| 4. சோழமாதேவி | பழநியப்பா பிரதர்ஸ், திருச்சிராப்பள்ளி. |
| 5. தமிழன் கண்ட மலேயா | திரு. அ. மு. பரமசிவானந்தம் அவர்கள், M. A., M. Litt., சென்னை. |
| 6. பல்லவர் காலத்துச் சிற்பங்கள் | திருவாட்டி R. ஜனுபாய் அம்மையார் அவர்கள், B. Sc. (Hons.), திருச்சிராப்பள்ளி. |
| 7. கிராமப் பொருளாதாரம் | திரு. நேமம். நடராசன் அவர்கள், M. A., M. Litt., சென்னை. |
| 8. பல்லவர் காலத்துச் சிற்பங்களை உணர்த்தும் படங்கள் 5. | Department of Archaeology, Madras. |

# நேஷனல் தமிழ் மாலை

## நான்காம் படிவம் : பொதுப் பகுதி

## பா மாலை

## I. வாழ்த்து

### 1. கடவுள் வாழ்த்து

### (1) தேவாரம்

தேவாரம் = (1) தே + ஆரம்—தேவனுக்குரிய பாமாலை ; (2) தே + வாரம் —தேவனுக்குரிய இசைப்பாடல். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் என்ற சைவ சமய குரவர் பாடிய ஏழாயிரத்துக்கு மேற்பட்ட பாடல்களின் தொகுதியே தேவாரம் என்பது.

கீழ்வரும் பாடல் சுந்தரர் தேவாரத்தில் உள்ளது. இவர் காலம் கி. பி. 9-ஆம் நூற்றுண்டு ; ஊர் - திருநாவலூர்.

பொன்னலங் கழனிப் புதுவிரை மருவிப்
பொறிவரி வண்டிசை பாட
அந்நலங் கமலத் தவிசின்மேல் உறங்கும்
அலவன்வந் துலவிட அள்ளல்
செந்நலங் கழனி சூழ்திரு முல்லை
வாயிலாய் ! திருப்புகழ் விருப்பால்
பன்னலந் தமிழாற் பாடுவேற் கருளாய்
பாசுப தா ! பரஞ் சுடரே !

அருஞ்சொற்பொருள்

திருமுல்லைவாயில் - வடதிருமுல்லைவாயில் ; சென்னைக்கு வடமேற்கில் 13 கல் தொலைவில் உள்ளது. கழனி - வயல். விரை - வாசனை. பொறி - புள்ளி. தவிசு - ஆசனம். அலவன் - நண்டு. அள்ளல் - சேறு. பாசுபதா - பாசுபதம் என்னும் அம்பினை உடையவனே. பரம் - மேலான. பொன் னலம் = பொன் + நலம். அந்நலம் = அ + நலம். செந்நெல் = செம்மை + நெல். பாடுவோற்கு = பாடுவோன் + கு.

## (2) நாலாயிர திவ்வியப் பிரபந்தம்

ஆழ்வார் பன்னிருவர் பாடிய 4000 பாக்களின் தொகுதியே நாலாயிர திவ்வியப் பிரபந்தம். கீழ்வரும் செய்யுளைப் பாடியவர் சேர மன்னராயிருந்த குலசேகராழ்வார் ; கி. பி. 8 அல்லது 9-ஆம் நூற்றுண்டினர் ; ஊர் திருவஞ்சைக்களம்.

ஒண்பவள வேலை உலவுதண் பாற்கடலுள்
கண்துயிலும் மாயோன் கழலிணைகள் காண்பதற்குப்
பண்பகரும் வண்டினங்கள் பண்பாடும் வேங்கடத்துச்
செண்பகமாய் நிற்கும் திருவுடையேன் ஆவேனே.

அருஞ்சொற்பொருள்

ஒண்பவளம் = ஒள் + பவளம் - ஒளிபொருந்திய பவளம். வேலை - கடல். தண் - குளிர்ந்த. கழல் - வீரச்சதங்கை ; இங்கு இது கட்டப்பெற்ற தாளுக்குப் பெயராயிற்று. திரு - பாக்கியம்.

## (3) சீருப் புராணம்

சீரு என்பது 'ஸீரத்' என்னும் அரபி மொழியின் திரிபு ; 'வாழ்க்கை வரலாறு' என்பது இதன் பொருள். இது நபி நாயகத்தின் வரலாற்றைக் கூறுவது. இதனைப் பாடியவர் உமறுப் புலவர் ; கி. பி. 17-ஆம் நூற்றுண்டினர் ; எட்டயபுரத்தினர்.

சிறந்தமெய்ப் பொருளை அழிவிலா மணியைத்
தெரிந்துமுக் காலமும் உணர்ந்து
துறந்தவர் இதயா சனத்திருந் தவனைத்
தொடரின்ப துன்பமற் றவனைப்
பிறந்தபல் உயிரின் மனத்தள வுறைந்து
பிறப்பிறப் பென்றிலா தவனை
மறந்தவர் சுவர்க்கப் பதியையும் மறந்து
மண்ணினில் மதிமறந் தவரே.

அருஞ்சொற்பொருள்

இதயாசனம் = இதய + ஆசனம் - மனமாகிய இடம். உறைந்து - வாழ்ந்து. பதி - ஊர். மதி - அறிவு.

## (4) இரட்சணிய யாத்திரிகம்

இரட்சணியத்தை அடைய விரும்பிய ஆன்மாவின் மோட்ச யாத்திரையைப்பற்றிய நூல். இது கிறித்துவக் காவியம். இதன் ஆசிரியர் H. A. கிருஷ்ண பிள்ளை ; கி. பி. 19-ஆம் நூற்றுண்டினர் ; திருநெல்வேலிப் பதியினர்.

அகில லோகம் படைத்தளித் தன்பினுல்
சகல மன்னுயி ருங்கதி சார்ந்துய

மகவை நல்கிய மாண்புறு தாதையாம்
பகவ னுக்கித யாஞ்சலி பண்ணுவாம்.

அருஞ்சொற்பொருள்

கதிசார்ந்து - நன்மை பெற்று. உய=உய்ய - பிழைக்க. மகவை - ஏசுநாதரை. நல்கிய - உலகிற்குக் கொடுத்த. தாதை - தகப்பன். பகவன் - கடவுள். இதயாஞ்சலி=இதய+அஞ்சலி - மன வணக்கம்.

## 2. தமிழ்த்தாய் வாழ்த்து

கீழ்வரும் செய்யுளின் ஆசிரியர் கரந்தைக் கவியரசு அரங்க வேங்கடாசலம் பிள்ளை என்பவர்; சிறந்த புலவர்; உரையாசிரியர்; நூலாசிரியர்; தஞ்சையில் வாழ்கின்ற பெரியார்.

வானார்ந்த பொதியின்மிசை வளர்கின்ற மதியே!
மன்னியமூ வேந்தர்கடம் மடிவளர்ந்த மகளே!
தேனார்ந்த தீஞ்சுனைசால் திருமாலின் குன்றம்
தென்குமரி ஆயிடைநற் செங்கோல்கொள் செல்வி!
கானார்ந்த தேனே! கற் கண்டே! நற் கனியே!
கண்ணே! கண் மணியே! அக் கட்புலஞ்சேர் தேவி!
ஆனாத நூற்கடலை அளித்தருளும் அமிழ்தே!
அம்மே! நின் சீர்முழுதும் அறைதல்யார்க் கெளிதே!

அருஞ்சொற்பொருள்

ஆர்ந்த - பொருந்திய. பொதியில் - பொதிகைமலை. மிசை - மேலே. வேந்தர்கடம்=வேந்தர்கள்+தம். சால் - பொருந்திய. கட்புலம்=கண்+புலம். ஆனாத - குறையாத. அறைதல் - சொல்லுதல்.

கேள்விகள்

1. திருமுல்லைவாயிலின் சிறப்பு யாது?
2. ஆழ்வார் வேண்டுவது யாது? அவர் வேண்டக் காரணம் என்ன?
3. உமறுப் புலவர் இறைவனை எவ்வெவ்வாறு கூறியுள்ளார்?
4. பகவன் மகவை நல்கியதற்குக் காரணம் யாது?
5. ஆசிரியர் தமிழ்த்தாயை எவ்வாறு சிறப்பித்துள்ளார்?

பயிற்சி

1. பிரித்துக் காட்டுக:—செங்கோல், நற்கனி, கட்புலம், பரஞ்சுடர், வண்டினங்கள், திருவுடையேன்.

2. எதிர்ச்சொல் கூறுக:—உறங்கும், விருப்பு, அகம், இன்பம், மெய்ப்பொருள், பிறப்பு.

3. வாக்கியங்களில் பயன்படுத்துக:—கமலத்தவிசு, திருப்புகழ், பரஞ்சுடர், திருவுடையேன், மன்னுயிர், மாண்புறு.

# II. அறவுரை

## 1. நான்மணிக்கடிகை

நான்கு + மணி + கடிகை = நான்மணிக்கடிகை. நான்கு வகை மணிகள் இழைத்துச் செய்யப்பட்ட ஆபரணம் என்பது பொருள். இந்நூலின் ஒவ்வொரு செய்யுளிலும் நந்நான்கு கருத்துக்கள் அமைந்துள்ளன. அவை நான்கு மணிகளைப் போன்றவை. ஆசிரியர் - விளம்பி நாகனார். சமயம் - வைணவம். இவர் காலம் 5 அல்லது 6-ஆம் நூற்றாண்டு என அறிஞர் கூறுவர்.

மணிநலம் முதலியன அறியும் காலம்

மண்ணி யறிப மணிநலம் ; பண்ணமைத்(து)
ஏறிய பின்னறிப மாநலம் மாசறச்
சுட்டறிப பொன்னின் நலங்காண்பார் ; கெட்டறிப
கேளிரா னுய பயன். (1)

செல்வத்தின் சிறப்பு

கல்லிற் பிறக்குங் கதிர்மணி ; காதலி
சொல்லிற் பிறக்கும் உயர்மதம் ;—மெல்லென்(று)
அருளிற் பிறக்கும் அறநெறி ; எல்லாம்
பொருளிற் பிறந்து விடும். (2)

நல்லொழுக்கம் முதலியன

திருவொக்குந் தீதில் ஒழுக்கம் ; பெரிய
அறனெக்கும் ஆற்றின் ஒழுகல் ; பிறனைக்
கொலையொக்குங் கொண்டுகண் மாறல் ; புலையொக்கும்
போற்றுதார் முன்னர்ச் செலவு. (3)

ஆக்கமும் கேடும்

மனைக்காக்கம் மாண்ட மகளிர் ; ஒருவன்
வினைக்காக்கஞ் செவ்விய னுதல் ;—சினச்செவ்வேல்
நாட்டாக்கம் நல்லனிவ் வேந்தென்றல் ; கேட்டாக்கம்
கேளிர் ஒரீஇ விடல். (4)

வலி முதலியவற்றைச் சிதைப்பவை

மொய்சிதைக்கும் ஒற்றுமை யின்மை ; ஒருவனைப்
பொய்சிதைக்கும் பொன்போலு மேனியைப் ;—பெய்த
கலஞ்சிதைக்கும் பாலின் சுவையைக் குலஞ்சிதைக்குங்
கூடார்கட் கூடி விடின். (5)

## அருஞ்சொற்பொருள்

1. மண்ணி - கழுவி. மா - குதிரை. பண் - சேணம். பொன்னின் நலம் - பொன்னின் மாற்று. சுட்டு - உருக்கி. கேளிர் - சுற்றத்தார். கெட்டு - செல்வத்தை இழந்து. அறிப - அறிவார், பலர்பால் வினை முற்று. கேளிர் - கேண்மை என்னும் பண்படியாகப் பிறந்த பெயர்.

2. கல் - மலை. உயர் மதம் - மிகு இன்பம். அறநெறி - அறவழிகள். அருளில் - கருணையிடத்து. எல்லாம் - அறம், இன்பம் முதலிய எல்லாம். அறநெறி × மறநெறி.

3. திரு - செல்வம். ஆற்றின் ஒழுகல் - முறைப்படி நடத்தல். கொண்டு கண்மாறல் - முதலில் நட்பாகக் கொண்டு பின்பு மாறிப் புறங் கூறுதல். போற்றுதார் - தம்மை மதியாதவர். புலை - இழிவான செயல். நல்லொழுக்கம் செல்வத்திற்குச் சமம் எனக் கொள்ளல் வேண்டும். அறன் - அறச் செயல். ஆறு + இன் = ஆற்றின்; ஒற்று இரட்டித்து வந்தது. செலவு - தொழிற் பெயர்.

4. மாண்ட - நற்குண நற்செய்கைகளால் மாட்சிமைப்பட்ட. சினம் செவ்வேல் - சினத்திற் செலுத்தப்படும் வேல். வினை - போர்வினை. நாட்டு ஆக்கம் - நாட்டுக்கு உயர்வு. ஒரீஇ = ஒருவி, நீங்கி, அளபெடை. ஆக்கம் - தொழிற் பெயர்.

5. மொய் - வலிமை. பொய் - பொய்மையான (தவறுன) ஒழுக்கம். கலம் - பாத்திரம். கூடார்கண் - கூடத் தகுதியில்லாதவரிடத்து. சிதைக்கும் - அழிக்கும். கூடார் - கூடாதவர்; வினையாலணையும் பெயர்.

## கேள்விகள்

1. மணி, குதிரை, பொன், சுற்றத்தார் என்னும் இவற்றின் இயல்பினை எவ்வாறு அறிதல் வேண்டும்?

2. 'எல்லாம் பொருளிற் பிறந்துவிடும்'—இங்கு 'எல்லாம்' எனப்பட்டவை எவை?

3. திரு, அறன், கொலை, புலை—இவற்றைப் போன்றவை எவை?

4. மனைக்கும், போர்வினைக்கும், நாட்டுக்கும், ஒருவனுடைய கேட்டுக்கும் ஆக்கம் தருவன எவை?

5. ஒற்றுமையின்மையும், பொய்யும், குற்றமுடைய பாத்திரமும், கூடாருடைய நட்பும் எவற்றை அழிக்கும்?

## பயிற்சி

1. காண்பார் - பலர்பால் வினைமுற்று. இவ்வாறு வரும் பலர்பால் வினைமுற்றுக்களை இவ்வைந்து செய்யுட்களிலிருந்தும் எடுத்துக் காட்டுக.

2. செலவு—செல் + அ + உ. தல், அல், அம், ஐ, கை, வை, பு, கு, சி, வி, தி, உள், காடு, பாடு, மை, து—இவை தொழிற்பெயர் விகுதிகள். ஒழுகல் - தொழிற்பெயர்; ஒழுகு + அல். இப்பாடல்களில் வரும் தொழிற்பெயர்களை எடுத்து எழுதுக.

3. செவ்வேல் = செம்மை + வேல்.

வெந்நீர் = (வெம்மை + நீர்), தண்ணீர் (தண்மை + நீர்), நன்னீர் (நன்மை + நீர்); வெம்மை, தண்மை, நன்மை என வருவன மையீற்றுப் பண்புப் பெயர்கள். இவை போன்ற நான்கு பண்புப் பெயர்களைக் கூறுக.

## 2. திருக்குறள்

திரு + குறள் = திருக்குறள். குறள் வெண்பாக்களால் இயற்றப்பெற்ற நூலாதலின், குறள் என்னும் பெயர் நூலுக்கு அமைந்தது. இஃது அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று பொருள்களைப் பற்றி விளக்கமாகச் கூறும் நூல்.

இந்நூல் சாதி, சமய வேறுபாடு இன்றி அனைவரும் போற்றும் சிறந்த கருத்துக்கள் நிறைந்த நூல்; ஆங்கிலம் முதலிய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இதன் ஆசிரியர் திருவள்ளுவர். இவரது காலம் ஏறக்குறைய 1800 ஆண்டுகட்கு முன் என்னலாம். ஊர் - திரு மயிலை.

### அறன் வலியுறுத்தல்

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற. (1)

அழுக்கா றவாவெகுளி யின்னுச்சொல் நான்கும்
இழுக்கா இயன்ற தறம். (2)

### இல்வாழ்க்கை

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது. (3)

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப் படும். (4)

### வாழ்க்கைத் துணை நலம்

மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை. (5)

இல்லதென் இல்லவள் மாண்பானுல் உள்ளதென்
இல்லவள் மாணுக் கடை. (6)

### புதல்வரைப் பெறுதல்

தந்தை மகற்காற்று நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல். (7)

மகன்றந்தைக் காற்றும் உதவி இவன்றந்தை
என்னேற்ருன் கொல்லெனுஞ் சொல். (8)

### அன்புடைமை

அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு. (9)

அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை. (10)

### விருந்தோம்பல்

உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு. (11)

மோப்பக் குழையும் அனிச்சம் ; முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து. (12)

### இனியவை கூறல்

இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது. (13)

இனிய வுளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று. (14)

### செய்ந்நன்றியறிதல்

காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது. (15)

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு. (16)

### நடுவுநிலைமை

கெடுவல்யான் என்ப தறிகதன் னெஞ்சம்
நடுவொரீஇ யல்ல செயின். (17)

சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி. (18)

### அடக்கமுடைமை

காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
அதனினூங் கில்லை உயிர்க்கு. (19)

யாகாவா ராயினும் நாகாக்க ; காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. (20)

### அருஞ்சொற்பொருள்

1. அறன் வலியுறுத்தல் - அறத்தின் பெருமையை வற்புறுத்திக் கூறுதல். மாசு - குற்றம். ஆதல் - ஆகுக. அனைத்து அறன் - அவ்வளவே அறம் எனப்படுவது. ஆகுலம் - ஆரவாரம். நீர - தன்மையுடையன ; பலவின்பால் வினைமுற்று.

2. அழுக்காறு - பொறாமை. அவா - பொருள்கள்மேற் செல்லும் பெருவிருப்பம். இழுக்கா - நீக்கி. நான்கும் - 'உம்' - முற்றும்மை.

3. இல்வாழ்க்கை - மனையாளோடு கூடி வாழும் வாழ்க்கை. அன்பு- மனைவி முதலானவரிடத்துக் கொள்ளும் அன்பு. அறன் - பிறர்க்குப் பகுத்துக் கொடுத்தலாகிய அறம். அன்புடைமை பண்பு ; அறனுடைமை பயன். அன்பும் அறனும் - 'உம்' எண்ணி வருதலால் எண் உம்மை எனப்படும். பண்பும் பயனும் - எண்ணும்மை.

4. வையம் - இவ்வுலகம், வாழ்வாங்கு - வாழவேண்டிய முறையின் படி. தெய்வத்துள் வைக்கப்படும் - தேவருள் ஒருவனாக மதிக்கப்படுவான். வாழ்பவன் - வினையாலணையும் பெயர். (வாழ்பவன்) வைக்கப்படும் - 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைமுற்று ஆண்பாலுக்கு வந்தது.

5. வாழ்க்கைத் துணை நலம் - இல்வாழ்க்கைத் துணையாகிய மனையாளின் சிறப்பு. துணை = துணைவி. மாண்பு - நற்குண நற்செய்கைகள். தன்கொண்டான் - தன்னை மணஞ் செய்துகொண்ட கணவன். வளம் - வருவாயாகிய செல்வம். தக்காள் - தக்கபடி நடப்பவள். தன் + கொண்டான் = தற்கொண்டான். கொண்டான், தக்காள் - வினையாலணையும் பெயர்கள்.

6. மாண்பு ஆனல் - நற்குண நற்செய்கை உடையவளான போது. மாணுக்கடை - நற்குண நற்செய்கை இல்லாளாயின். இல்லவள் - மனைவி.

7. புதல்வர் - நன்மக்கள். மகற்கு - மகனுக்கு. முந்தியிருப்ப - கற்றோர் பாராட்டும் வண்ணம் சிறந்த இடத்தில் இருக்கும்படி. நன்றி - நன்மை. மகன் + கு = மகற்கு. செயல் - தொழிற் பெயர்.

8. என் நோற்றான் கொல் - 'இச்சிறந்த பிள்ளையைப் பெறுவதற்கு என்ன தவம் செய்தானோ ?'; எனும் சொல் - என்ற சொல்லை நிலைநிறுத்துதலாம். ஆற்றும் (உதவி) - பெயரெச்சம்.

9. அன்புடைமை - அன்புடையவனாய் இருத்தல். தமக்கு உரியர் - தமக்கு மட்டுமே பயன்படுவர். என்பு - எலும்பு. அன்பிலார் - எதிர்மறை வினையாலணையும் பெயர். உரியர் - பலர்பால் வினைமுற்று.

10. அன்பு சார்பு - அன்பு துணையாவது. மறத்திற்கும் அஃதே துணை - பாவத்தைச் செய்யாது நீக்குதற்கும் அவ்வன்பே துணையாகும். என்ப - பலர்பால் வினைமுற்று. அறியார் - எதிர்மறை வினையாலணையும் பெயர்.

11. விருந்து ஓம்பல் - விருந்தினரைப் போற்றுதல். உடைமையுள் இன்மை - உடைமைக் காலத்து வறுமை. ஓம்பா-பாதுகாவாது நீக்குகின்ற, இகழ்கின்ற; ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். மடவார் - அறியாதவர். ஓம்பல் - தொழிற்பெயர். உடைமை × இன்மை.

12. அனிச்சம் - அனிச்சமலர். மோப்ப - மோந்தபோது. முகம் திரிந்து - முகம் மாறுபட்டு. விருந்து - விருந்தினர், பண்பாகு பெயர். மோப்ப, நோக்க - வினையெச்சங்கள்.

13. இனியவை கூறல் - இன்மொழிகளைப் பேசுதல். இனிது ஈன்றல் - இனிமை பயத்தலை. காண்பான் - அறிகின்றவன். எவன்கொல் - என்ன காரணம். வன்சொல் - கடுஞ்சொல். இன்சொல் × வன்சொல்.

14. இனிய - இனிய சொற்கள். கவர்ந்த அற்று - அருந்தியதற்கு ஒப்பாகும். இனிய × இன்னுத. கனி × காய்—முரண்தொடை.

15. செய்ந்நன்றியறிதல் - தனக்குப் பிறர் செய்த நன்றியை மறவாதிருத்தல். காலத்தினுல் - ஆபத்துக் காலத்தில். ஞாலம் - பூமி. மாண - மிக. காலத்தினுல்—காலத்தில் = வேற்றுமை மயக்கம்.

16. எந்நன்றி - எத்தகைய அறங்கள். கொன்றுர் - அழித்தவர், வினையாலணையும் பெயர். செய்ந்நன்றி கொல்லுதல்- செய்த நன்றியை மறத்தல். உய்வு - பாவத்தினின்றும் நீங்கும் வழி. கொன்றுர்க்கும் - உம், இழிவு சிறப்பும்மை. உண்டு × இல்லை. உய்வு + உண்டாம் = உய்வுண்டாம்.

17. நடுவுநிலைமை - அறத்தினின்றும் தவருது, பகைவர், நண்பர், அயலார் என்னும் முத்திறத்தாரிடத்தும் சமமாக நிற்கும் நிலை. கெடுவல்- கெடுவேன், தன்மை ஒருமை வினைமுற்று. நடுவு ஒரீஇ - நடுவுநிலைமையினின்றும் நீங்கி. ஒரீஇ - சொல்லிசை அளபெடை. அல்ல செயின் - நடு அல்லவற்றைச் செய்ய நினைக்குமாயின். அறிக - வியங்கோள் வினை முற்று.

18. சமன் செய்து - சமனுக நின்று. சீர்தூக்கும் - தன்கண் வைத்த பொருளின் எடையை வரையறுக்கும். கோல் - தராசுக்கோல். அமைந்து- நடுவாக நின்று. பால் - பக்கம். கோடாமை - சாராமை, எதிர்மறைத் தொழிற் பெயர். சான்றேர் - கல்வி, கேள்வி, ஒழுக்கம் நிறைந்த பெரியவர்.

19. அடக்கம் உடைமை - மனம் தீநெறியில் செல்லாது அடங்குதல் உடையனுதல். உயிர்க்கு - மக்களுக்கு. அதனின் - அடக்கத்தைக் காட்டிலும். ஊங்கு - மேலானது. இல்லை - வேறு இல்லை. காக்க - வியங்கோள் வினைமுற்று.

20. யா - நா ஒழிந்த பிற பொறிகள். காவாக்கால் - காவாது இருப்பராயின். சொல் இழுக்கு - சொற்குற்றம். சோகாப்பர் - வருந்துவர்.

### கேள்விகள்

1. அறன் எனப்படுவது யாது? எவை ஆடம்பரமான தன்மையுடையவை?

2. 'நான்கும் இழுக்கா இயன்றது அறம்'—இங்கு 'நான்கு' எனப் பட்டவை எவை ?

3. இல்வாழ்க்கைக்குப் பண்பும் பயனுமாக இருப்பன எவை ?

4. வானுறையும் தேவருள் ஒருவனுக மதிக்கப்படுபவன் எவன் ?

5. வாழ்க்கைத் துணைவி எப்பண்புகளை யுடையவளாக இருத்தல் வேண்டும் ?

6. மாட்சியுடைய இல்லவள் இருக்கும் வீட்டுக்கும், மாட்சியில்லாத மனைவி இருக்கும் வீட்டுக்கும் உள்ள வேறுபாடுகள் எவை ?

7. தந்தை தன் மகனுக்குச் செய்ய வேண்டும் உதவி யாது ?

8. மகன் தன் தந்தைக்குச் செய்ய வேண்டும் உதவி யாது ?

9. அன்புடையாருக்கும் அன்பில்லாதவருக்கும் உள்ள வேறுபாடுகள் எவை ?

10. அன்பு அறத்திற்கும், பாவத்திற்கும் எவ்வாறு துணையாகும் ?

11. செல்வம் உடைய காலத்து வறுமை என்பது யாது ?

12. அனிச்ச மலர் கூறப்பட்டுள்ள சந்தர்ப்பம் யாது ?

13. வன்சொல் கூறுவோர் எதனை அறியார் ?

14. கனி இருக்கக் காயை அருந்துதல் எதற்கு உவமையாக வந்தது ?

15. பூமியைக் காட்டினும் மிகவும் பெரியது எது ?

16. யாருக்கு உய்வு உண்டு ? யாருக்கு உய்வு இல்லை ?

17. நடுவுநிலைமையினின்றும் தவறுவோன் எதனை அறிதல் வேண்டும் ?

18. தராசுக்கோல் நடுவுநிலையாளருக்கு எவ்வாறு உவமையாகும் ?

19. அடக்கத்தைப் பொருளாகக் காக்க வேண்டும்.—ஏன் ?

20. நா அடக்கம் இல்லாதவர் எத்தீங்கினை எய்துவர் ?

## பயிற்சி

1. பிரித்துக் காட்டுக :—மனத்துக்கண், இன்னுச்சொல், வானுறையும், தற்கொண்டான், இல்லவள், மகன்றந்தை, என்னேற்றுன், தமக்குரியர், அறத்திற்கு.

2. இங்கு வந்துள்ள பத்து அதிகாரங்களின் தலைப்புக்களும் நமது வாழ்க்கைக்கு இன்றியமையாதவை என்பதை விளக்குக.

3. இக் குறட்பாக்களிலிருந்து பெயரெச்சம், வினையெச்சம், வினைமுற்று, வினையாலணையும் பெயர்-இவற்றுக்கு ஒவ்வோர் உதாரணம் தருக.

4. வாக்கியங்களில் அமைத்து எழுதுக :—இன்னுச்சொல், அன்பும் அறனும், வளம், மாண்பு, அவையத்து, நோற்றுன், என்பும், விருந்து, ஞாலம், கோடாமை, நாகாக்க, காவாக்கால், சொல்லிழுக்கு.

## 3. சோமேசர் முதுமொழி வெண்பா

சோமேசர் - சோமசுந்தரக் கடவுள். முதுமை + மொழி = முதுமொழி. திருக்குறளைப் பின் இரண்டு அடிகளாகவும், அதனை விளக்கும் கதைப் பகுதி முன் இரண்டு அடிகளாகவும் பொருந்தச் சோமசுந்தரக் கடவுள்மீது இயற்றப்பட்டது இந்த நூல். இந்நூலின் ஆசிரியர் சிவஞான யோகிகள். அவர் திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த துறவி. இலக்கிய நூல்களையும், இலக்கண நூல்களின் உரைகளையும் எழுதிச் சிறப்புப் பெற்றவர் ; 18-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்தவர்.

அன்புடைமை

தோன்று வகைகரந்துந் தோன்றலைக்கண் டுண்ணெகிழ்ந்து
தோன்றநின்ருன் முன்புநளன் சோமேசா—தோன்றுகின்ற
அன்பிற்கு முண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும். (1)

விருந்தோம்பல்

பொன்னனையாள் அன்பருக்கே போனகமீந் துன்னருளாற்
சொன்னமிகப் பெற்ருளே சோமேசா—பன்னில்
வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று. (2)

புறங்கூருமை

கூனியிரா மன்பிரிந்து போமாறே கூறினளே
தூநறும்பூங் கொன்றையணி சோமேசா—தானே
பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாடல் தேற்ரு தவர். (3)

வெகுளாமை

பல்லவர்கோன் வந்து பணியக் கருணைசெய்தார்
தொல்லைநெறி வாகீசர் சோமேசா—கொல்ல
இணரெரி தோய்வன்ன இன்னு செயினும்
புணரின் வெகுளாமை நன்று. (4)

ஒழுக்கமுடைமை

தீயனவே சொல்லும் சிசுபாலன் முன்புகண்ணன்
தூயதலாச் சொல்லுரையான் சோமேசா—வாயின்
ஒழுக்கம் உடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல். (5)

### அருஞ்சொற்பொருள்

1. தோன்று வகை - தோன்றுதிருக்கும்படி. கரந்தும் - மறைந்தும். தோன்றல் - மகன். ஆர்வலர் - அன்பு உடையார். பூசல் தரும் - எல்லோரும் அறியும்படி தூற்றும். கண்ணீர் என்பது 'கணீர்' என இடைக் குறைந்து நின்றது. உள் + நெகிழ்ந்து = உண்ணெகிழ்ந்து. சோமேசன் - முதல் வேற்றுமை. சோமேசா - எட்டாம் வேற்றுமை.

2. போனகம் - உணவு. சொன்னம் - பொன். வைகலும் - நாடோறும். பருவந்து - வறுமையால் வருந்தி. உன் + அருள் = உன்னருள். ஓம்புவான் - வினையாலணையும் பெயர். இன்று - இல்லை ; ஒன்றன்பால் குறிப்பு வினைமுற்று.

3. பக - பிரிந்து போகும்படி. கேளிர் - உறவினர். நட்பு ஆடல்- நட்புக் கொள்ளுதல். பூ + கொன்றை = பூங்கொன்றை. தேறு - தன்வினை. தேற்று - பிறவினை.

4. பல்லவர்கோன் - மகேந்திர பல்லவன். வாகீசர் - திருநாவுக்கரசர். எரி - நெருப்பு. இணர் - பலசுடர். புணரின் - இயலுமானல். வெகுளாமை - எதிர்மறைத் தொழிற் பெயர்.

5. வழுக்கியும் - மறந்தும் ; தவறியும். ஒல்லா - முடியாவாம். தூயது அலா - தூய்மை அல்லாத, அல்லா என்பது 'அலா' என இடைக் குறைந்து நின்றது. சொலல் - தொழிற் பெயர். சொல் + உரையான் = சொல்லுரையான். தூயது + அலா = தூயதலா.

### கேள்விகள்

1. அன்பினை மறைத்து வைக்க இயலாதென்பது நளன் வரலாற்றிலிருந்து எவ்வாறு அறியப்படுகின்றது ?

2. பொன்னனையாள் வரலாற்றினல் நாம் அறிந்துகொள்ளும் நீதி யாது ?

3. உறவினரைப் பிரித்து வைப்பவர் யாவர் ? எக்காரணத்தால் ?

4. வாகீசர் பல்லவ மன்னனிடம் சினம் கொள்ளாமலிருந்ததற்குக் காரணம் யாது ?

5. சிசுபாலன் தீயசொற்களால் கண்ணனைப் பேசியபோதும், கண்ணன் ஒன்றும் உரையாதிருந்ததன் காரணம் யாது ?

### பயிற்சி

1. வாக்கியங்களிற் பயன்படுத்துக :—தோன்றல், உள்நெகிழ்ந்து, வாழ்க்கை, உன்னருள், போமாறு, கருணை, வெகுளாமை, வழுக்கி.

2. சொல் + உரையான் = சொல் + ( ல் ) + உரையான் = சொல்லுரையான். இதனை நினைவிற்கொண்டு, (1) பொன்னனையாள், (2) உன்னருள் - இவற்றைப் பிரித்து இரட்டித்த எழுத்தைச் சுட்டுக.

3. இப்பகுதியில் வந்துள்ள ஒவ்வொரு வெண்பாவும் குறிப்பிடும் கருத்தினைத் தனித்தனி எழுதுக.

4. இங்கு ஒவ்வொரு வெண்பாவிலும் வந்துள்ள மேற்கோள் கதையைப் பத்து வரிகளில் எழுதுக.

# III. கதை

## 1. ஆசிய ஜோதி

இந்நூல் புத்தர் பெருமான் வரலாற்றைக் கூறுவது. இதன் ஆசிரியர் கவிமணி - தேசிக விநாயகம் பிள்ளை ; சிறந்த நாவலர் ; பாவலர் ; ஆராய்ச்சியாளர். இவர் இப்பொழுதும் தமிழ்த்தொண்டு செய்துவருகிறார் ; ஊர் - நாஞ்சில் நாட்டில் உள்ள தேரூர்.

### புத்தரும் பிம்பிசாரனும்

[பிம்பிசாரன் செய்ய இருந்த யாகத்தில் பல ஆடுகளைப் பலியிட விரும்பினான். அதனை அறிந்த புத்தர் அவனுக்கு அறவுரை கூறி, நல்வழிப்படுத்திய வரலாற்றைக் கூறும் பகுதி இது.]

காலிலே கட்டிய கட்டவிழ்த்தான் ;—அதன்
கண்டம் இறுக்கிய கட்டவிழ்த்தான் ;
வாலிலே கட்டிய கட்டவிழ்த்தான் ;—அதன்
வாயினிற் கட்டும் அவிழ்த்துவிட்டான். (1)

புத்தர் அறவுரை கூறுதல்

வாழும் உயிரினை வாங்கிவிடல்—இந்த
மண்ணில் எவர்க்கும் எளிதாகும் ;
வீழும் உடலை எழுப்புதலோ—ஒரு
வேந்தன் நினைக்கினும் ஆகாதையா. (2)

ஆட்டின் கழுத்தை அறுத்துப் பொசுக்கிநீர்
ஆக்கிய யாகத் தவியுணவை
ஈட்டும் கருணை இறையவர் கைகளில்
ஏந்திப் புசிப்பரோ ? கூறுமையா. (3)

மைந்தருள் ஊமை மகனை ஒருமகன்
வாளால் அரிந்து கறிசமைத்தால்,
தந்தையும் உண்டு களிப்பதுண்டோ ?—இதைச்
சற்றுநீர் யோசித்துப் பாருமையா ! (4)

மண்ணில் வளர்ந்திடும் புல்லையுண்ணும்—வான
மாரி பொழிந்திடும் நீரையுண்ணும்;
எண்ணிநீர் செய்யும் உதவியென்னும்—இதை
ஏனோ உணர்ந்திலீர் மானிடரே! (5)

ஆயிரம் பாவங்கள் செய்தவெல்லாம்—ஏழை
ஆட்டின் தலையோ டகன்றிடுமோ?
தீயவும் நல்லவும் செய்தவரை—விட்டுச்
செல்வ தொருநாளும் இல்லையையா! (6)

கொலை தவிர்தல்

"செய்பிழை யாவும் பொறுத்தருள்வீர்"—எனச்
சேவித்து மன்னனும் தாழ்ந்துநின்றான்;
"ஐயனே நாட்டில் கொலைதவிர்த்து—நாளை
ஆணையும் கட்டுவேன்" என்றுரைத்தான். (7)

அரசன் ஆணை

மன்னுயிர் எல்லாம் தன்னுயிர் போல
நிலமுழு தாளும் நெடுமுடி அண்ணல்
பிம்பி சாரப் பெரும்பெயர் வேந்தன்
மெய்யகங் கண்டிவ் வையகம் உய்ந்திடத்
திருவருள் புரிந்த செய்தி யிதுவாம்:
பாக சாலையில் பக்குவம் செய்தும்
யாக சாலையில் எரிவாய் ஊட்டியும்
பலவா முயிரின் குலவே ரறுத்தல்
பழியும் பாவமும் பயக்கும் செயலாம்
ஆதலின், ஊனை உண்பதும் உயிர்க்கொலை புரிவதும்
இந்நாள் முதல்இந் நன்னாட் டெல்லையில்
இல்லா தொழிக; ஈதெம் ஆணை.
அருளுடை யோர்க்கே அருளும்
உறுதுணை யாமென் றுளங்கொள் வீரே." (8)

## அருஞ்சொற்பொருள்

1. கண்டம் - கழுத்து.
2. மண் - உலகம். வீழும் - இறக்கும்.
3. அவிஉணவு - தேவர்க்காக யாகத்திலிடும் உணவுப் பொருள். ஈட்டும் - நிறைந்த.
4. மாரி - மழை. உணர்ந்திலீர்—முன்னிலைப் பன்மை வினைமுற்று.
5. தீய × நல்ல. பலவின்பாற் பெயர்கள். செய்தவர் - வினையாலணையும் பெயர். ஐயன் - முதல் வேற்றுமை. ஐயா - எட்டாம் வேற்றுமை, ஈறுகெட்டு, ஈற்றயல் நீண்டது.
6. ஆணை - கட்டளை. கட்டுவேன்-பிறப்பிப்பேன்; தன்மையொருமை வினைமுற்று.
7. மன்உயிர் - நிலைபெற்ற உயிர்கள். நெடுமை + முடி = நெடுமுடி - நீண்ட முடி. அண்ணல் - பெருமையை யுடையவன். மெய்யகம் = மெய் + அகம். வையகம் - உலகத்தார். பாகசாலை - சமையல் இடம். எரி வாய் - நெருப்பிடம். நாட்டெல்லை = நாடு + எல்லை. ஒழிக - வியங்கோள் வினைமுற்று.

## கேள்விகள்

1. புத்தர் கூறிய அறவுரைகள் யாவை?
2. அறவுரை கேட்ட பிம்பிசாரன் புத்தரிடம் யாது கூறினான்?
3. பிம்பிசாரன் பிறப்பித்த ஆணை யாது?

## பயிற்சி

1. புத்தர் கூறிய அறவுரையை உங்கள் சொந்த நடையில் அமைத்து எழுதுக.
2. இவ்வறவுரைப் பகுதியை உளங்கொண்டு, ‘உயிர்க் கொலை கூடாது’ என்னும் பொருள்பற்றி 20 வரிகளில் ஒரு கட்டுரை வரைக.
3. இப்பாடப் பகுதியை ஒரு நாடகக் காட்சியாக அமைத்து எழுதுக.
4. பொருள் கூறுக :—களிப்பது—கழிப்பது. கூறும் — கூரும். வாழும் - வாளும். மாரி - மாறி. அறுத்து - அருத்து. பொறுத்து - பொருத்து. ஆனை - ஆணை. மண்ணுயிர் - மன்னுயிர். அரிந்து - அறிந்து. எரி - எறி. வேரறுத்தல் - வேறறுத்தல். ஊன் - ஊண். புல் - புள்.
5. பிரித்துக் காட்டுக :—கட்டவிழ், யாகத்தவியுணவு, களிப்பதுண்டோ, தலையோடகன்றிடுமோ, தன்னுயிர், மெய்யகம், வேரறுத்தல், உயிர்க்கொலை, இந்நாள், இல்லாதொழிக, நாட்டெல்லை.

## 2. இரட்சணிய யாத்திரிகம்

இது ஒரு கிறித்தவக் காப்பியம்; இரட்சணத்தை அடைய விரும்பிய ஆன்மாவின் மோட்ச யாத்திரையைப் பற்றிய நூல். 'ஜான் பன்யன்' என்பவர் ஆங்கிலத்தில் இயற்றிய 'மோட்சப் பிரயாணம்' என்னும் நூலைத் தழுவி இந்நூல் எழுதப்பட்டது. இந்நூல் ஆதிபருவம், குமார பருவம், நிதான பருவம், ஆரணிய பருவம், இரட்சணிய பருவம் என்னும் ஐந்து பருவங்களையுடையது; ஏறத்தாழ 3600-செய்யுட்களைக் கொண்டது. இந் நூற்பாக்கள் சொற்சுவை பொருட்சுவை உடையன.

இந்நூலாசிரியர் H. A. கிருஷ்ண பிள்ளை என்பவர். இவர் 19-ஆம் நூற்றுண்டினர்; திருநெல்வேலியில் கிறித்தவத் தொண்டு செய்தவர். இவர் தம் சமயம்பற்றி வேறு சில நூல்களையும் இயற்றியுள்ளார்.

### சிலுவைப் பாட்டு

#### பகைவர் ஏசுநாதரைக் கொலைக்களம் கொண்டுபோதல்

பொல்லாத யூதர்களும் போர்ச்சே வகர்குழுவும்
வல்லானை யெள்ளிப் புறக்கணித்து வாய்மதமாய்ச்
சொல்லாத நிந்தைமொழி சொல்லித் துணிந்தியற்றும்
பொல்லாங்கை யெல்லாம்நம் ஈசன் பொறுத்திருந்தார். (1)

செவ்வங்கி யைக்களைந்து தேவர்பிரான் முன்தரித்த
அவ்வங்கி யைத்தரித்தே ஆகடியம் பலபேசித்
தெவ்வர் குழுமிச் சிலுவைதனைச் சுமத்திக்
கவ்வை நகர்கலுழக் கட்டிக் கொடுபோனுர். (2)

நோக்கிலனு வொவ்வொன்று நூரு யிரங்கோடி
மாக்கயத்தின் சும்மை மலிந்தபா வந்திரட்டி
ஆக்கு சிலுவை அமலன் சிரத்தேந்திக்
காக்கை கடனுகக் கல்வாரி நோக்கினுர். (3)

#### மக்கள் மனத்தளர்ச்சி

கையயர்ந்து வாய்புலர்ந்து கண்ணிருண்டு காதடைந்து
வெய்ய சிலுவை சுமந்தலசி மெய்வருந்தித்
துய்ய திருவடிகள் சோர்ந்துநடை தள்ளாடி
அய்யன்மறு கூடுவரக் கண்டார் அணிநகரார். (4)

கல்லியல்வன் னெஞ்சவஞ்சக் கண்ணிலாப் பாதகராம்
புல்லியரே அன்றியிந்தப் பொல்லாங்கு போந்தவைகண்(டு)
எல்லவருந் தத்தம் உயிர்க்கிறுதி ஏய்ந்தனபோல்
அல்லல் உழந்தலமந் தாக்கை நிலைதளர்ந்தார். (5)

### மாதர் மன நெகிழ்ச்சி

மாதருக்குள் ஆசிபெற்ற மங்கலையாம் அன்னைமரி
காதலனுக் கோவிக் கதிநேர்ந்த தென்றுமன
வேதனைப்பட் டாற்றுது மெல்லியலார் தாங்குழுமி
வீதி இருமருங்கும் மொய்த்தார்வாய் விட்டழுது. (6)
தீயடைந்த வல்லியெனத் தேம்பிச் செயலழிந்தும்
மாயும்வகை யின்றுய் மறுகுற் றுயிர்பதைப்பப்
போயடைந்த தெம்மருங்கும் பொற்பெருச லேநகரத்(து)
ஆயிழையார் வாய்விட் டழுத குரலோசை. (7)
பெண்டிரெலாம் அழுதரற்றப் பிள்ளைகளெ லாங்கதறக்
கண்டுகேட் டவரிரங்கிக் கரைந்துருகிக் கருத்தழிய
மண்டுதுயர் எனுந்தீயால் வயிறெரியக் கடிநகரம்
பண்டெரிவீழ்ந் தழிசோதோம் பதிபோலப் பதைத்தேங்க. (8)

### உடன் சென்ருர் துயரநிலை

குழனூலிற் பிரியாத குருத்துவமா ரருட்சீடர்
அழலனைய துயர்நலிய அழுதுகரந் துடன்செல்லப்
பழுதறுமெய்ப் பரம்பொருளை மகவாக்கொள் பசுந்தோகை
தழலிடுபூங் கொடியேபோற் சாம்பியுயிர் தளர்ந்தேக. (9)

### கொலைக்களத்தில் ஏசுநாதர்

இப்பரிசு பெருந்துக்கக் குறிமல்கி எவ்வுயிருஞ்
செப்பரிய துயருழப்பச் செருசலையைப் புறம்போக்கி
ஒப்பரிய முதுமூலத் தொருபொருளைக் கொண்டுய்த்தார்
மைப்படுவன் மனக்கொலைஞர் வதைபுரிவான் கொலைக்களத்தில்.(10)

### சிலுவையில் அறைதல்

ஈண்டினியான் புகல்வதெவன் எம்பெருமான் றிருமேனி
தீண்டினுர் சிலுவையொடு சேர்த்தினுர் செங்கையிலுங்
காண்டகுசே வடியிலும்வெவ் விருப்பாணி கடாவினுர்
நீண்டசிலு வையையெடுத்து நிறுத்தினுர் நிலங்கீண்டு. (11)

மற்றிரண்டு திருடரையும் வலப்புறத்தும் இடப்புறத்துஞ்
செற்றமொடு குருசேற்றிக் கொலைமாக்கள் செயலொழியாச்
செற்றமறைத் திருவசனந் துலக்கமுறச் சுருதிமுதல்
குற்றவா ளிகளோடு நடுநின்ருர் குருசுமிசை. (12)

ஏசுநாதர் இறைவனை வேண்டுதல்

தன்னரிய திருமேனி சதைப்புண்டு தவிப்பெய்திப்
பன்னரிய பலபாடு படும்போதும் பரிந்தெந்தாய்
இன்னதென அறிகில்லார் தாஞ்செய்வ திவர்பிழையை
மன்னியுமென் றெழிற்கனிவாய் மலர்ந்தார்நம்
அருள்வள்ளல். (13)

உண்மைக் கிறிஸ்தவர்

இத்தகைய அரும்பொறையும் மனநலமும் இயைந்தவரே
வித்தகனுக் கடித்தொழும்பர் எனத்தகுமெய்க் கிறிஸ்தவர்மற்(று)
இத்தகைய குணமிலருங் கிறிஸ்தவரென் றிசைபெறுதல்
செத்தவரைத் துஞ்சினவர் எனவுரைக்குஞ் சீர்மைத்தால்.(14)

அருஞ்சொற்பொருள்

1. யூதர் - ஏசுநாதர்க்கு மாருன சமயக் கொள்கையுடையவர். வல்லானை - ஏசுநாதரை. ஈசன் - ஏசுநாதர்.

2. ஆகடியம் - பரிகாச வார்த்தை. தெவ்வர் - பகைவர். குழுமி - கூடி. கவ்வை - ஒலி. கலுழ - அழுதுபுலம்ப.

3. மாக்கயம் = மா + கயம் - பெரிய யானை. காக்கை - உயிர்களைக் காத்தல். கல்வாரி - கொலைக்களத்தின் பெயர்.

4. புலர்ந்து - காய்ந்து. மறுகூடு - தெருநடுவே.

5. கல்லியல் = கல் + இயல். கண் - தாட்சண்யம். புல்லியர் - அற்பர். ஏய்ந்தன - அடைந்தன. அலமந்து - வருந்தி. ஆக்கை - உடல்.

6. மங்கலை - மங்கலம் உடையவள். காதலன் - மகன். மெல்லியலார்- பெண்கள்.

7. ஆயிழை = ஆய் + இழை ; ஆராய்ந்த ஆபரணம்.

8. அரற்ற - புலம்ப. மண்டு - நெருங்கிய. கடிநகரம் - காவல் பொருந்திய நகரம். கடி—உரிச்சொல். பதி - ஊர்.

9. குழல் நூலின் = குழலைவிட்டுப் பிரியாத நூல்போல. குருத்துவம்- ஆசிரிய மதிப்பு. அழல் - நெருப்பு. பசுந்தோகை = பசுமை + தோகை. தழலிடு பூங்கொடியேபோல்—உவமை. சாம்பி - வருந்தி.

10. இப்பரிசு - இவ்விதம். செருசலை - ஜெருஸலேம் என்னும் நகரம். புரிவான் - புரிய, வினையெச்சம் ; வான்—விகுதி.

11. ஈண்டு - இவ்விடம். எவன் - யாது. செங்கை = செம்மை + கை. காண்டகு = காண் + தகு. வெவ்விருப்பாணி = வெம்மை + இருப்பாணி. கடாவினர் - அறைந்தனர். கீண்டு - தோண்டி.

12. செற்றம் - பகைமை. சுருதிமுதல் - வேதமுதல்வராகிய ஏசுநாதர்.

13. தன்னரிய = தன் + அரிய. எந்தை-முதல் வேற்றுமை; எந்தாய்—எட்டாம் வேற்றுமை; ஐ—ஆய் எனத் திரிந்தது.

14. வித்தகன் - இறைவன். தொழும்பர் - அடியவர். துஞ்சினவர் - இறந்தவரைத் 'துஞ்சினவர்' என்று கூறும் மங்கல வழக்கு. சீர்மைத்து - சிறப்புடையது.

## கேள்விகள்

1. யூதர்களும் போர்ச்சேவகரும் ஏசுநாதர்க்குச் செய்த பொல்லாங்கு என்ன?
2. பகைவர் ஏசுநாதரை எவ்வாறு "கட்டிக் கொடுபோனர்"?
3. சிலுவை எங்ஙனம் சிறப்பிக்கப்பட்டுள்ளது?
4. நகரத்தார் ஏசுநாதரை எந்நிலையிற் கண்டனர்?
5. ஏசுநாதரது துன்பநிலை கண்டு வருந்தாதார் யாவர்? அவரொழிந்த மற்றவர் அடைந்த நிலை யாது?
6. ஏசுநாதரைக் கண்டதும் மெல்லியலார் யாது கூறி அழுதனர்?
7. செருஸலம் எவ்வாறு சோதோம்பதியை ஒத்திருந்தது?
8. ஏசுநாதர் எங்ஙனம் சிலுவையில் அறையுண்டார்?
9. சிலுவையில் அறையுண்ட ஏசுநாதர் விடுத்த வேண்டுகோள் யாது?
10. மெய்க்கிறிஸ்தவர் யாவர்?
11. "செத்தவரைத் துஞ்சினர் எனவுரைக்கும் சீர்மைத்து" எது?

## பயிற்சி

1. பிரித்துக் கூறுக:—அழலனைய, பசுந்தோகை, இப்பரிசு, செப்பரிய, கொண்டுய்த்தார், தன்னரிய, அடித்தொழும்பர்.

2. சேர்த்து எழுதுக:—போர் + சேவகன், எள்ளி + புறக்கணித்து, துணிந்து + இயற்றும், நம் + ஈசன், கை + அயர்ந்து, திரு + அடி, நூறு + ஆயிரம்.

3. இப்பாடப் பகுதியின் வரலாற்றைக் கீழ்வரும் குறிப்புக்களைக் கொண்டு இருபத்தைந்து வரிகளில் வரைக:—(1) பகைவர் கொடுமை, (2) ஏசுநாதரின் பரிதாப நிலைமை, (3) நகரத்தார் வருத்தம், (4) ஏசுநாதர் சிலுவையில் அறைபடல், (5) அவரது வேண்டுகோள், (6) உண்மைக் கிறிஸ்தவர்.

## 3. குசேலோபாக்கியானம்

குசேலோபாக்கியானம்=குசேல(ன்) + உபாக்கியானம்; குசேலனைப் பற்றிய கிளைக்கதை எனப் பொருள்படும். ஆசிரியர், வல்லூர் - தேவராசப்பிள்ளை; கி. பி. 19-ஆம் நூற்றுண்டினர்; மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம் பிள்ளை அவர்களுடைய மாணவர்.

### கண்ணனும் குசேலனும்

#### குசேலன் கண்ணனைக் காணுதல்

எண்அனைக் கிலங்கு மார்பம் ஈந்தருள் பிரானை நீல
வண்ணனைத் திகிரி சங்கம் வலமிடம் உறக்கொண் டானை
மண்அனைத் தும்பு ரக்கும் வாசுதே வனைம ணக்கும்
கண்ணணைத் துளவத் தாமக் கண்ணனைக் கண்ணிற் கண்டான். (1)

[கண்ணன் குசேலனுக்கு வேண்டிய உபசாரங்களைச் செய்த பின்பு, அவன் குடும்பத்தாரைப் பற்றி விசாரிக்கலானுன்.]

#### கண்ணன் குசேலனை விசாரித்தல்

" நின்னுடைய மனைக்கிழத்தி நிரம்புபெரு நீர்மையளே?
மன்னுடைய சொற்காத்துச் சோர்விலா மாண்பினளே?
தன்னுடைய உயிராநின் றனைப்பேணுந் தன்மையளே?
உன்னுடைய வருவாய்க்குத் தக்கசெல(வு) உஞற்றுவளே? (2)

" பைங்குதலை வாய்மைந்தர் பலர்பிறக்க வேண்டுமே?
எங்குமரும் புகழுடையாய்! எத்தனைமைந் தர்கள்பிறந்தார்?
அங்கவரைப் பேரவையோர் அணிதரச்செய் செயலனைத்தும்
சிங்கல்அறப் புரிந்தனையோ? செய்தனையோ உபநயனம்? (3)

" இருவேமும் முன்னளில் இலங்குசாந் தீபமுனி
வருகாமர் அடிவணங்கி மாமறைகற் றுணர்ந்திடுநாள்
பெருகார்வத் தொடும்பேசிக் கொண்டிருந்த பேச்செல்லாம்
திருகார உளத்துநினைத் திருக்கின்றுா யோசிறப்ப? (4)

" பந்தனை அகன்ற மேலோய், பற்பல நாட்குப் பின்பு
வந்தனை; எனக்கென் கொண்டு வந்தனை? அதனை இன்னே
தந்தனை யாயின் நன்று; தருசுவைப் பக்க ணத்தென்
சிந்தனை நின்ற தெ''ன்றுன் தெரிவரும் வஞ்சக் கள்வன். (5)

## கண்ணன் அவல் தின்னுதல்

திருந்தஇங் களித்தி என்று செங்கரம் மலர்த்தி நீட்டப்
பொழிந்தஇன் பாலுண் பான்பால் புளித்தகா டியைக்கொ டுத்திட்(டு)
அருந்திடென் றுரைத்தல் போலிவ் வவற்கொடை ; என்று வாளா
இருந்தனன் குசேல மேலோன் இவனுளம்
அறிந்த கண்ணன். (6)

மலிதரும் அன்பின் வந்த வன்பொதி அவிழ்த்து நோக்கி
"வலிதரும் அவற்றுள் நன்று வாய்த்தது நமக்கி(து)" என்று,
ஒலிதரு கழற்கால் ஐயன் ஒருபிடி அவலைக் காதல்
பொலிதர எடுத்து வாயில் போகட்டுக் கொண்டான் மாதோ.(7)

அரியஅன் பினிற்கொ டுத்தல் இழிந்ததா யினும்சி றந்த(து) ;
இரியுமன் பினிற்கொ டுத்தல் இழிந்ததே சிறந்த தேனும் ;
பெரியவர் புகழப் பட்ட பெருந்தவக் குசேல மேலோன்
உரியஅன் பினையுங் கூட்டி ஒருபிடி அவல்தின் றனே. (8)

### அருஞ்சொற்பொருள்

குசேல + உபாக்கியானம் = குசேலோபாக்கியானம் - குணசந்தி பெற்ற வடமொழித் தொடர்.

1. எண் - மதிக்கத் தக்க. அனை - அன்னை - இலக்குமி. வண்ணன் - நிறத்தவன். புரக்கும் - பாதுகாக்கும். மண் அனைத்தும் - எல்லா உலகங்களையும். வசுதேவன் மகன் வாசுதேவன் - தத்திதாந்தநாமம். தாமம் - மாலை.

2. கிழத்தி - உரிமையுடையவள் (மனைவி) ; கிழவி - வயது முதிர்ந்தவள். மன் - தலைவன். இலா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். தன்மையளே - 'ஏ' வினா எழுத்து ; எ, ஏ, ஆ, யா, ஓ - வினா எழுத்துக்கள். உஞற்று - செய்.

3. குதலை - மழலைச் சொல். பைங்குதலை - இளமை பொருந்திய மழலைச் சொற்கள். பேரவை = பெருமை + அவை. அணி - சிறப்பு. சிங்கல் அற = சிக்கல் அற - தடை யின்றி. உபநயனம் - பூணூல் அணியும் சடங்கு.

4. சாந்தீப முனி - கண்ணனுக்கும் குசேலனுக்கும் இளமையிற் கல்வி கற்பித்த முனிவர் ; மாணவர் குருகுலவாசம் செய்தனர். காமர் - அழகிய. திருகுஆர - செவ்வையாக.

5. பந்தனை - இல்லறக்கட்டு. பக்கணம் - பட்சணம்.

6. அளித்தி - கொடுப்பாய்; முன்னிலே ஒருமை வினேமுற்று. செங்கரம் - செம்மையாகிய கரம். இன்பால் - இனிமை (யாகிய) பால். இன்பால் உண்பான் பால்: பால் - இடம், ஏழாம் வேற்றுமை உருபு. உண்பான் - உண்பவன், வினேயாலணேயும் பெயர். காடி - கள். கொடை - கொடுத்தல்.

7. பொதி - கட்டு. என்ன - என்று, 'செய்யா' என்னும் வாய்பாட்டு வினேயெச்சம். ஐயன் - பெரியோன் (கண்ணன்). பொலிதர - விளங்க.

8. இரியும் - வேறுபடும்.

### கேள்விகள்

1. கண்ணன் எங்ஙனம் முதற் செய்யுளிற் சிறப்பிக்கப்பட்டுள்ளான்?

2. கண்ணன் குசேலன் மனேவியைப் பற்றிக் கேட்ட கேள்விகள் யாவை?

3. கண்ணன் குசேலன் பிள்ளேகளேப் பற்றி விசாரித்த விவரங்கள் எவை?

4. கண்ணன் தன் மாணவப் பருவத்தைப் பற்றி யாது விசாரித்தான்?

5. கண்ணனுக்கு அவலேக் கொடுத்தல் எதனே ஒத்தது என்று குசேலன் கருதினன்?

6. கந்தையில் முடியப் பெற்றிருந்த அவலே மிகச் சிறந்தது என்பதற்குக் கூறப்பட்டுள்ள காரணம் யாது?

### பயிற்சி

1. பிரித்துக் காட்டுக :—பெருந்தவம், கழற்கால், செங்கரம், அவற்கொடை, வஞ்சக்கள்வன், பற்பல, பெருகார்வம், கற்றுணர்.

2. வாக்கியங்களிற் பயன்படுத்துக :—பேணும், பேரவை, மாமறை, ஆர்வம், கழற்கால், இழிந்தது.

3. இச் செய்யுட்களின் திரண்ட கருத்தினே உங்கள் சொந்த நடையில் 20 வரிகளில் எழுதுக.

4. இப்பாடச் செய்தியைக் கண்ணனே நம்மிடம் கூறுவதுபோலக் கூறுக.

5. கண்ணன்—குசேலன் சந்திப்பைக் குசேலன் தன் மனேவிக்குக் கூறுவதுபோல எழுதிக் காட்டுக.

6. எதிர்ச் சொற்களேக் கூறுக :—மலர்த்தி, அறிந்த, நன்று, சிறந்தது, புகழப்பட்ட, மேலோன், கொண்டான்.

# 4. நளவெண்பா

## சுயம்வர காண்டம்

நளவெண்பா = நளன் + வெண்பா, "சில விகாரமாம் உயர்திணை" என்பது விதி. நளனது வரலாற்றை வெண்பாவிற் கூறும் நூல் ஆதலின் 'நளவெண்பா' என்று பெயர் பெற்றது. இந் நூல் (1) சுயம்வர காண்டம், (2) கலிதொடர் காண்டம், (3) கலி நீங்கு காண்டம் என்னும் மூன்று பிரிவுகளைக் கொண்டது; 424 வெண்பாக்களைக் கொண்டது.

இந் நூலை இயற்றியவர் புகழேந்திப் புலவர்; தொண்டை நாட்டுப் பொன்விளைந்த களத்தூரினர்; பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்; வெண்பாப் பாடுவதில் இணையற்றவர்.

### பெண்கள் அன்னத்தைப் பிடித்தல்

நாடிமட அன்னத்தை நல்ல மயிற்குழாம்
ஓடி வளைக்கின்ற தொப்பவே—நீடியநல்
பைங்கூந்தல் வல்லியர்கள் பற்றிக் கொடுபோந்து
தங்கோவின் முன்வைத்தார் தாழ்ந்து. (1)

### நளன் அன்னத்தின் அச்சம் தீர்த்தல்

"அஞ்சல் மடஅனமே! உன்றன் அணிநடையும்
வஞ்சி அனையார் மணிநடையும்—விஞ்சியது
காணப் பிடித்ததுகாண்" என்றான் களிவண்டு
மாணப் பிடித்ததார் மன். (2)

### மனத்தடுமாற்றம் தீர்ந்த அன்னம் தமயந்தியின் பெருமை கூறல்

"எழுஅடுதோள் மன்னா! இலங்கிழையேர் தூண்டக்
கொழுநுதியிற் சாய்ந்த குவளை—உழுநர்
மடைமிதிப்பத் தேன்பாயும் மாடொலிநீர் நாடன்
கொடைவிதர்ப்பன் பெற்றதோர் கொம்பு. (3)

"நாற்குணமும் நாற்படையா, ஐம்புலனும் நல்லமைச்சா,
ஆர்க்குஞ் சிலம்பே அணிமுரசா,—வேற்படையும்
வாளுமே கண்ணா, வதன மதிக்குடைக்கீழ்
ஆளுமே பெண்மை அரசு." (4)

[நளன் வேண்ட, அன்னம் அவன் பொருட்டுத் தமயந்திபால் தூது சென்றது. அது போன பிறகு, நளன் அதன் வருகையை ஆவலோடு எதிர்பார்த்து இருந்தான்.]

### நளன் வருந்துதல்

"இவ்வளவில் செல்லுங்கொல் இவ்வளவில் காணுங்கொல்
இவ்வளவில் காதல் இயம்புங்கொல்—இவ்வளவில்
மீளுங்கொல்" என்றுரையா விம்மினன் மும்மதநின்(று)
ஆளுங்கொல் யானை அரசு. (5)

### அன்னம் தமயந்தியை அடைதல்

மன்னன் விடுத்த வடிவில் திகழ்கின்ற
அன்னம்போய்க் கன்னி அருகணைய,—நன்னுதலும்
தன்ஆடல் விட்டுத் தனியிடம்சேர்ந்(து) ஆங்கதனை
என்நாடல் சொல்என்றாள் ஈங்கு. (6)

### அன்னம் நளனது பெருமை கூறல்

"செம்மனத்தான் தண்ணளியான் செங்கோலான் மங்கையர்கள்
தம்மனத்தை வாங்குந் தடந்தோளான்—மெய்ம்மை
நளனென்பான் மேனிலத்தும் நானிலத்தும் மிக்கான்
உளனென்பான் வேந்தன் உனக்கு. (7)

"அறங்கிடந்த நெஞ்சும், அருள்ஒழுகு கண்ணும்
மறங்கிடந்த திண்தோள் வலியும்,—திறம்கிடந்த
செங்கண்மால் அல்லனேல் தேர்வேந்தர் ஒப்பரோ
அங்கண்மா ஞாலத்(து) அவற்கு !" (8)

### அன்னத்தைத் தமயந்தி வேண்டுதல்

"வாவி உறையும் மடஅனமே ! என்னுடைய
ஆவி உவந்தளித்தாய் ஆதியால்,—காவினிடைத்
தேர்வேந்தற்(கு) என்நிலைமை சென்றுரைத்தி" என்றுரைத்தாள்
பார்வேந்தன் பாவை பதைத்து. (9)

[சுயம்வர நாளில் மன்னர் பலரும் தேவரும் நளனும் மண்டபத்தில் கூடியிருந்தனர்.]

### தமயந்தி மண மண்டபத்திற்கு வருதல்

மன்னர் விழித்தா மரைபூத்த மண்டபத்தே
பொன்னின் மடப்பாவை போய்ப்புக்காள்—மின்னிறத்துச்
செய்யதாள் வெள்ளைச் சிறைஅன்னம் செங்கமலப்
பொய்கைவாய்ப் போவதே போன்று. (10)

மன்னர் குலமும் பெயரும் வளநாடும்
இன்ன பரிசென்(று) இயல்அணங்கு—முன்னின்று
தார்வேந்தன் பெற்ற தனிக்கொடிக்குக் காட்டினுள்
தேர்வேந்தர் தம்மைத் தெரிந்து. (11)

### தமயந்தி திகைத்தல்

காவலரைத் தன்சேடி காட்டக்கண்(டு) ஈரிருவர்
தேவர் நளன்உருவாச் சென்றிருந்தார் ;—பூவரைந்த
மாசிலாப் பூங்குழலாள் மற்றவரைக் காணநின்(று)
ஊசலா டுற்றாள் உளம். (12)

### தெய்வத்தை வேண்டல்

"மின்னுந்தார் வீமன்தன் மெய்ம்மரபில் செம்மைசேர்
கன்னியான் ஆகில், கடிமாலை—அன்னந்தான்
சொன்னவனைச் சூட்ட அருள்" என்றாள் சூழ்விதியின்
மன்னவனைத் தன்மனத்தே வைத்து. (13)

### நளனை அறிதல்

கண்இமைத்த லால்அடிகள் காசினியில் தோய்தலால்
வண்ண மலர்மாலை வாடுதலால்—எண்ணி
நறுந்தா மரைவிரும்பும் நன்னுதலே அன்னாள்
அறிந்தாள் நளன்தன்னை ஆங்கு. (14)

### மணமாலை சூட்டல்

விண்ணரசர் எல்லோரும் வெள்கி மனம்சுளிப்பக்
கண்ணகல் ஞாலம் களிகூர—மண்ணரசர்
வன்மாலை தன்மனத்தே சூட, வயவேந்தைப்
பொன்மாலை சூட்டினாள் பொன். (15)

## அருஞ்சொற்பொருள்

1. குழாம் - கூட்டம். பைங்கூந்தல்=பசுமை+கூந்தல். வல்லியர் - வல்லிக்கொடி போன்ற பெண்கள். கோ - அரசன். நல்ல...ஒப்ப - உவமை.

2. அஞ்சல் - பயப்படாதே. வஞ்சி அனையார்-வஞ்சிக்கொடிபோன்ற பெண்கள். விஞ்சியது - மேற்பட்டது. காண - அறிய. மாண - சிறக்க. பிடித்த - மொய்க்கப்பெற்ற. தார் - மாலை. மன் - மன்னன்.

3. எழு - தூண். அடு - வென்ற. இலங்கிழை - விளங்கும் ஆபரணங்களை அணிந்தவள் (தமயந்தி). ஏர் தூண்ட - ஏரைச் செலுத்த. கொழு - கலப்பை இரும்பு. மாடு - இடம். இலங்கிழை, விதர்ப்பன் பெற்ற கொம்பு என முடித்துக்கொள்க.

4. நாற்குணம் - அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு. ஐம்புலன் - ஈண்டு ஐம்பொறி - மெய், வாய், கண், மூக்கு, செவி. பெண்மை - அமைதித் தன்மை. இஃது உருவக அணி.

5. விம்மினன் - கவலை கொண்டான். உரையா - உரைத்து; வினையெச்சம்.

6. நன்னுதல் - நல்ல நெற்றி; இங்கு தமயந்தியைக் குறித்தது. நாடல் - விரும்பி வந்த காரணம்.

7. வாங்கும் - வளைக்கும் (கவரும்). நானிலம் - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் கொண்ட பூமி.

8. மறம் - வீரம். திறம் - மேன்மை. அவற்கு=அவன்+கு.

9. அனம் - அன்னம். உரைத்தி - சொல்வாய், முன்னிலை ஒருமை வினைமுற்று. பாவை - பதுமை, தமயந்திக்கு உவமை ஆகி வந்தது.

10. விழித்தாமரை=விழியாகிய தாமரை - உருவகவணி. மடம் - இளமை. மின்னிறத்து...போன்று - உவமை அணி. செய்ய - சிவந்த.

11. பரிசு - விதம். இயல்அணங்கு - அழகிய தெய்வப்பெண் போன்ற தோழி. கொடி - கொடிபோன்ற தமயந்தி.

12. காணு - கண்டு. காவலர் - குடிகளைக் காப்பவர், அரசர். வரைந்த - முடிக்கப்பெற்ற. மாசிலா=மாசு+இலா. காணு - கண்டு, 'செய்யா' என்னும் வாய்பாட்டு வினையெச்சம். உளம் ஊசலாடுற்ருள் - மனத்தடு மாற்றம் அடைந்தாள்.

13. கடிமாலை - மணமாலை. சூழ்விதியின் மன்னவன் - உயிர்களைச் சூழும் ஊழ்வினைக்குத் தலைவனாகிய கடவுள்.

14. காசினி - பூமி, தரை. தோய்தல் - படிதல். நறுந்தாமரை விரும்பும் நன்னுதல் - திருமகள்.

15. வெள்கி - வெட்கம் அடைந்து, வினையெச்சம். சுளிக்க - சினம் கொள்ள. கண்ணகல்=கண்+அகல் - இடமகன்ற. ஞாலம் - ஞாலத்தார்.

வன்மாலை - வலிமையுடைய மயக்கம். வயம் - வெற்றி. பொன் - இலக்குமி ; உவமையாகு பெயராய்த் தமயந்தியை உணர்த்திற்று.

## கேள்விகள்

1. பணிப் பெண்கள் அன்னத்தைப் பிடிக்கச் சூழ்ந்தது எதனை ஒத்திருந்தது ?

2. நளன் யாது கூறி அன்னத்தைத் தேற்றினான் ?

3. அன்னம் விதர்ப்பனது நாட்டுச் சிறப்பை எவ்வாறு எடுத்துக் கூறியது ?

4. அன்னம் தமயந்தியின் சிறப்பை எங்ஙனம் எடுத்து விளக்கியது?

5. அன்னம் தூது சென்ற பிறகு நளன் தன்னுள் யாது கூறி விம்மினான் ?

6. அன்னம் நளனது சிறப்பைத் தமயந்திக்கு எவ்வாறு எடுத்துக் கூறிற்று ?

7. தமயந்தி மண மண்டபத்திற் போய்ப் புகுந்தது எதுபோன்றிருந்தது ?

8. தமயந்தி நளனை எவ்வாறு அறிந்தாள் ?

9. தமயந்தி நளனுக்கு மணமாலை சூட்டியதைக் கவி எங்ஙனம் கூறியுள்ளார் ?

## பயிற்சி

1. மேற்கண்ட செய்யுட்களில் வந்துள்ள உவமைகளைக் கூறி, அவற்றை உவமேயத்தோடு பொருத்திக் காட்டுக.

2. மேற் செய்யுட்களில் வந்துள்ள நளனைக் குறிக்கும் தொடர்களைக் கூறி, அவற்றின் பொருளை விளக்குக.

3. ஐம்பொறி, ஐம்புலன், நாற்குணம், நாற்படை - இவை இன்னவை எனக் கூறுக.

4. எதிர்ச் சொற்களைக் கூறுக :—நீடிய, தாழ்ந்து, அஞ்சல், விஞ்சியது, சாய்ந்த, அருகு, இலா, (மனம்) சுளிப்ப.

5. பிரித்துக் காட்டுக :—விண்ணரசர், வயவேந்து, நறுந்தாமரை, நன்னுதல், மெய்ம்மரபு, மாசிலா, பூங்குழலாள், தனிக்கொடி, மடப் பாவை, விழித்தாமரை, மின்னிறம், உவந்தளித்தாள், அருகணைய, ஆங்கதனை, இலங்கிழை.

6. இப்பதினைந்து பாடற் செய்திகளையும் நளன் நமக்குக் கூறுவது போல 20 வரிகளில் எழுதிக் காட்டுக.

# IV. புனைந்துரை

## பாண்டவர் வழிநடைக் காட்சி

வில்லிபுத்தூர் ஆழ்வார் தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள சனியூரிற் பிறந்தவர்; கி. பி. 14-ஆம் நூற்றாண்டினர். வில்லிபுத்தூராழ்வார் இயற்றிய பாரதத்திலிருந்து கீழ்வரும் செய்யுட்கள் தரப்படுகின்றன. பாண்டவர் ஐவரும் திரௌபதியின் சுயம்வரத்திற்குப் பிராமணர் வேடத்திற் சென்றனர். அவர்கள் சென்ற வழியில் காணப்பெற்ற இயற்கைக் காட்சிகளைக் கண்டுகொண்டே சென்றனர். அக்காட்சிகள் திரௌபதியை மணக்கப் போகும் அவர்கட்கு நன்னிமித்தங்களாக அமைந்தன என்று கவி கூறியுள்ளார். அக்காட்சிகளுள் சிலவற்றை இங்குக் காண்க.

### காலைக் காட்சி

புலர்ந்தன கங்குற் போதும் பொழுதரு பனியும் சேர
மலர்ந்தன மனமும் கண்ணும் வயங்கின திசையும் பாரும்
அலர்ந்தன தடமும் காவும் ஆர்த்தன புள்ளும் மாவும்
கலந்தன குருகும் பேடும் கலித்தன முரசும் சங்கும். (1)

### தென்றல் வீசுதல்

குன்றமும் கொடிய கானும் கூரிருட் கங்குல் நீங்கி
நன்றுநன் றுதவ வந்தீர்; நடந்துநீர் இளைத்தீர்போலும்!
என்றுகொண் டுவகை யோடும் இன்மலர்க் கழுநீர் வாச
மன்றலம் தென்றல் வீசி வழிவிடாய் தணித்த தன்றே. (2)

### வண்டின் திறமை

வெறிபடு முளரி மொக்குள் விரிபதம் நோக்கிச் சுற்றும்
பொறிவரி வண்டின் ஈட்டம் புறத்திருந் திரங்க வண்டொன்(று)
இறகரால் வீசி உள்புக் கின்மது நுகர்தல் கண்டு
நெறியினன் னிமித்த மாக நெஞ்சுற நினைந்து சென்றார். (3)

### வாளையின் வலிமை

வண்டுறை மருங்கின் ஆங்கோர் மாங்கனி வீழ்தல் கண்டே
தண்டுறை மீன்கள் எல்லாம் தத்தமக் கிரையென் றெய்த
விண்டுறை கிழிய ஓடி வென்றொரு வாளை தன்வாய்க்
கொண்டுறை வலிமை நோக்கிக் குறிப்பினால் உவகை கூர்வார். (4)

### குயில் கூவுதல்

' மாக்குரல் அளக வல்லி வதுவையின் அழகு காணத்
தாக்குரல் அடிகொள் யானைத் தரணிபர் எவரும் வந்தார் ;
வீக்குனன் மிளிர்பொற் பூணீர் ! விரைவுடன் வம்மின் 'என்று
கூக்குரல் விளிப்ப போலும் கோகிலக் குரலும் கேட்டார். (5)

### மயில்கள் ஆடுதல்

' நீடுதல் இல்லை ; இன்றே நிருபதி கன்னி மன்றல்
கூடுதல் இவர்க்குண் டாகும் ; கொற்றவர் குறைபொ ருதே
ஓடுதல் உண்மை ' என்னுத் தோகைகள் ஓகை யோடும்
ஆடுதல் நோக்கி நோக்கி அகமகிழ்ந் தேகி னுரே. (6)

### இயற்கைக் காட்சி

பூவெலாம் சுரும்பு மொய்ப்பப் புனலெலாம் புள்ளு வைக
மாவெலாம் துணையின் மேவ மரனெலாம் வல்லி புல்ல
ஏவெலாம் பயின்ற விற்கை ஏற்றிளஞ் சிங்கம் போல்வார்
காவெலாம் மருங்கு தோறும் கண்டுகண் களித்து நின்றுர்.(7)

#### அருஞ்சொற்பொருள்

1. கங்குல் - இரவு. சேர - ஒருங்கு. புலர்ந்தன - நீங்கின. வயங்கின - விளக்கம் பெற்றன. பார் - பூமி. புள் - பறவை. மா - விலங்கு. குருகு - அன்னப்பறவை. பேடு - பெண் அன்னம். கலந்தன - சேர்ந்து மகிழ்ந்தன. கலித்தன - முழங்கின. திசையும் பாரும் - ' உம் ' எண் உம்மை.

2. கூர் - மிக்க. கழுநீர் - செங்கழுநீர்மலர். மன்றல் - நறுமணம். காலையில் இயல்பாக இனிது வீசுகின்ற தென்றலைப் பாண்டவர் வழிநடந்த களைப்பைப் போக்கவே வீசுவதாக ஆசிரியர் கூறியது தற்குறிப்பேற்ற அணி.

3. வெறி - தேன். முளரி - தாமரை. விரிபதன் - மலரும் சமயம். பொறி - உடற் புள்ளி. வரி - இசைப்பாட்டு. இரங்க - ஆரவாரிக்க ; வினையெச்சம். இறகர் - சிறகு. நுகர்தல் - உண்ணுதல். நிமித்தம் - நற்குறி. உற - பொருந்த.

4. அங்கு - அவ்வழியில். வண்டுறை - வண்மை + துறை ; செழிப்பான நீர்த்துறை. தண்டுறை - தண்மை + துறை ; குளிர்ந்த நீர்த் துறை. தத்தமக்கு = தம்தமக்கு. இரை - உணவு ; (இறை—கடவுள்). எய்த - கவர்தற்குவர. விண்டுறை = விண்டு + உறை. உறைவிண்டு. கிழிய - உறைந்த நீர் பிளந்து கிழியும்படி எனப்பொருள் கொள்க. கொண்டுறை = கொண்டு + உறை ; கவர்ந்துகொண்டிருந்த.

5. மா - கருநிறம். குரல் அளகம் - கூந்தல்; ஒரு பொருட் பன்மொழி. வல்லி - பூங்கொடி, இங்கு உவமையாகத் திரௌபதியை உணர்த்திற்று. வதுவை - திருமணம். தாக்கு - பகைவரைத் தாக்கும். வீக்கு - தரித்த; அணிந்துள்ள. வம்மின் - வாருங்கள்; முன்னிலைப் பன்மை வினைமுற்று. விளிப்ப - அழைப்பன. கோகிலம் - குயில். இச் செய்யுள் தற்குறிப்பேற்ற அணி.

6. நீடுதல் - நீட்டித்தல். இன்றே - இன்றைக்கே ஆகும். நிருபதி - அரசன், துருபதன். மன்றல் - திருமணம். குறை - அவமானம். என்னு - என்று கருதி; 'செய்யா' என்னும் வாய்பாட்டு வினையெச்சம். தோகை - மயில் இறகு; மயிலுக்கு ஆகி வந்தது. ஓகை - உவகை என் பதன் மரூஉ மொழி.

7. சுரும்பு - வண்டு. வைக - தங்க. மா - விலங்கு. மேவ - பொருந்த. புல்ல - தழுவ. ஏ - அம்பு. விற்கை = வில் + கை. ஏற்றிளம் = ஏறு + இளம். இளஞ்சிங்கம் = இளமை + சிங்கம். களித்து - களிப்படையப் பெற்று. கா - சோலை. மருங்கு தோறும் - இடந்தோறும்.

### கேள்விகள்

1. ஆசிரியர் காலைக் காட்சியைப் பற்றிக் கூறியுள்ள செய்திகள் யாவை?
2. தென்றல் வீசியதைப் பற்றி அவர் கூறுவது யாது?
3. வண்டின் திறமை யாது? அஃது எவ்வாறு பாண்டவர்க்குக் நன்னிமித்தமாயிற்று?
4. வாளை மீனின் வலிமை பற்றி ஆசிரியர் கூறுவது யாது?
5. கோகிலக் குரல் பாண்டவரை எவ்வாறு வரவேற்றது?
6. தோகைகளின் ஆட்டத்தில் ஆசிரியர் காணும் குறிப்பு யாது?
7. பாண்டவர் எவற்றைக் 'கண்டு கண்களித்து நின்றார்'?

### பயிற்சி

1. இச்செய்யுட்களில் ஆங்காங்கு அமைந்துள்ள தற்குறிப்பேற்ற அணியை விளக்கி வரைக.

(இயல்பாக நடைபெறும் நிகழ்ச்சிகளில் ஆசிரியன் தன் குறிப்பை ஏற்றிக் கூறுதல் தற்குறிப்பேற்ற அணி எனப்படும்.)

2. வாக்கியங்களில் பயன்படுத்துக:—மலர்ந்தன, அலர்ந்தன, மன்றல், விரிபதம், இரங்க, நுகர்தல், வம்மின், அகமகிழ்ந்து, கண் களித்து.

3. மேற்கண்ட செய்யுட்களைப் படித்து, பாண்டவர் கண்ட இயற்கைக் காட்சிகளை நுமது சொந்த நடையில் 20 வரிக்குள் எழுதுக.

4. பிரித்து எழுதுக:—கூரிருள், நன்றுதவ, வண்டொன்று, இன்மது, வண்டுறை, தண்டுறை, ஏற்றிளஞ்சிங்கம், காவெலாம், தத்தமக்கு, ஆங்கோர், மகிழ்ந்தேகினர்.

# V. சிறு நூல்கள்

அம்மானை, அந்தாதி, கலம்பகம், இரட்டை மணிமாலை, மும்மணி மாலை, நான்மணிமாலை, பிள்ளைத்தமிழ் போன்றவை சிறு நூல்கள் அல்லது பிரபந்தங்கள் எனப்படும். பிரபந்தங்கள் 96 வகையின என்று இலக்கண நூல்கள் கூறும்.

## 1. திருக்கருவைப்-பதிற்றுப்பத்தந்தாதி

கருவை - பாண்டிய நாட்டுப் பதி. அப்பதியில் கோயில் கொண்டுள்ள சிவபிரான்மீது அந்தாதித்தொடையிற் பாடப்பெற்ற நூறு பாக்களைக் கொண்ட நூல் திருக்கருவைப் பதிற்றுப்பத்து அந்தாதி எனப் பெயர் பெற்றது.

அந்தாதி - ஒரு செய்யுளின் அந்தம் அடுத்து வரும் செய்யுளின் ஆதியாக வரும்படி பாடப்பெறும் பிரபந்தம். பதிற்றொன்று, பதிற்றிரண்டு... பதிற்றுப்பத்து (10 × 10) என வரும்; நூறு செய்யுட்கள் என்பது பொருள்.

இந்நூலின் ஆசிரியர் அதிவீரராம பாண்டியர்; 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்; தென் காசிப் பகுதியை ஆண்டவர். இவருடைய நைடதம் இவரது புலமையை நன்குணர்த்தும். அந்தாதி நூல் இவரது பக்தியை நன்கு புலப்படுத்தும். பாக்கள் படிப்பவர் உள்ளத்தைக் குழைவிக்கும் ஆற்றல் உடையன.

கோமானே கருவைவரு குணக்குன்றே மலரிதழித்
தேமாலை புனைந்தசடைச் செழுஞ்சுடரே என்றென்று
பாமாலை வாய்பாடிக் கைகொட்டிப் பதம்பெயர்த்து
நாமாட வம்மின்காள் தொண்டராய் நமரங்காள்! (1)

தொண்டுசெய்து வழிபட்டுச் சுருதிபுகழ் களாவீசன்
புண்டரிக மலர்த்தாளைப் போற்றிமுதற் பேறுபெற்றூர்
அண்டர்பிரான் நான்முகத்தோன் ஆழியான் இவரென்றால்
மண்டனின்ஞா லத்தெளிய மானுடரோ வழுத்துவார். (2)

வழுத்திடுவேன் நாவார மலரிடுவேன் கரங்கொண்டு
தொழத்தகுவேன் முடிதாழ்த்திச் சூழ்வருவேன் துணைத்தாளால்
அழுத்திடுவேன் மனத்துன்னை அகம்புறமொன் றுயுருகிப்
பழுத்திடுவேன் அருள்கனியப் பால்வண்ண நம்பரனே! (3)

நம்பியுன தருள்வேட்டு நடுக்கடலுட் கலங்கவிழ்ந்து
வெம்புதுயர் மனத்தார்போல் மெலிகின்றேன் நெடுநாளாக்
கும்பமுனிக் கருள்புரியும் கொற்றவனே முகலிங்கா!
தும்பைமுடித் தோய்! புரக்க இரக்கமின்னந் தோன்றாதோ. (4)

தோன்றியபோ துடன்தேரன்றித் தோன்றாது மறைத்தென்
ஆன்றசெழுஞ் செம்பிலுறை களிம்புபோல் அகலாமல் [னை
ஊன்றுமலத் துகளகற்றி உன்னருளும் பெறுவேனோ
மூன்றுலகுந் தொழுதேத்தும் முகலிங்கா! முதற்பொருளே! (5)

அருஞ்சொற்பொருள்

1. வம்மின்காள் - வாருங்கள். நமரங்காள் - நம்மவர்களே, விளி வேற்றுமை.

2. சுருதி - வேதம். களா ஈசன் - களாமரத்தடியில் எழுந்தருளியுள்ள சிவபெருமான். புண்டரிகம் - தாமரை. பேறு - பாக்கியம் (நற்கதி). அண்டர் - தேவர். பிரான் - தலைவன் × பிராட்டி. ஆழியான் - சக்கரத்தையுடையவன் (திருமால்). ஞாலம் - உலகம்.

3. வழுத்து - துதி. வண்ணம் - நிறம். வண்ணா - நிறத்தவனே, விளி வேற்றுமை. வழுத்திடுவேன்—தன்மை ஒருமை வினைமுற்று. அகம் × புறம். பரன் - மேலானவன்.

4. வேட்டு - விரும்பி, வினையெச்சம்; வேள் + ட் + உ. கும்பமுனி - அகத்தியன். கொற்றம் - வெற்றி. புரக்க - காக்க, வினையெச்சம்.

5. களிம்பு - அழுக்கு. மலம் - குற்றம். துகள் - தூசு. உன் + அருள் = உன்னருள்.

கேள்விகள்

1. ஆசிரியர் 'நமரங்காள்!' என விளித்துக் கூறும் செய்தி யாது?
2. முதற்பேறு பெற்றார் யாவர்? அவர் எங்ஙனம் பெற்றார்?
3. தாம் இறைவனை எவ்வாறு பூசிப்பதாக ஆசிரியர் கூறியுள்ளார்?
4. "நடுக்கடலுட் கலங்கவிழ்த்து வெம்புதுயர் மனத்தார்போல்"—இவ்வுவமை எதனை விளக்க வந்தது?
5. கும்பமுனிக் கருள்புரிந்த கொற்றவன்—இதில் அடங்கியுள்ள வரலாறு யாது?
6. "செம்பில் உறைகளிம்பு"—இது கூறப்பெற்ற சந்தர்ப்பம் யாது?
7. ஆசிரியர் இறைவனை யாது வேண்டுகிறார்?

பயிற்சி

1. இப்பாடப் பகுதியில் வந்துள்ள உவமைகளைக் கூறி, அவற்றை உங்கள் சொந்த வாக்கியங்களிற் பயன்படுத்திக் காட்டுக.

2. பிரித்துக் கூறுக:—செழுஞ்சுடர், மலர்த்தாள், மண்டனில், நாவார, மனத்துன்னை, மலத்துகள், மூன்றுலகம், முதற்பொருள்.

3. இப்பாடப் பகுதியில் சிவபிரானைக் குறிக்க வந்துள்ள சொற்களையும் தொடர்களையும் கூறி, அவற்றால் சிவனைப்பற்றி அறியப்படும் விவரங்களைத் தருக.

## 2. நால்வர் நான்மணி மாலை

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்னும் சைவ சமயகுரவர் நால்வர்மீதும் முறையே வெண்பா, கட்டளைக் கலித்துறை, ஆசிரிய விருத்தம், ஆசிரியப்பா என்னும் நான்குவகைப் பாக்களிலும் பாடப்பெற்ற பிரபந்தம் நால்வர் நான்மணி மாலை என்பது.

இதனைப் பாடியவர் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்; வீர சைவர் ; கி. பி. பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.

நேரிசை வெண்பா

(திருஞான சம்பந்தர்மீது)

பயனாகு நல்லாண் பனைக்குவிடத் திற்கு
மயலாகு நோய்க்கு மருந்தாம்—உயிராகும்
சிந்துமெலும் பிற்குச் சிரிபுரத்து நாவலன்சம்
**பந்தன்** இயம்புதிருப் பாட்டு. (1)

கட்டளைக் கலித்துறை

(திருநாவுக்கரசர்மீது)

பாட்டான் மறைபுக ழும்பிறை சூடியைப் பாடிமகிழ்
ஊட்டா மகிழ்சொல் லிறைவனைப் பாடி உவப்புறுக்க
வேட்டான் மலிபெருங் கல்லவன் போல மிதப்பனெனப்
பூட்டா மறிதிரை வார்கடற் கேவிழப் போதுவனே. (2)

ஆசிரிய விருத்தம்

(சுந்தரர்மீது)

போத முண்ட பிள்ளை என்பு பொருகண் மாது செய்ததோ
காதல் கொண்டு சொல்லின் மன்னர் கன்மி தப்ப உய்த்ததோ
வாய்தி றந்து முதலை கக்க மகனை நீய ழைத்ததோ
யாது **நம்பி** அரிது நன்றெ னக்கி யம்ப வேண்டுமே. (3)

ஆசிரியப்பா

(மாணிக்கவாசகர்மீது)

வேண்டுநின் அடியார் மெய்யன் பெனக்கும்
அருள்செய் சிவனே அலந்தேன் அந்தோ !
முறையோ முறையோ இறையோ னே ! என்(று)
அழுது செம்பொன் அம்பலக் கூத்தன்

அருளாற் பெற்ற அன்பினில் ஒருசிறி(து)
அடிய னேற்கும் அருளல் வேண்டும் ;
நீயே கோடல் நின்னருட் பெருக்கிற்(கு)
ஏற்ற தன்றிள ஏறுகந் தேறியைப்
பரிமா மிசைவரப் பண்ணிய வித்தக !
திருந்திய வேத சிரப்பொருள் முழுதும்
பெருந்துறை யிடத்துப் பெருஞ்சீர்க்
குருந்துறு நீழலிற் கொள்ளைகொள் வோயே. (4)

## அருஞ்சொற்பொருள்

1. திருவோத்தூரில் ஆண்பனை பெண்பனையாதற்கும், திருமருகலில் விடம் தீர்த்தற்கும், கொல்லிமழவன் மகளைப் பற்றியிருந்த முயலகன் நோயைப் போக்குதற்கும், திருமயிலையில் எலும்பைப் பெண்ணுக்கவும் திருஞான சம்பந்தருடைய திருப்பதிகங்கள் பயன்பட்டன. மயல்-மயக்கம். சிரபுரம் - சீகாழிப்பதி. நாவலன் - நாவில் (பாடுவதிலும் சொற்போர் புரிதலிலும் பேசுதலிலும்) வல்லவன். சம்பந்தர் கி. பி. 7-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்தவர்.

2. பாட்டால் - சுலோகங்களால். பிறைசூடி - சிவபெருமான். ஊட்டா - ஊட்டி ; 'செய்யா' என்னும் வாய்பாட்டு வினையெச்சம். சொல்லிறைவன் = சொல் + இறைவன் - நாவுக்கு அரசன். வேட்டான் - விரும்பினுன் ; வேள் + ட் + ஆன். மிதப்பன் - (நான்) மிதப்பன்—தன்மை ஒருமை வினைமுற்று. பூட்டா - பூட்டி - கட்டி. திருநாவுக்கரசர், சம்பந்தர் காலத்தவர்.

3. போதம் - ஞானப்பால். பிள்ளை - சம்பந்தர். மதலை - பிள்ளை. நம்பி - சுந்தரர்.

4. நின் + அடியார் = நின்னடியார். அலந்தேன் - வருந்தினேன். அந்தோ - ஐயோ. இறையோன் - தலைவன். கோடல் - கொள்ளுதல். இள ஏறு - இளமை பொருந்திய ரிஷபம். ஏறி - ஊர்பவன், சிவபிரான். பரிமா - குதிரை. வித்தக - வித்தையில் வல்லவனே. வேத சிரப்பொருள்-வேதத்தின் சிறந்த பொருள். பெருந்துறை - திருப்பெருந்துறை, தஞ்சை மாவட்டத்தில் கீழ்க்கடல் ஓரத்தில் உள்ள ஊர். குருந்து உறுநீழலில் - பொருந்திய குருந்தமர நிழலில், குருவாக வந்த சிவபிரானிடம் குருந்த மரத்தடியில் மாணிக்கவாசகர் உபதேசம் பெற்றுர் என்பது வரலாறு. மாணிக்கவாசகர் காலம் கி. பி. 9 - ஆம் நூற்றுண்டு என்னலாம் ; சிலர் சம்பந்தர், அப்பர் காலத்திற்கு முற்பட்டவர் எனவும் கூறுவர்.

### கேள்விகள்

1. சம்பந்தர் பாக்கள் எவற்றுக்கு மருந்தாயின ?

2. திருநாவுக்கரசர் கடலில் கல்மீது மிதந்த வரலாறு யாது ? அதனை ஆசிரியர் குறித்ததேன் ?

3. ஆசிரியர் நம்பிக்கு விடுத்த கேள்வி யாது ?

4. மூன்றும் செய்யுளில் அமைந்த வரலாறுகள் யாவை ?

5. மணிவாசகர் எவ்வாறு அம்பலக் கூத்தனிடம் அன்பைப் பெற்றார் ?

6. மணிவாசகர் யாரிடம், எங்கு, எதனைக் கொள்ளை கொண்டார் ?

7. ஆசிரியர் மணிவாசகரை 'வித்தக' என விளித்தமை எக்காரணம் பற்றியது ?

8. ஆசிரியர் மணிவாசகரிடம் வேண்டுவது யாது ?

### பயிற்சி

1. பிரித்துக் காட்டுக :—நல்லாண், சொல்லிறைவன், உவப்புறுக்க, கல்லவன், நன்றெனக்கு, நின்னடியார், மெய்யன்பு, அம்பலக்கூத்தன், நின்னருள், அருட்பெருக்கு, ஏறுகந்தேறி.

2. சேர்த்துக் கூறுக :—பயன் + ஆகும், விடம் + அத்து + இன் + கு, திரு + பாட்டு, பெருமை + கல், கல் + மிதப்ப, நீ + அழைத்ததோ, எனக்கு + இயம்ப, என்று + அமுது, இள + ஏறு, சிரம் + பொருள்.

3. மறிதிரை, மெய்யன்பு, அம்பலக் கூத்தன், அருட்பெருக்கு, ஏற்றதன்று, கொள்ளைகொள்.—இவற்றைச் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறுக.

4. முதற் செய்யுளில் சம்பந்தரைப் பற்றி வந்துள்ள கதைக் குறிப்புக்களை முறைப்படி எழுதுக.

5. இரண்டாம் செய்யுளில் கூறப்பட்டுள்ள திருநாவுக்கரசரது அற்புதச் செயலைப் பதினைந்து வரிகளுள் எழுதுக.

6. மூன்றும் செய்யுளில் சுந்தரரைப் பற்றிக் குறிக்கப்படும் கதை நிகழ்ச்சியை எடுத்து எழுதுக.

7. ' பரிமா மிசைவரப் பண்ணிய வித்தக '—இதில் அமைந்த கதைக் குறிப்பினை விளக்கி எழுதுக.

8. பின் வருவனவற்றிற்குப் பொருள் கூறுக :—மயலாகு நோய், பிறை சூடி, சொல்லிறைவன், மறிதிரை, போதம், நம்பி, அலந்தேன், கோடல், இளவேறு, வித்தக, வேத சிரப்பொருள், பெருந்துறை.

## 3. திருவரங்கக் கலம்பகம்

திருவரங்கம் - ஸ்ரீரங்கம் ; வைணவத் தலங்கள் நூற்றெட்டனுள் சிறந்தது. கலம்பகம் - மறம், தூது முதலிய பலபொருள் பற்றிய வெண்பா, கட்டளைக் கலித்துறை, விருத்தம் முதலிய பலவகைப் பாக்களால் தொடுக்கப்பெற்ற நூல். இதில் உள்ள செய்யுட்கள் அந்தாதித் தொடையால் இயன்றவை. இந்நூல் நூறு செய்யுட்களைக் கொண்டதாகும்.

திருவரங்கக் கலம்பகத்தைப் பாடியவர் திவ்விய கவி - பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் என்பவர் ; 17 - ஆம் நூற்றாண்டினர். இவர் (1) அழகர் அந்தாதி, (2) திருவரங்கக் கலம்பகம், (3) திருவரங்கத்து அந்தாதி, (4) திருவரங்கத்து மாலை, (5) திருவரங்கத்து ஊசல், (6) திருவேங்கடத்து அந்தாதி, (7) திருவேங்கடத்து மாலை, (8) நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி என்னும் சிறு நூல்களைப் பாடியுள்ளார். இவருடைய பாக்கள் இவர்தம் பக்திப் பெருக்கையும் புலமைத் திறனையும் நன்கு விளக்கவல்லவை.

### 1. அம்மானை

அம்மானை-பெண்கள் பந்துகளை மேலெறிந்து பிடிக்கும் விளையாட்டு. மங்கையர் மூவர் அம்மானை ஆடும்பொழுது பிரபந்தத் தலைவனது தன்மையைப் பேசுவது 'அம்மானை' என்னும் உறுப்பின் இலக்கணம். செய்யுளில் முதல் இரண்டு அடிகள் ஒருபெண் கூறுவன ; அடுத்த இரண்டும் வேறொரு பெண் பேசுவன ; ஈற்றடி மூன்றும் பெண் சொல்வது.

தேனமரும் சோலைத் திருவரங்கர் எப்பொருளும்
ஆனவர்தாம் ஆண்பெண் அலியலர்காண் அம்மானை ;
ஆனவர்தாம் ஆண்பெண் அலியலரே ஆமாகில்,
சானகியைக் கொள்வரோ தாரமாய்? அம்மானை ;
தாரமாய்க் கொண்டதுமோர் சாபத்தால் அம்மானை.

### 2. மறம்

தமது மகளை மணம் பேசுமாறு அரசனால் அனுப்பப்பட்ட தூதனை நோக்கி மறவன் மணம் மறுத்து, அவ்வரசனை இகழ்ந்து பேசினதாகச் செய்யுள் செய்வது **மறம்** என்னும் உறுப்புக்கு இலக்கணமாகும். மறம் - வீரம் ; மறவர் - வீரர்.

கொற்றவன்றன் திருமுகத்தைக் கொணர்ந்த தூதா !
குறையுடலுக் கோமறவர் கொம்பைக் கேட்டாய்?
அற்றவர்சேர் திருவரங்கப் பெருமாள் தோழன்
அவதரித்த திருக்குலமென் றறியாய் போலும் !

மற்றதுதான் திருமுகமே யானுல் அந்த
வாய்செவிகண் மூக்கெங்கே? மன்னர் மன்னன்
பெற்றஇள வரசானுல் ஆலின் கொம்பைப்
பிறந்தகுலத் துக்கேற்கப் பேசு வாயே.

### அருஞ்சொற்பொருள்

1. தேன் - வண்டு. தாரம் - மனைவி. சாபம் - சாபம்; பிருகு முனிவரது சாபத்தால்; வில் - சிவபிரானது வில்லை முறித்ததனுல். அலர்- அல்லர்.

2. திருமுகம் - கடிதம்; அழகிய முகம் (தலை). குறையுடல் - தலையற்ற முண்டம். கொம்பு - பெண். அற்றவர் - பற்று விட்டவர். பெருமாள் தோழன் - குகன். திருக்குலம் - உயர்ந்த வேடர்குலம். அது - நீ கொணர்ந்தது. இள அரசு - இளைய அரசமரம். ஆலின் கொம்பை - ஆலமரத்தின் கொம்பை. பேசுவாய் - மணம் பேசுவாய்.

### கேள்விகள்

1. 'அம்மானை' உறுப்பின் இலக்கணம் என்ன?
2. அம்மானை ஆடிய முதற்பெண் கூறியது யாது?
3. இரண்டாம் பெண் கேட்டது யாது?
4. மூன்றும் பெண் அளித்த விடை என்ன?
5. 'மறம்' என்னும் உறுப்பின் இலக்கணம் யாது?
6. மகட் பேசவந்த தூதனிடம் மறவன் கூறிய செய்தி யாது?

### பயிற்சி

1. திருவரங்கம், மறவர், கொம்பு, திருமுகம், ஏற்க - இவற்றை உங்கள் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறுக.

2. பெண்கள் மூவர் பேசியவற்றை வரைக.

3. மறவன் மகள் மறுத்து மொழிந்ததை உங்கள் சொந்த நடையில் எழுதுக.

4. மறவனது பேச்சுத் திறமையை விளக்கி வரைக.

5. பிரித்துக் காட்டுக:—திருவரங்கம், தேனமரும், அலியலர், கொற்றவன்றன், குறையுடல், திருக்குலம். மூக்கெங்கே, குலத்துக்கேற்ப, மற்றதுதான்.

6. சிறு குறிப்பு வரைக:—திருவரங்கம், பெருமாள் தோழன், அலி.

# 4. காந்தி பிள்ளைத்தமிழ்

காந்தி - காந்தியடிகள். பிள்ளைத்தமிழ் - தேவர், அரசர், பெருமக்கள் இவருள் ஒருவரைப் பிள்ளைப் பருவத்தினராக அமைத்து, பிள்ளைப் பருவங்களாகிய பத்துப் பருவங்கள் அமைத்து நூறு செய்யுட்களால் பாடப்பெற்ற சிறுநூல். பாட்டுடைத்தலைவனை அல்லது தலைவியைப் பொறுத்து நூல் **ஆண்பால் பிள்ளைத்தமிழ்** அல்லது **பெண்பால் பிள்ளைத்தமிழ்** எனப் பெயர் பெறும்.

ஆண்பால் பிள்ளைத்தமிழில் (1) காப்பு, (2) செங்கீரை, (3) தால், (4) சப்பாணி, (5) முத்தம், (6) வருகை, (7) அம்புலி, (8) சிற்றில், (9) சிறுபறை, (10) சிறுதேர் எனப் பத்துப் பருவங்கள் வரும். பெண்பால் பிள்ளைத்தமிழில் மேற் சொல்லப் பெற்ற முதல் ஏழு பருவங்களும் (8) அம்மானை, (9) நீராடல், (10) ஊசல் என்னும் மூன்று பருவங்களும் வரும்.

காந்தி பிள்ளைத்தமிழைப் பாடியவர் - அமராவதிபுதூர் இராய— சொக்கலிங்கம் அவர்கள் ; சிறந்த புலமை உடையவர் ; காந்தி இருபா முதலிய செய்யுள் நூல்களைப் பாடியவர் ; சிறந்த எழுத்தாளர். இவர் எப்பொழுதும் தமிழ்த்தொண்டு செய்துவருகின்றவர்.

## (1) செங்கீரைப் பருவம்

செங்கீரைப் பருவம் - குழந்தை பிறந்த ஐந்தாம் திங்களில் தன் தலையை நிமிர்த்து இங்குமங்கும் அசைந்தாடுவதைச் சிறப்பித்துக் கூறும் பகுதி.

மாநில மதில்வரு மக்கள் பிறப்பின்
    மாண்பயன் உணர்ந்தழியா
மன்பெரு வீடடை வழியை வகுத்த
    வல்லுநர் பலரெனினும்
வானவர் மண்ணவர் மற்றவ ருந்தொழ
    வான்செயல் பலசெய்த
வண்டமிழ் கன்னி வளர்த்த செழுந்தமிழ்
    வரம்பமை தித்திக்கும்
தேன்சொரி தெய்வத் தீந்தமிழ் மொழியில்
    திறம்பா அறமுரைத்த
தெய்வப் புலமைத் திருவள் ளுவனர்
    திறமெவ ருக்குவரும் !
ஆன்றவர் உரைவழி செயல்புரி அறவோய் !
    ஆடுக செங்கீரை ;
அருள்வடி வங்கொண் டவனியில் வந்தவ !
    ஆடுக செங்கீரை.

## (2) வருகைப் பருவம்

வருகை - குழந்தை பிறந்த பன்னிரண்டாம் மாதத்தில் குழந்தையை வருமாறு அழைத்தல்.

செந்நெல் விளையுந் திருநாடு
செழிக்க உலகம் தீநெறியில்
செல்லா துய்யச் சிறுமையெலாம்
சென்று தேய அறந்தழைக்க
மன்னர் செங்கோல் வழுவாது
மாண்பிற் செல்ல மதுவருந்தும்
மடமை ஒழிய மக்கள்தமை
மதியா தொதுக்கும் மருளகல
இன்னல் நல்கும் சாதிமத
இறுமாப் பேக என்னனையார்
இதயங் களிக்க விளையாட
இம்மா நிலத்திற் பிறந்தருளும்
கன்னல் அனைய திருமொழிசேர்
காந்தி ! வருக வருகவே ;
கருத்திற் கிசைந்த கஸ்தூரி
கணவா ! வருக வருகவே.

### அருஞ்சொற்பொருள்

**1.** மாண் பயன் - சிறந்த பயன். மன் - நிலைபெற்ற. வான் செயல் - பெருஞ் செயல். வண் தமிழ் - வளமுடைய தமிழ். கன்னி - குமரித் தெய்வம் ; தெற்கே கடல்கோள் வாராது குமரித் தெய்வத்தினல் காக்கப்படும் தமிழ். வரம்பு அமை - இலக்கண வரம்பு அமைந்த. திறம்பா - மாறுபடாத. திறம் - திறமை. ஆன்றவர் - (இந் நாட்டில்) பொருந்திய அறிஞர். அவனி - உலகம்.

2. திருநாடு - இந்தியா. உய்ய - நலனடைய. வழுவாது - தவருமல். மாண்பின் - சிறப்பு வழியில். மடமை - அறியாமை. மருள் - மயக்கம். இறுமாப்பு - கருவம். கன்னல் - கரும்பு. கஸ்தூரி - கஸ்தூரிபாய் ; அடிகளின் மனைவியார்.

### கேள்விகள்

1. பிள்ளைத்தமிழ் என்பது யாது ?
2. ஆண்பாற் பிள்ளைத்தமிழுக்குரிய பத்துப் பருவங்கள் யாவை ?
3. பெண்பாற் பிள்ளைத்தமிழுக்குரிய சிறப்புப் பருவங்கள் யாவை ?

4. செங்கீரைப் பருவம் என்பது யாது?

5. 'வல்லுநர் பலர்' செய்த தொண்டு யாது?

6. தமிழ் எவ்வாறு சிறப்பிக்கப்பட்டுள்ளது?

7. வல்லுநர் பலரினும் வள்ளுவர் உயர்ந்தவர் என்பதற்குக் காரணம் என்ன?

8. வள்ளுவர்க்கும் காந்தியடிகட்கும் உள்ள தொடர்பு யாது?

9. வருகைப் பருவம் என்பதை விளக்குக.

10. அடிகள் இம் மாநிலத்திற் பிறந்தருளியதற்கு ஆசிரியர் காட்டும் காரணங்கள் யாவை?

### பயிற்சி

1. பொருள் கூறுக:—மாண்பயன், மன்பெருவீடு, வான் செயல், வண்டமிழ்க்கன்னி, தெய்வத் தீந்தமிழ், திறம்பாவறம், தெய்வப் புலமை, உரை வழி, அறம் தழைப்ப, மருள், இன்னல், இறுமாப்பு, கன்னல்.

2. எதிர்ச் சொல் கூறுக:—பிறப்பு, பலர், தித்திக்கும், அறம், தீ நெறி, சிறுமை, தேய, தழைக்க, செங்கோல், மடமை, மருள், களிக்க, இசைந்த.

3. பிரித்துக் காட்டுக:—செந்நெல், செங்கோல், கருத்திற்கிசைந்த, உணர்ந்தழியா, வீடடை, வண்டமிழ், தீந்தமிழ்.

4. வாக்கியங்களிற் பயன்படுத்துக:—தெய்வப் புலமை, செழுந் தமிழ், அருள் வடிவம், திருநாடு, இறுமாப்பு, திருமொழி.

5. 'கருத்திற் கிசைந்த கஸ்தூரி கணவா'—இதனை விளக்கி, இக் கூற்றின் உண்மையை அடிகளார் வாழ்க்கை நிகழ்ச்சி ஒன்றனைக் கொண்டு நிறுவுக.

6. திருவள்ளுவரைப் பற்றிச் சிறு குறிப்பு வரைக.

7. இச் செய்யுட்களைக் கொண்டு காந்தியடிகளைப் பற்றி 15 வரிகள் எழுதுக.

# VI. பல சுவை

## 1. கலைசைச் சிலேடை வெண்பா

கலைசை - (தொண்டை நாட்டில் உள்ள) தொட்டிக்கலை என்னும் ஊர்ப் பெயரின் மரூஉ. அவ்வூரைப் பற்றிய சிலேடை வெண்பா. சிலேடை இருபொருள்படப் பாடுதல்.

இந்நூலின் ஆசிரியர் தொட்டிக்கலை - சுப்பிரமணிய முனிவர்; 18-ஆம் நூற்ருண்டின் இறுதியில் வாழ்ந்தவர்.

சேலார் செழுந்தடத்தில் செந்தா மரையினிற்றேன்
காலாறு பாயும் கலைசையே—சூலேறு
பாணியார் வேணியார் பாகீ ரதியென்னும்
பாணியார் வேணியார் பற்று. (1)

புண்ணியமெய்ப் பண்ணவரும் பொன்னனையார் பூங்குழலும்
கண்ணிவா சஞ்செய் கலைசையே—எண்ணியொரு
மன்ஞக மத்திஞன் வாரிகடைந் தோர்க்கிரங்கும்
மன்ஞக மத்திஞன் வாழ்வு. (2)

### அருஞ்சொற்பொருள்

1. சேல் ஆர் - கெண்டைமீன்கள் பொருந்திய. கால் - வாய்க்கால். ஆறு - வழி. காலாறு - ஆறு கால்களுடைய வண்டு. சூல் - சூலப்படை. ஏறு - தங்கிய. பாணியார் - கையினர். வேணி ஆர் பாகீரதி என்னும் பாணி ஆர் வேணியார் - ஆகாயத்தில் தங்கிய பாகீரதி என்னும் நீரையும் ஆத்திமாலையையும் உடைய சடையினர். பற்று - இடம்.

2. புண்ணியம் - நன்மை. மெய் பண்ணவர் - உண்மைத் தேவர்கள். கண்ணி - நினைத்து, மதித்து. வாசம் செய் - தாம் வாசம் செய்யும். கள் + நிவாசம் செய் - தேன் பொருந்தியிருக்கும். மன் + நாகம் + மத்திஞன் - வலிமை பொருந்திய மந்திரமலை என்னும் மத்திஞல். வாரி - பாற்கடல். இரங்கும் - (விடத்தை உண்டு) அருள் செய்யும். மன் ஆகமத்திஞன் - நிலை பெற்ற ஆகம நூல்களைத் தந்தருளிய சிவன். வாழ்வு - வாழும் இடம்.

### பயிற்சி

1. "சேலார் செழுந்தடத்தில் ... ... ... கலைசையே"—இவ் வரிகட்குச் சிலேடைப் பொருள் கூறுக.
2. "சூலேறு பாணியார் ... ... பற்று"—பதம் பிரித்துப் பொருள் தருக.
3. "வேணியார் பாகீரதி என்னும் பாணியார் வேணியார்"—இதில் அமைந்த வரலாற்றைத் தெரிவிக்க.
4. "புண்ணியமெய்ப் பண்ணவரும்... ... ... ...கலைசையே"—இவ்வரிகட்குச் சிலேடைப் பொருள் தருக.
5. "எண்ணியொரு... ... ...வாழ்வு"—சொல் பிரித்துப் பொருள் கூறுக.

## 2. சீட்டுக்கவி

சீட்டுக்கவி - ஒருவருக்குப் புலவர் தம் பெருமையும் தேவையும் விளங்க எழுதி விடுக்கும் பாட்டு. சீட்டுக்கவி பாடலில் அந்தகக்கவி வீர ராகவ முதலியார் பெயர் பெற்றவர். இவர் சிறந்த புலவர்; திருக்கழுக் குன்றத்துமாலை, சேயூர் முருகன் பிள்ளைத் தமிழ், திருவாரூர் உலா முதலிய நூல்களைப்பாடிப் புகழ் பெற்றவர்; 17-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்தவர்.

குதிரை வேண்டிக் குலசேகரற்கு விடுத்த சீட்டுக்கவி

ஏடாயி ரம்கோடி எழுதாது தன்மனத்
தெழுதிப் படித்தவிரகன்
இமசேது பரியந்தம் எதிரிலாக் கவிவீர
ராகவன் விடுக்கும்ஓலை
சேடாதி பன்சிர மசைத்திடும் புகழ்பெற்ற
திரிபதகை குலசேகரன்
தென்பாலை சேலம் புரந்துதா கந்தீர்த்த
செழியனெதிர் கொண்டுகாண்க:
பாடாத கந்தருவும் எறியாத கந்துகம்
பற்றிக் கொலாதகோணம்
பறவாத கொக்(கு)அனற் பண்ணுத கோடைஐம்
படையில் தொடாதகுந்தம்
சூடாத பாடலம் பூவாத மாவொடு
தொடுத்துமுடி யாதசடிலம்
சொன்னசொல் சொல்லாத கிள்ளையொன் றெங்குந்
துதிக்கவர விடல்வேண்டுமே.

### அருஞ்சொற்பொருள்

முதல் இரண்டு அடிகள் முதலியார் அந்தகர் (குருடர்) என்பதையும் நினைவாற்றல் மிக்கவர் என்பதையும் உணர்த்துவன. விரகன் - வல்லவன். சேடம் - பாம்பு. சேட + அதிபன் = பாம்புகட்குத் தலைவன்; ஆதிசேடன். வடமொழித்தொடர். புரந்து - காத்து. தாகம் - குடிகளது துன்பம். பாடாத கந்தருவம்............... கிள்ளை - இவை குதிரைக்கு வெளிப் படை. கந்தருவம், கந்துகம், கோணம், கொக்கு, கோடை, குந்தம், பாடலம், மா, சடிலம், கிள்ளை என்பன 'குதிரை' எனப் பொருள்படுமாறு அடைமொழி தந்து பிற பொருள்களினின்று பிரித்துக் காட்டிய திறம் காண்க. கந்தருவம் - (வண்டு), குதிரை. கந்துகம் - (பந்து), குதிரை. கோணம் - (பற்றிக் கொல்லும் யந்திரப் பொறி), குதிரை. கொக்கு - (ஒரு வகைப் பறவை), குதிரை. கோடை - (கோடைக்காலம்), குதிரை. ஐம்

படை - சங்கு, சக்கரம், கதை, வில், வாள். குந்தம் - (ஈட்டி), குதிரை. பாடலம் - (ஒரு வகைப்பூ), குதிரை. மா - (மாம்பூ), குதிரை. சடிலம் - (சடை), குதிரை. சொன்ன - உடன்பாட்டுப் பெயரெச்சம். சொல்லாத - எதிர்மறைப் பெயரெச்சம்.

### கேள்விகள்

1. சீட்டுக்கவி என்பது யாது?
2. அதனில் கூறப்பெறும் செய்திகள் யாவை?
3. குதிரையைக் குறிக்கும் பல்வேறு பெயர்கள் எவை?
4. கவிஞர் யாருக்குச் சீட்டுக்கவி வரைந்தனுப்பினர்?
5. கவிஞர் வேண்டுகோள் யாது?

### பயிற்சி

1. வாக்கியங்களிற் பயன்படுத்துக:—விரகன், எதிரிலா, புரந்து, சொன்னசொல், சொல்லாத.

2. பாடும் (கந்தருவம்) - உடன்பாட்டுப் பெயரெச்சம்.
   பாடாத (கந்தருவம்) - எதிர்மறைப் பெயரெச்சம்.

இப்பாடலில் வந்துள்ள எதிர்மறைப் பெயரெச்சங்களைக் கூறுக.

# 3. தனிப்பாடல்கள்

## (1) இராமசந்திர கவிராயர் பாடல்

இவர் தொண்டை நாட்டு இராசநல்லூரினர்; 19-ஆம் நூற்றூண்டில் வாழ்ந்தவர். சகுந்தலை விலாசம், பாரத விலாசம் என்னும் நாடக நூல்களைச் செய்தவர். இவர் பாடியுள்ள தனிப் பாடல்கள் பல.

வஞ்சகர்பால் நடந்தலைந்த காலிற் புண்ணும்
    வாசல்தொறும் முட்டுண்ட தலையிற் புண்ணும்
செஞ்சொல்லை நினைந்துருகும் நெஞ்சிற் புண்ணும்
    தீருமென்றே சங்கரன்பால் சேர்ந்தேன்; 'அப்பா,
கொஞ்சமல்ல பிரம்படியின் புண்ணும், வேடன்
    கொடுங்காலால் உதைத்தபுண்ணும், கோப மாகப்
பஞ்சவரில் ஒருவன்வில்லால் அடித்த புண்ணும்
    பார்'என்றே காட்டிநின்ருன் பரமன் தானே.

## (2) காளமேகப் புலவர் பாடல்

இவர் கி. பி. 16-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்தவர்; சிலேடைக் கவிகள், வேடிக்கைப் பாடல்கள், வசைப் பாடல்கள் முதலியன பாடவல்லவர். கும்பகோணத்தை அடுத்த நாதன்கோவில் என்னும் ஊரினர்.

கணபதியின் பெருவயிற்றுல் தேவர்கள் உற்ற கவலை

கம்பமத கடகளிற்றுன் தில்லை வாழும்
கணபதிதன் பெருவயிற்றைக் கண்டு வாடி
உம்பரெல்லாம் விழித்திருந்தார்; அயில்வேல் செங்கை
உடையஅறு முகவனுங்கண் ணீரா ருனுன்;
பம்புசுடர்க் கண்ணனுமோ நஞ்சுண் டான்; மால்
பயமடைந்தான்; உமையுமுடல் பாதி யானுள்;
அம்புவியைப் படைத்திடுவ தவமே என்று
அயனுமன்னம் இறங்காமல் அலைகின் றுனே.

## (3) பாரதி அறுபத்தாறு

சுப்பிரமணிய பாரதியார் இந்த நூற்றுண்டில் இருந்து மறைந்தவர். இவர் பாடிய நூல்களுள் 'பாரதி அறுபத்தாறு' என்பது ஒன்று. அது 66 செய்யுட்களையுடையது.

பெண் விடுதலை

பெண்ணுக்கு விடுதலையென் றிங்கோர் நீதி
பிறப்பித்தேன்; அதற்குரிய பெற்றி கேளீர்:
மண்ணுக்குள் எவ்வுயிரும் தெய்வம் என்றுல்
மனையாளும் தெய்வமன்றே? மதிகெட் டீரே!
விண்ணுக்குப் பறப்பதுபோற் கதைகள் சொல்வீர்;
விடுதலைஎன் பீர்; கருணை வெள்ளம் என்பீர்;
பெண்ணுக்கு விடுதலைநீர் இல்லை என்றுல்
பின்னிந்த உலகினிலே வாழ்க்கை இல்லை.

## (4) மலரும் மாலையும்

மலரும் மாலையும் என்னும் இந்நூலை இயற்றிய ஆசிரியர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.

விண்ணப்பம்

பருவமழை பொய்யாது பெய்ய வேண்டும்;
பயிர்களெல்லாம் செழித்தோங்கி வளர வேண்டும்;
தருமநெறி தவருது தழைக்க வேண்டும்;
சாதிமதச் சண்டையெலாம் ஒழிய வேண்டும்;

திருமகளும் கலைமகளும் சிறக்க வேண்டும் ;
தேசாபி மானமெங்கும் திகழ வேண்டும் ;
கருமமெலாம் நற்கரும மாக வேண்டும் ;
காந்திமதி ! நின்னடிகள் வாழ்த்தி னேனே.

### அருஞ்சொற்பொருள்

#### (1) இராமசந்திர கவிராயர் பாடல்

வறுமையாற் கவிபாடி வஞ்சகரிடம் சென்றமை. செஞ்சொல் - சிவந்த சொல், கொடாதவர் கூறிய கடுஞ்சொல். சங்கரன் - உயிர்கட்கு இன்பத்தைச் செய்பவன். பிரம்படியின் புண் - பிட்டுக்கு மண் சுமந்த வரலாறு. வேடன் கொடுங்காலால் உதைத்தது - கண்ணப்பர் வரலாறு. கோபமாகப்..........அடித்தது - அருச்சுனன் தவம் செய்தபோது சிவன் வேடனாகச் சென்று போரிட்ட வரலாறு.

#### (2) காளமேகப் புலவர் பாடல்

கம்பம் - கட்டுத்தறி. கடகளிறு - மதயானை. களிறு - ஆண்யானை × பிடி - பெண்யானை. களிற்றான் - வினையாலணையும் பெயர். தில்லைவாழும் கணபதி - முக்குறுணி அரிசிப் பிள்ளையார். உம்பர் - தேவர். விழித்திருந்தார் - இமையா நாட்டம் பெற்றனர். அயில் - கூரிய. பம்புசுடர்க் கண்ணன் - ஒளி வீசும் கண்களையுடைய சிவன். மால் - திருமால். உமை உடல் பாதியானுள் - சிவன் உடலிற் பாதியானுள். அயன் - பிரமன். இது சமத்காரமாகப் பாடிய பாட்டு.

#### (3) பாரதி அறுபத்தாறு

பெற்றி - தன்மை. மனையாள் - மனைவி. சொல்லால் - 'பெண் விடுதலை தேவை' எனப் பேசிச் செயலிற் செய்யாதிருத்தல்.

#### (4) மலரும் மாலையும்

திருமகள் - செல்வவளம். கலைமகள் - கல்விவளம். தேசாபிமானம் - நாட்டுப் பற்று. காந்திமதி - திருநெல்வேலியில் கோயில்கொண்டுள்ள அம்மன் ; காந்திமதியம்மை.

### கேள்விகள்

1. கவிராயர் யாது கருதிச் சங்கரன்பால் சென்றார் ?
2. சங்கரன் கவிராயருக்கு அளித்த பதில் யாது ?
3. கணபதியின் பெருவயிற்றைக் கண்டு வாடி, யாவர் என்ன ஆயினர் ?
4. பாரதியார் பெண்விடுதலையைப் பற்றி ஏன் வற்புறுத்துகிறார் ?
5. தேசிகவிநாயகம் பிள்ளை காந்திமதியம்மையை வேண்டுவன யாவை ?

### பயிற்சி

1. வேடிக்கையாகப் பாடுவதில் காளமேகப் புலவர் கைதேர்ந்தவர் என்பதை 15 வரிகளில் தெரிவிக்க.
2. பெண்விடுதலையைப் பற்றிய பாரதியார் கருத்தினைப் பத்து வரிகளில் தெளிவுறுத்துக.
3. கவிமணி விடுக்கும் விண்ணப்பத்தை உமது சொந்த வாக்கியங்களில் வரைக.

# உரை மாலை

## 1. நாகரிகம்*

திரு P. இராமநாதன் அவர்கள், M.A.

[இவ்வாசிரியர் திருச்சூர் செயின்ட் தாமஸ் கல்லூரி ஆங்கிலப் பேரா சிரியர்; சிறந்த தமிழறிவு உடையவர். இப்பாடம் இவர் எழுதியுள்ள "அறிவியல் கட்டுரைகள்" என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.]

1. நாகரிகம்: நாகரிகம் என்னும் சொற்பொருள் நாட்டுக்கு ஏற்றாற் போல வேறுபடுகின்றது; மக்கள் அறிவு நிலைக்கு ஏற்றவாறும் வேறுபடுகின்றது. மேனாடுகளில் இச் சொல் நாகரிக உடை, உணவு, இயந்திரப் பெருக்கம், செல்வச் செருக்கு ஆகியவற்றின் திரட்சியைக் குறிக்கின்றது. ஆனால், நம் தாய்நாட்டில் இச்சொல் மெய்யான மனிதத்தன்மையைக் குறிக்கின்றது. அன்பு, அருள், அறிவு, அடக்கம் இவற்றின் திரட்சியே 'நாகரிகம்' என்று நம் முன்னோர் அறைந்துள் ளனர். இவை இல்லாமல் மனிதன் உடை, உணவு, இயந்திரப் பெருக்கம், செல்வம் இவற்றை எளிதில் எய்துதல் கூடும். ஆயின், அந்நிலையில் அவன், 'நாகரிக மனிதன்' என்று கருதப்படல் யாங்ஙனம் இயலும்? அதர்மத்தாலும் பெறக் கூடிய இப்போக பாக்கியங்கள் மனிதனுக்கு இறப்பைவிடக் கொடியனவாகவும் மாறுகின்றன. எனவே, இவை நாகரிகச் சின்னங்கள் ஆகா. நாகரிகம் என்பது உலகக் கூட்டு வாழ்க் கையில் மனிதன் தன் கடமைகளை உணர்ந்து அறவழியில் நடப்பதே என்னலாம். 'உண்மை நாகரிகம்' என்பது உயிர்த்தொடர்புடையதேயன்றி இயந்திரப் பெருக்கத்தின் தொடர்புடையதன்று. இயந்திரப் பெருக்கமும் செல்வப் பெருக்கமும் மனித முன்னேற்றம் என்றும், அம்முன்னேற் றமே 'நாகரிகம்' என்றும் மேனாட்டு மக்களால் கருதப்படு கின்றன. ஆனால் இவை உயிர்த்தொடர்புடையன அல்ல!

* உலக மகா கவியாகிய இரவீந்திரநாததாகூர் தமது உலகப் பிரயா ணத்தின்போது பற்பல நாடுகளில் சொற்பொழிவுகள் பல நிகழ்த்தியுள் ளார். அச்சொற்பொழிவுகளில் பொதிந்து கிடக்கும் முதிர்ந்த கருத்துக்கள் பலவாகும். அம்முதிர்ந்த கருத்துக்களில் ஒருசில ஈண்டுக் கூறப்பட் டுள்ளன.

**2. நாகரிகச் செயல்:** ‘வலியச் சென்று உதவிபுரிதல்’ என்பது நாகரிகத்தின் பண்புகளில் ஒன்றுகும். இதனைப் பின்வரும் உதாரணத்தால் நன்கறியலாம். பகைவர் ஒரு கிராமத்தின்மீது வானவூர்தியினின்றும் குண்டுகளைப் பொழிந்துகொண்டிருந்தனர். அப்பொழுது அவர்களது வான வூர்தி ஒன்று இயந்திரம் கெட்டுக் கீழே விழுந்தது. அதில் இருந்த பகைவர் கீழிறங்கினதும் அந்தக் கிராமத்துப் பெண்கள் சிலர் உடைவாளை ஏந்தி அவர்களைக் குத்த நின்றனர். அவ்வமயம், நங்கை ஒருத்தி அவண் தோன்றி, அப்பகைவரை இன்முகத்தோடு வரவேற்று, ஒரு குகைக்கு அழைத்துச் சென்றுள்; அங்ஙனம் செல்லும்போது பகைவருடைய வெடி குண்டுகள் வீழ்ந்தவண்ணமாகவே இருந்தன. நங்கை அப் பகைவரை—தன் கிராமத்தையே அழிக்கும் தொண்டில் ஈடுபட்டிருந்த கூட்டத்தினருள் சிலரை—அன்றிரவெல்லாம் அக்குகையில் இருக்கச் செய்தாள்; உண்டி வழங்கினுள். இச்செயல் எதனைக் குறிக்கிறதென்பதை எண்ணிப் பார்மின். இதுவே மனிதத் தன்மை. ‘பகைவனையும் நண்பனுக நினை,’ என்னும் பெரியோர் வாக்குக்கு இணங்க நடந்த எழிலுடைய நங்கையே நாகரிகத்தை உள்ளவாறு உணர்ந்தவள் ஆவாள். அவள் பகைவர்க்கு உதவி செய்துகொண்டிருக்கையிலும் அப்பகைவரைச் சேர்ந்தோர் குண்டுமாரி விடாமற் பொழிந்துகொண்டிருந்தமை எதனை உணர்த்துவது என்பதை நீங்களே எண்ணிப் பாருங்கள். மனச்சாட்சி, மனிதத்தன்மை என்பனவற்றையும் கடந்த நிலையில் உள்ள இயந்திரப் பெருக்கம் நாகரிகம் ஆகுமா? எளிய நிலையுடைய எழிலுறு நங்கை மனிதத்தன்மையோடு பகைவரிடம் நடந்து கொண்ட பான்மை நாகரிகம் ஆகுமா? கூறுமின்.

**3. நாகரிகத்தின் உயிர்நாடி:** கிராம மக்கள் வறுமையில் வாடி இருப்பினும் எத்துணைப் பேரன்புடன் புதியவருடன் பழகுகின்றனர்! உபசரிக்கின்றனர்! நகர மக்கள் ஒரு குடம் தண்ணீருக்கும் காலணு வாங்காமல் விடார்; ஆனுல் எளிய கிராம மக்கள் குடம் குடமாகத் தண்ணீர் தந்து மலர்ந்த முகத்தோடு வறிதே செல்வர்; பணம் தரினும் பெற மறுப்பர். ‘ஆபத்தில் உதவி,’ ‘விருந்

தோம்பல்' என்னும் உயரிய பண்புகள் அவ்வேழை மக்களிடம் குடிகொண்டுள்ளன. கல்வியற்ற—செல்வமற்ற எளிய கிராம மக்களின் 'வெளிய மனப்பான்மை'யே நாகரிகத்தின் உயிர்நாடியாகும். மக்கள் இதனைப் பிறவியிலேயே பெற்றிருத்தல் வேண்டும். இது பிறரைப் பார்த்துக் கொள்ளத் தக்கதன்று.

4. **கோர மாளிகை:** இம்மனப்பான்மை, இக்காலக் கேடுகெட்ட நாகரிகத்தால் பற்றப்படுமாயின்,—பேராசைக்கு அடிமைப்படுமாயின், அன்றே உண்மை நாகரிகம் தொலைந்த தென்னலாம். அன்பு, அருள், அடக்கம், ஆன்மவுணர்வு என்பன மேனாட்டு மக்கள் வாழ்க்கையில் குடிகொண்டிருந்த காலம் ஒன்றுண்டு. அந்நாடுகளில் அவை குடிகொண்டிருந்தவரை இரக்கம், ஈதல் முதலிய நல்லியல்புகள் மேனாட்டு மக்களைப் பிணித்துக்கொண்டிருந்தன. மக்கள் அவற்றைக் கைவிட்ட பின்னர், அந்நாடுகளில் இயந்திர மனப்பான்மை குடிகொண்டு விட்டது. அதன் பயனாக, அவை பிறநாடுகளை இயந்திர பலத்தால் அடக்கி ஆளத் தலைப்பட்டன. இப் பேராசையே இன்றைய உலகத் துன்பங்கட்கெல்லாம் அடிப்படையாகும். பேராசை என்னும் அடிப்படைமீதுதான் இன்றைய உலகத் துன்பங்கள் என்னும் 'கோர மாளிகை' கட்டப்பட்டுள்ளது.

5. **செல்வமும் ஒழுக்கமும்:** பேராசை மக்கள் தொகுதிக்கே தீமையானது. அதனை அறவே நீக்குதல் நன்மக்கள் கடனாகும். நிறத்திமிர், செல்வப் பெருக்கம் இவை உண்மை நாகரிகக் குறிகள் ஆகா. ஆன்ம அமைதியும் நேரிய வாழ்க்கையுமே நாகரிகச் சின்னங்கள் ஆகும். பணப்பித்து மக்கள் மனத்தைவிட்டு அகலும் நாளே உண்மை நாகரிகம் உதயமாகும் நன்னாள் ஆகும். நமது தாய்நாட்டில் பண்டைக் காலத்தில் பணத்துக்குத் 'தனி மதிப்பு' இல்லை. அது மக்கட்கு அவசியமானதேயாயினும், அதற்கெனத் தனி இடம் ஒன்று மக்கள் சமூகத்தில் உண்டு. அதற்கு 'முதல் இடம்' இல்லை. ஆனால் இன்று அப் பணமே 'முதல் இடம்' பெற்றுள்ளது. இம்மாறுதலே இந்தியர் வீழ்ச்சிக்கு உற்றதொரு காரணம் ஆகும். செல்வம் ஒருபோதும்

ஆன்ம வளர்ச்சிக்கு உதவி புரிந்ததில்லை; உதவி புரியவும் அதற்கு ஆற்றல் இல்லை. இதனை நம் முன்னோர் நன்கறிந்திருந்தனர். அதனாற்றான் அப்பேரறிஞர் ஆத்ம சிந்தனை உடையவரைப் பெருமைப்படுத்திப் பேசினர்; அவர்களைத் தம் சமூகத்து உயர்மக்களாகக் கருதினர். அப்பேரறிஞரும் இழிந்த மனப்பான்மை அற்றவராய், வாழ்க்கையின் மேலான குறிக்கோள்களைப் பின்பற்றி வாழ்ந்துவந்தார்கள்; 'உயரிய கொள்கைகள்' என்னும் அடிப்படைமீது 'நாகரிக வாழ்க்கை' என்னும் தங்கள் கவினுறு மாளிகையைக் கட்டினார்கள். அப்பேரறிஞரே 'நாகரிகம் முற்றிய மனிதர்' எனப்படுவர். அப்பேரறிஞர் இந்நாட்டில் வாழ்ந்தமையாற்றான் நம் தாய்நாடு உலக நாகரிகத்துக்கோர் எடுத்துக்காட்டாக இலங்கியது.

6. **நாகரிகச் சின்னங்கள்:** இத்தகைய உயரிய நிலையில் இருந்த இந்தியா, இன்று தனது பழைய பெருமையை இழந்திருப்பதன் காரணம் என்ன? இன்றுள்ள இந்தியரிடை எளிய வாழ்க்கை, ஆத்ம சிந்தனை, உயர்குணங்கள், ஒழுக்க மேம்பாடு, சமத்துவம் முதலிய நாகரிகச் சின்னங்கள் வலிமை இழந்து வாடலே சிறப்புடைக் காரணமாகும். இவையாவும் நன்முறையில் அமையப் பெறும்நாளே 'இந்தியர் நாகரிகம் உடையவர்' என உலக அறிஞரால் அழைக்கப்பெறும் நன்னாள் ஆகும்.

### அருஞ்சொற்பொருள்

எய்துதல் - அடைதல். அதர்மம் - தவறான வழி. எத்துணை - எவ்வளவு. வீழ்ச்சி - நிலைகெடுதல்.

வானவூர்தி - ஆகாயவிமானம். எழில் - அழகு. வெளிய - கள்ளம் கபடு இல்லாத. உற்ற - பொருந்திய. கவினுறு - அழகு பொருந்திய. விருந்து - விருந்தினர், பண்பாகு பெயர். ஓம்பல் - உபசரித்தல்.

### கேள்விகள்

1. எவற்றின் திரட்சியே 'நாகரிகம்' எனப்படும்?
2. எவை நாகரிகச் சின்னங்கள் ஆகா?
3. வலியச் சென்று உதவி புரிதலுக்கு மேற்கோளாகக் காட்டப்பட்ட நிகழ்ச்சி யாது?
4. ஏழை மக்களிடமே நாகரிகம் குடிகொண்டுள்ளது.—இதனை மெய்ப்பிக்கும் சான்றுகள் எவை?

5. ஏழை மக்களிடம் குடிகொண்டிருப்பவை யாவை?

6. நாகரிகத்தின் உயிர்நாடி யாது?

7. மேனாட்டு மக்களிடம் முன்பு குடிகொண்டிருந்தவை யாவை?

8. இன்றைய உலகத் துன்பங்கட்கெலாம் அடிப்படை யாது?

9. எவை உண்மை நாகரிகக் குறிகள் ஆகா?

10. எப்பொழுது உண்மை நாகரிகம் உதயமாகும்?

11. 'பணத்திற்கு முதல் இடம்' என்பது பற்றி ஆசிரியர் கூறுவது யாது?

12. இன்றைய இந்தியா தன் பழம்பெருமையை இழந்திருக்கக் காரணம் யாது?

## பயிற்சி

1. வாக்கியங்களிற் பயன்படுத்துக:—எழிலுறு, மனிதத்தன்மை, கடந்த நிலைமை, மனப்பான்மை, நேரிய வாழ்க்கை, மேம்பாடு.

2. பிரித்து எழுதுக:—அறவழி, உயிர்த்தொடர்புடையன, அன்றிர வெல்லாம், ஈடுபட்டிருந்த, மனப்பான்மை, நன்னாள், கவினுறு, இன்முகம், வரவேற்று, அப்பகைவர், நன்கறியலாம்.

3. பொருள் கூறுக:—கவின், ஓம்பல், கைவிட்ட, கோரமாளிகை, குறிக்கோள், அமைய, எளிய, அறவழி, திரட்சி, கடந்த, தலைப்பட்டன.

4. குறிப்பு எழுதுக:—பகைவனையும் நன்பனாக நினை, மனச்சாட்சி, வெளிய மனப்பான்மை, கோரமாளிகை, இயந்திர மனப்பான்மை, ஆத்ம சிந்தனை.

5. 'பணத்திற்கு முதலிடம்' என்பது குறித்து உங்கள் கருத்துக்களைத் தொகுத்து ஒரு கட்டுரையாக வரைக.

6. 'நாகரிகம்' என்னும் தலைப்பில் இப்பாடப் பொருளைச் சுருக்கித் தக்க குறிப்புக்களுடன் ஒரு கட்டுரை எழுதுக.

7. இந்தியாவின் முன்னேற்றத்திற்குத் தேவையான நாகரிகப் பண்புகளைக் குறிப்பிட்டு 20 வரிகளில் ஒரு கட்டுரை வரைக.

# 2. குளிர்கால வருணனை

**திரு. மயிலை. சிவ. முத்துக்குமாரசுவாமி முதலியார் அவர்கள்**

[இவ்வாசிரியர் சென்னை முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியராயிருந்தவர்; பல பாட நூல்களின் ஆசிரியர்; பேச்சிலும் எழுத்திலும் வல்லவர். இவரே சென்னை மாணவர் மன்றத்தை நடத்தி வரும் பெரியார்.]

1. **வருணனை** என்பது நேரில் கண்டு வியந்த ஒன்றினைக் குறித்து ஒருவன் பிறனொருவனிடம் அழகு பெற விளக்கிக் கூறுதல் ஆகும். இதனைத் தமிழர் அணி எனவும், வடமொழியாளர் அலங்காரம் எனவும் உரைப்பர்.

2. புலமை மிகுந்த பெரியோர், தம் மனோ சக்தியினால், தாம் கனவிலும் கண்டறியாத ஒன்றினைக் குறித்தும் சொல்லழகு பொருளழகு ததும்பப் புனைந்து கூறுவர். அவ்வருணனைகள் பல்வகைப்பட்டிருப்பினும், பொதுவாக உயர்வு நவிற்சி, இயல்பு (தன்மை) நவிற்சி என்னும் இருவகையுள் அடங்கிவிடும்.

3. 'மலைபோன்று உயர்ந்த தோள்கள்', எனவும், 'கடல் போன்று அகன்ற கண்கள்,' எனவும் கூறப்படுவன உபசார உரைகளே அன்றி உண்மையுரைகள் அல்லவாகலின், உயர்வு நவிற்சியேயாகும். 'மாந்தளிர் போன்ற மேனி,' எனவும், 'மாவடு வகிர்ந்தாலொத்த கண்கள்,' எனவும் வருவன பெரிதும் பொருத்தமுடைமையின், இயல்பு நவிற்சி (தன்மை) யுள் அடங்கும். அன்றியும், உவமை சிறிதும் இன்றி, உள்ளன உள்ளவாறே கூறப்படுவனவும் இயல்பு நவிற்சியேயாகும்.

4. முற்காலத்தே நம் தமிழ் நாட்டிலே பெரும்புகழ் கொண்டு விளங்கிய புலவர் பலரும் இயற்கை வருணனையினையே பெரிதும் போற்றிவந்தனர். அத்தகைய பெரும் புலவருள் ஒருவராகிய **நக்கீரனார்** பாடிய **நெடுநல்வாடை** என்**னும்** பாட்டில் வரும் குளிர் கால வருணனையினை உரை நடையில் ஒருவாறு சுருக்கிக் கூறுகின்றேன்.

5. உலகமெல்லாம் குளிரும்படி மேகம் கார் காலத்து மழையினைப் பெய்தது. வளைந்த கோலினைத் தாங்கிய இடை

13556

யர், அம்மழை வெள்ளத்தின் மிகுதியைக் கண்டு வெறுத்துத் தம் ஆடு மாடுகளை மேட்டு நிலங்களிலே மேய விட்டுத் தம் இருப்பிடம் நீத்து வேறு இடம் தேடல் நேர்ந்தமைக்கு வருந்தலாயினர். அவர்கள் அணிந்திருந்த பூமாலைகள் மழையினால் நிலை குலைந்திருந்தன. அவர்தம் பற்கள், குளிர் தாங்காது பறை கொட்டலாயின. ஆதலின், அவர்கள் ஒன்று கூடித் தங்களிடமிருந்த நெருப்புச் சட்டியில் கையைக் காய வைத்துக் கன்னங்களில் ஒற்றிக்கொள்ளலானார்கள்.

6. குளிரின் மிகுதியால், ஆடு மாடுகள் மேய்தற்றொழிலையும் மறந்து ஏங்கி நின்றன. குரங்குகள் கூனிட்டுக் கிடந்தன. மரங்களில் தங்கி இருந்த பறவைகள் வாடையின் கொடுமை பொறுது நிலத்தே விழுந்தன. பசுக்கள் குளிர் மிகுதியால் தங்கள் கன்றுகளுக்குப் பால் கொடாது அவைகளை உதைத்துத் தள்ளின.

7. மழை வெள்ளத்தின் வேகத்திற்கு ஆற்றாத கெண்டை மீன்கள் மெதுவாக நீர் வற்றிய மணற்றிட்டுகளின் அருகே வர, அவற்றின் வருகையை நோக்கி வாடியிருந்த பைங்காற் கொக்குகளும், செவ்வரி நாரைகளும் ஆங்காங்கே இருந்து, அவற்றைப் பிடித்துத் தின்னலாயின.

8. நீர் நிறைந்த அகன்ற வயல்களில் செழுமையுடன் வளர்ந்திருந்த நெற்கதிர்கள் மழையினால் தலை வணங்கி நின்றன. பருத்துயர்ந்த கமுக மரங்களின் குலைகள் உருண்டு திரண்ட பசுங்காய்களுடன் கண்களுக்கு அழகு தந்து நின்றன. மணமிகுந்த மலர்களைக் கொண்டிருந்த அகன்ற சோலைகள், மழையின் மிகுதியால் பூக்கள் உதிரவும் நீர்த்துளிகள் துளிக்கவும் நின்றன.

9. இரு புறங்களிலும் மாட மாளிகைகள் ஓங்கி விளங்க, இடையே ஆறு போன்று அகன்றிருந்த நீண்ட வீதிகளில், இறுகிய தோளும் முறுக்கேறிய உடலும் பெற்ற மிலேச்சர், கள்ளுண்டு மகிழ்ந்து, சிறு தூறலுக்கும் அஞ்சாராய்த் திரியலாயினர்.

10. மழையினால் பொழுதறிய இயலாத மகளிர், தட்டில் இருந்த பிச்சிப் பூக்கள் மலர்ந்ததால் மாலைப் பொழுதாயினமை உணர்ந்து, நெல்லையும் மலரையும் தூவித் தம் இல்

லுறை தெய்வத்தை வணங்கலாயினர். வீட்டில் வளரும் புருக்கள், மழையினுல் இரவு பகல் அறியாது, இரையுண்ண வும் விரும்பாது, பறத்தலும் தவிர்த்துக் கால் மாறி நின்று காலங் கழித்தன.

11. காவலோடு கூடிய பெரிய மாளிகைகளிற் குற் றேவல் புரியும் இளைஞர், கரிய சாந்தம்மியிலே கத்தூரி முதலிய வாசனைக் கலவையினை அரைக்க வடநாட்டினின்று கொணர்ந்த வெண்கல், தென்றிசைச் சந்தனக் கட்டையுடன் பயனின்றிக் கிடந்தது.

12. குளிரின் மிகுதியால் மகளிர் தம் கூந்தலினை மாலை யிட்டு முடியாமல் மங்கலமாகச் சில மலரிட்டு முடிக்க விரும் பிச் சந்தன விறகிலே நெருப்பை உண்டாக்கி, அதிலே அகிற் கட்டையினையும், கண்ட சருக்கரையையும் கூட்டிப் புகைத் தனர்.

13. பல வேலைப்பாடுகளுடன் விளங்கிய சிவந்த ஆல வட்டம், உறையிடப் பெற்றுச் சிலந்தி வலை சூழ, வளைந்த மரச் சட்டத்திலே தொங்கிக்கொண்டிருந்தது. பெரிய மாளி கையில் தென்றலின் பொருட்டுத் தென்புறமாக அமைக்கப் பட்டிருந்த கதவுகள் அழுத்தமாகத் தாளிடப்பட்டுக் கிடந் தன. வாடையின் கொடுமையால், மக்கள் குவிந்த வாயினை யுடைய குடத்திலிருந்த தண்ணீரை உண்ணுதவர்களாய், அகன்ற வாயினையுடைய கலயங்களில் இட்ட நெருப்பின் வெம்மையினை விரும்பினுர்கள்.

14. மாணவர்களே, இப்புலவர் பெருமானுர் குளிர்காலத் தின் இயல்பினைப் புனைந்துரை சிறிதும் இன்றி அழகுபெற விளக்கிக் கூறியிருத்தலைக் கூர்ந்து நோக்கி இன்புறுங்கள். சிறந்த ஓவியப் புலவனுலும் சித்தரித்துக் காட்ட இயலாத சின்னஞ்சிறு நிகழ்ச்சிகளையும் இப்புலவர் தம் நுண்ணுணர் வால், கற்போர் உள்ளம் கவருமாறு எடுத்துரைக்குந் தன்மை பெரிதும் பாராட்டற்பாலது. பண்டைத் தமிழ் நூல்களில் இத்தகைய வருணனைகள் மலிந்திருத்தலை நாம் காணலாகும்.

அருஞ்சொற்பொருள்

புலமை - அறிவு. நவிற்சி = நவில் + சி = சொல்லுதல், தொழிற் பெயர். மேனி - நிறம். வகிர்ந்தால் - பிளந்தால். நெடுநல் வாடை -

பத்துப்பாட்டு என்னும் சங்ககாலப் பாடல்களுள் ஒன்று; தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்மீது பாடப்பட்டது. வாடை - குளிர்காற்று. பைங்கால்=பசுமை+கால். செவ்வரி நாரை - நாரைகளுள் ஒருவகை. மிலேச்சர் - அநாகரிக மக்கள். கண்ட சருக்கரை - ஒருவகைச் சர்க்கரை. ஆலவட்டம் - பெருவிசிறி. புனைந்துரை - தானே கட்டிச் சொல்லும் உரை. நுண்மை+உணர்வு=நுண்ணுணர்வு. மலிந்து - மிகுந்து.

### கேள்விகள்

1. வருணனை என்பது யாது?
2. இயல்பு நவிற்சி, உயர்வு நவிற்சி என்பன யாவை? உதாரணங்கள் தருக.
3. நெடுநல்வாடை யாரால்-யார்மீது பாடப்பட்டது?
4. கார்காலத்தில் இடையர் என்ன செய்தனர்?
5. குளிரினைத் தாங்காது கால்நடைகளும் பறவைகளும் என்ன செய்தன?
6. கார்காலத்தில் நெற்கதிர்கள், பாக்குமரங்கள், பூஞ்சோலைகள் எவ்வாறு இருந்தன?
7. சிறு தூறலில் மிலேச்சர் யாது செய்தனர்?
8. மகளிர் எவ்வாறு காலத்தை உணர்ந்தனர்? உணர்ந்து யாது செய்தனர்?
9. மகளிர் எவ்வாறு தம் கூந்தலைப் புகையூட்டி முடித்துக்கொண்டனர்?
10. வீட்டின் கதவுகள் எப்பக்கமாக அமைக்கப்பட்டிருந்தன? ஏன்?

### பயிற்சி

1. வாக்கியங்களிற் பயன்படுத்துக:—மனோசக்தி, உயர்வு நவிற்சி, இயல்பு நவிற்சி, மாவடு, மாந்தளிர், சொல்லழகு, பொருளழகு, பொருது, வேலைப்பாடு.

2. இப்பாடத்தினைப் படித்து, ஒவ்வொரு பத்திக்கும் ஏற்ற தலைப்புத் தருக.

3. இப்பாடப் பொருளைச் சுருக்கி 25 வரிகளில் ஒரு கட்டுரையாக வரைக.

4. பிரித்துக் காட்டுக:—பிறனொருவன், கண்டறியாத, முற்காலம், நெற்கதிர், அணிந்திருந்த, பசுங்காய், முறுக்கேறிய, மணற்றிட்டுகள், வாடியிருந்த, பொழுதாயினமை, மலரிட்டு.

5. பொருள் கூறுக:—மலிந்து, இரை, இறை, குற்றேவல், கண்ட சருக்கரை, வாடை, பறை, மிலேச்சர், பொருது, நவிற்சி.

# 3. சோழர் காலத்தில் கிராம ஆட்சி

**திரு. மு. சண்முகம் அவர்கள், B.A. (Hons.)**

[இவ்வாசிரியர் அண்ணுமலைப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர்; எளிய-இனிய தமிழ்நடை எழுதுவதில் வல்லவர். இப்பாடம் இவர் எழுதிய "முடி மன்னர் மூவர்" என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.]

1. **கிராம ஆட்சி :** சோழர் காலத்தில் கிராம ஆட்சி கிராமத்தார் கையிலேயே விடப்பட்டிருந்தது. அதற்கென ஓர் அவையைத் தேர்ந்தெடுத்து, அதனைப் பல வாரியங்களாகப் பிரித்திருந்தனர். அவற்றுள் **சம்வத்சர வாரியம்** குற்றம் செய்தவர்களுக்கு நியாயம் வழங்கியும், அறநிலையங்களைக் கண்காணித்தும் வந்தது. **ஏரி வாரியம்** ஏரி, குளம், ஊருணி முதலிய நீர்நிலைகளைப் பாதுகாத்து, நீர்ப்பாசன வசதிகளைப் புரிந்துவந்தது. **தோட்ட வாரியம்** புன்செய் நிலம், தோட்டம் முதலியவைகளைக் கண்காணித்துவந்தது. **பஞ்ச வாரியம்** அரசாங்கத்திற்குரிய தானியங்களைக் குடிகளிடமிருந்து பெற்று, அரசாங்கத்தாரிடம் ஒப்படைத்துவந்தது. **பொன் வாரியம்** பல வகையானும் பெற்ற செப்புப் பொற்காசுகளை ஆராய்ந்து அவற்றின் உண்மை கண்டுவந்தது.

2. **இவ்வவையில் உறுப்பினர் ஆதற்குரியர் :** (1) முப்பத்தைந்து வயதிற்குமேல் எழுபது வயதிற்கு உட்பட்டவர்களாயிருத்தல் வேண்டும்; (2) ஒவ்வோர் உறுப்பினரும் அவ்வக்குடும்பில் வாழ்பவராதல் வேண்டும்; (3) அரசாங்க வரி கொடுத்தற்குரிய கால்வேலி நிலத்திற்குக் குறையாத நிலமுடையராதல் வேண்டும்; (4) தமது சொந்த மனையில் வீடு கட்டி வாழ்பவராதல் வேண்டும்; (5) வேத சாஸ்திர வல்லுநராயும், காரியநிபுணராயும் இருத்தல்வேண்டும்; (6) நல்வழியிற் பொருள் தேடியவராயும் தூய ஆன்மாவுடையவராயும் இருத்தல் வேண்டும்; (7) மூவாண்டிற்குள் எந்த வாரியத்திலும் உறுப்பினராயிராதவராதல் வேண்டும்.

3. **உறுப்பினராதற்கு உரிமையற்றவர் :** (1) பிறர் மனை நயந்தோர்; களவு, கொலை, கள், சூது என்ற பெருந் தீவினைகள் செய்தோர்; இவர்க்கு உறவினர்; (2) தீயோர் சேர்க்கையுடையோர் (இவர் பிராயச்சித்தம் செய்த பின்பு

உறுப்பினராகலாம்.); (3) நன்மையைத் தீமையென்றும், தீமையை நன்மை யென்றும் விதண்டாவாதம் புரிபவர்; (4) கையூட்டுப் பெற்றோர்; (5) குற்றஞ்செய்து கழுதையேறின வர்கள்.

4. **தேர்தல் முறை**: பொதுமக்களே கிராம சபையின் உறுப்பினரை ஆண்டுதோறும் தேர்ந்தெடுப்பர்; இதற்கென ஒவ்வொரு ஊரையும் பல குடும்பிகளாகப் பிரித்திருந்தனர். தேர்தல் குறித்த நாளில் ஒவ்வொரு குடும்பிலுமுள்ளார் தமக் குத் தகுதியுடையார் என்று தோன்றுபவருடைய பெயரைத் தனித்தனி ஓலையில் எழுதி, அவ்வோலைகளை ஒருங்கு சேர்த்து, அவை எக்குடும்பிற்குரிய எனப் புலனாம்வண்ணம் அக்குடும்பின் பெயர் எழுதிய வாயோலை யொன்றைச் சேர்த் துக் கட்டிக் குடத்தில் இடுவர். இவ்வாறே ஒவ்வொரு குடும் பிலும் நடைபெறும். பின்னர்ச் சபை கூடுதற்கு அமைக்கப் பட்ட மாளிகையில் அவ்வூரிலுள்ள இளைஞர் முதல் முதியோர் ஈறாக உள்ள அனைவரும் கூடுவர். அக் கூட்டத்தினிடையே ஒரு குடம் வைக்கப்பெறும். அவ்வூர் நம்பிமாரும் அங்கிருப் பர். அவர்களுள் வயது முதிர்ந்தோர் ஒருவர் அக்குடத்தை எடுத்து, அதனுள் ஒன்றுமில்லை என்பதை எல்லாருக்கும் காட்டிக் கீழே வைப்பர்.

5. பின்னர், பகலிரவு என்ற வேறுபாடு அறியாத ஓர் இளைஞனைக் கொண்டு, ஓரோலைக் கட்டை எடுப்பித்து, அதனை அவிழ்த்து, வேறோர் குடத்திலிட்டுக் குலுக்கி, அவற் றுள் அச்சிறுவனைக்கொண்டே ஓலை ஒன்றை எடுக்கச் செய்வர். அதனை அந் நம்பியார் பெற்று, அதனுள் எழுதப் பெற்ற பெயரை எல்லோரும் அறியப் படித்துக் காட்டி, ஏனைய நம்பிமாரையும் படிக்கச் செய்வர்; பின், கரணத் தானைக் கொண்டு, அப்பெயரைக் குறிப்பிடுவர். அப்பெய ருடையவரே அக்குடும்பின் உறுப்பினர். இவ்வாறே ஒவ் வொரு குடும்பிற்கும் உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்படுவர். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரை, முற்கூறிய ஐந்து வாரியங்களிலும் ஒவ்வொன்றிற்கும் இத்தனை பேர் என்று பிரித்துப் பணியாற்றச் செய்வர். அவர்கள் தங்கள் பணிகளைச் செவ்வனே செய்துகொண்டிருப்பார்கள்.

6. இவ்வுறுப்பினர் அலுவற்காலம் ஓராண்டாகும். இடையில் இவர்கள் குற்றம் செய்து விலக்கப்பட்டாலன்றி, அவ்வோராண்டளவும் எத்தகைய ஊதியமும் இன்றி இவர்கள் பணியாற்றக் கடமைப்பட்டவர். அக்காலத்தார் இவர்களை **ஆளுங்கணத்தார்** என்று அழைத்தனர். இவர்கள் கூடுவதற்கு ஊர்தோறும் மாளிகைகள் அமைக்கப்பட்டிருந்தன. சில ஊர்களில் கோயில் மண்டபங்களிலும், பெரிய மரத்தின் கீழும் இக்கழகத்தினர் கூடினர். இவ்வுறுப்பினர் தேர்தல் காலத்தில் அரசாங்க அதிகாரி ஒருவன் உடன் இருப்பான்.

7. **கரணத்தான்:** சபையார் பணித்தவற்றைக் கரணத்தான் செய்யவேண்டும். இவனை 'மத்தியஸ்தன்' எனவும் கூறுவர். நல்லொழுக்கம் உடையவனாக நல்வழியில் ஈட்டிய பொருளுடையவனாக உள்ள ஒருவனையே கரணத்தானாக நியமிப்பர். இவன் அச்சபையின் கணக்கெழுத வேண்டும்; தான் எழுதிய கணக்கைத் தானே ஆண்டுதோறும் காட்டுதற்குக் கடமைப்பட்டவன். இவன் கணக்குக் காட்டிச் சுத்தன் என்று சபையார் ஒப்புக்கொண்ட பின்புதான் மேலே கணக்கெழுத வேண்டும். இவன் சம்பளம் ஓராண்டிற்கு ஏழு கழஞ்சு பொன்னும், இரண்டு கூறையும், ஒரு நாளைக்கு ஒரு நாழி நெல்லும் ஆகும். கணக்கைச் சபையாரிடம் பார்வைக்குக் கொடுக்கும்பொழுது, இவன் கையில் காய்ச்சிய மழுவை ஏந்தல் வேண்டும். ஊறு நேராதயின் ஒரு கழஞ்சிற்குமேல் காற்பங்கு பொன் சேர்த்துக் கொடுக்கப்படும். ஊறு நேருமாயின் பத்துக் கழஞ்சு பொன் இவன் தண்டம் கொடுக்க வேண்டும்.

8. **ஆவணக்களரி:** ஆவணங்கள் இங்குத்தான் பதிவு செய்யப்பட்டன. ஆவணக்களரி ஊர்தோறும் இருந்தது. நிலத்தை விற்போரும் வாங்குவோரும் ஆவணத்துடன் சென்று பதிவு செய்துகொண்டனர்; நிலத்தின் விலை, எல்லை முதலியவற்றைத் தெளிவாகக் குறிப்பிட்டனர். முக்கியமான ஆவணங்களைக் கோயிற் சுவரில் பொறித்துவைத்தனர்.

அருஞ்சொற்பொருள்

வாரியம் - குழு. அறநிலையங்கள் - கோவில்கள், அன்ன சத்திரங்கள், மடங்கள் முதலியன. புன்செய் - நெல் விளையாத நிலம். × நன்செய்.

செய் - வயல். ஊருணி = ஊர் + உணி; ஊரார் உண்ணும் நீர்நிலை. குடும்பு-ஊரின் ஒரு பகுதி (Ward). கையூட்டு - இலஞ்சம். புலனும் வண்ணம் - தெரியும்படி. நம்பிமார் - மதிக்கத்தக்க பெரியவர். கரணத்தான் - கணக்கன். கூறை - ஆடை. மழு - பழுக்கக் காய்ச்சிய இரும்பு. ஆவணம் - பத்திரம்.

### கேள்விகள்

1. கிராம ஆட்சியை நடத்திவந்த ஐவகை வாரியங்கள் எவை?
2. ஒவ்வொரு வாரியத்தார் கடமை யாது?
3. உறுப்பினராதற்குரியவர் தகுதிகள் யாவை?
4. எவர் உறுப்பினராதற்குத் தகுதி இல்லாதவர்?
5. பண்டைக்காலத்தில் உறுப்பினர் எவ்வாறு தேர்ந்தெடுக்கப் பட்டனர்?
6. கரணத்தான் யாவன்? அவன் வேலைகள் யாவை?

### பயிற்சி

1. வாரியம், குடும்பு, மழு, கையூட்டு, கரணத்தான், நம்பிமார், ஆவணம், வல்லுநர் - இவற்றை வாக்கியங்களிற் பயன்படுத்துக.

2. பொற்காசு, கையூட்டு, நல்லொழுக்கம், வாயோலை, ஆவணக் களரி,—தனித்தனிப் பிரித்துக் காட்டுக.

3. சேர்த்துக் கூறுக:—இ + அவை, ஆதற்கு + உரியர், அ + கூட்டம், சிறுவனை + கொண்டே, தனி + தனி, வைக்க + பெறும், பொருள் + உடையவன், கணக்கு + எழுத, கால் + பங்கு, ஆவணம் + களரி, கோயில் + சுவர்.

4. எதிர்ச்சொல் கூறுக:—ஊதியம், நல்வழி, தெளிவு, இடுவர், பெறும், வைப்பர், இருப்பர், செய்வர், சொந்தம், வேண்டும்.

5. சோழர் கால ஆட்சி உறுப்பினருக்கும் இக் காலப் பஞ்சாயத்துச் சபை உறுப்பினர்க்கும் தேர்தல் முறை உட்பட உள்ள வேறுபாடுகளை விளக்கி வரைக.

# 4. பெண்கள் பந்தாட்டம்

டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள், M.A., (Ph.D.)

[இவ்வாசிரியர் அண்ணுமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர்; நூலாசிரியர்; சிறந்த பேச்சாளர்; ஆராய்ச்சி அறிஞர். இப்பாடப் பகுதி இவர் எழுதியுள்ள "முன்பனிக் காலம்" என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.]

1. ***உலண்டு என்று ஒரு வகைப் புழு உண்டு. அந்தப் புழுவிலிருந்து ஒரு வகையான அழகிய பட்டு எடுக்கப்படும். அந்தப் பட்டுப் பொன்னிறம் உடையது. அஃது எழுப்பினுல் எழும்பும் தன்மை வாய்ந்தது. இப்படி எழும்பும் தன்மையுடைய நெட்டி, பஞ்சு, பட்டு இவற்றினுலே பண்டைக் காலத்திலே பந்துகள் செய்தார்கள் என்று பெருங்கதை என்ற புத்தகத்தால் அறிகிறோம். இவற்றைச் சேர்க்க வேண்டிய அளவு சேர்த்து நன்ருகத் திரட்டி, நூலாலும் கயிற்ருலும் நுண்மையாகச் சுற்றித் தைத்து மகளிர் விளையாடினுர்களென அறிகிறோம். அப்பந்துகள் வெண்ணிறம், செந்நிறம், கருநிறம் உடையன. காற்று வீசினுலும் அவை தாமாக எழுந்து ஆடுகின்ற அளவு நொய்மை வாய்ந்தவை. இந்தக் காலத்திலே உள்ள பிங்பாங் (Ping-Pong) ஆட்டத்திற்குரிய செல்லுலாயிட் பந்தைவிட அவை மெல்லியனவாய் இருந்தன என்று வைத்துக்கொள்ளலாம். அவை கண்ணைப் பறிக்கும் அழகையுடையன. அந்த அழகு மனத்தைவிட்டு அகலுவது அருமை. இவ்வளவு சிறப்புடைய பந்துகள் பலவற்றைப் பல்வேறு வகையாக அந்தக் காலத்தில் செய்தார்கள் என்பதைக் கொங்குவேள் என்னும் புலவர் பெருங்கதையிற் சொல்லியிருக்கிருர்.

* * * *

2. வத்தவநாட்டு அரசனுன உதயணனுடைய மனைவியர் இரண்டு பேருங் காணும்படி, அவ்விருவருடைய தோழிமார் போட்டியிட்டுக்கொண்டு ஒருவரை ஒருவர் விஞ்சுவாராய்ப் பந்தடித்தார்கள் என்ற செய்தியைப் பெருங்கதை தெரிவிக்கிறது. அதனைக் காண்போம்:

3. ஒருத்தி ஏழு பந்துகளை எடுத்துக்கொண்டு ஒன்றொன்ருக உயர எழுப்பிக் 'கண் இமையாமல் எண்

னுங்கள்' என்று சொல்லி ஆயிரந்தரம் கையினல் அடித்தாள். இன்னொருத்தி அந்த ஏழு பந்துகளையும் ஆயிரத்தைந்நூறு முறை ஒரே மூச்சில் அடித்தாள்; அப்படி அடிக்கும்போது, கூந்தலின் மேலே போய் வந்த பந்தைக் குவித்த விரலாலேயே எழுப்பினுள்; சில பந்துகளை மேகலைக்கு எதிரே அடித்தாள்; இன்னுஞ் சிலவற்றைத் தனது தலைமாலையாலே சார்த்தி எழுப்பினுள்.

4. கூனி ஒருத்தி அந்த ஏழு பந்துகளையும் கொண்டு இரண்டாயிரம் முறை அடித்தாள்; அப்பொழுது நான்கு திசைகளிலும் நான்கு மூலைகளிலும் காற்றினும் வேகமாக ஓடியாடி அடித்தாள்; பந்துகளைத் தட்டி விட்டுவிட்டு, இடை நேரத்தில் இரண்டு கையையும் தட்டினுள்; தோள்மேலே சில பந்துகளைப் பாய்ச்சினுள்; கூன்மேலே சிலவற்றைப் புரட்டினுள்; பாடிக்கொண்டும், அவிழ்ந்த கூந்தலை முடித்துக் கொண்டும், நெற்றியிலுள்ள பொட்டிடையேற்றும், பொட்டிலே பட்ட பந்தைப் புறங்கையாலே தட்டி எற்றியும் இரண்டாயிரம் முறை அடித்து நிறுத்தினுள்.

5. கூனி இப்படிச் செய்ததைக் கண்ட குள்ளியொருத்தி, 'நான் இங்கு இருக்கும்போது கூனி புகழும்படி அடிப்பதா!' என்று சொல்லி, சீலையை இறுக்கிக் கட்டிக் கொண்டு, கையிலே பந்தடிக்குங் கோலை எடுத்துக்கொண்டு 2,500 முறை அடித்துவிட்டாள்.

6. இன்னொருத்தி தான் விட்டெறிந்த பந்தை மூவாயிரந்தரம் அடித்தாள். அடிக்கும்போது அவள் போட்ட நடை நாடகப் பெண்கள் போடுகிற நடையைப்போல இருந்தது. இரண்டு கைகளாலும் அவள் பந்தை அடித்துக் கொண்டு விண்ணிற்கும் மண்ணிற்குமாகப் பறவையைப் போலப் பறந்ததைப் பார்த்துச் சிலர் மூக்குமேற் கைவைத்தனர். அவள் கை மாத்திரம் வேலை செய்தன என்பது அன்று. அவளுடைய கண்ணும் புருவமும் மனமும் அவள் கையோடும் காலோடும் ஓடின என்றே சொல்லவேண்டும். மேகலை ஆர்த்தது; கூந்தல் அவிழ்ந்தது; பூமாலையும் பொன் கலமுஞ் சிதறின. அவள் நில்லாது இன்னும் பந்தடித்துக் கொண்டே இருந்தாள். அவள் நிற்கிறுளா, பறக்கிறுளா,

என்று சொல்ல முடியாதவாறு, மேலுங் கீழும் போய்ப்போய் வந்தாள்; அவளுக்குத் தோள் இரண்டல்ல, பல என்று சொல் லும்படி அடித்துக்கொண்டிருந்தாள். அப்படிச் சொல்வதை விட, எங்குப் பார்த்தாலும் அவள் தோளே காணப்படுவதால், அவள் பலதோள் வடிவினள் ஆயினுள் என்றுகூடச் சொல்லி விடுதல் நல்லது. அப்படித்தான் சொன்ஞர் கொங்குவேளும்.

7. வேருெருத்தி இவர்களையெல்லாம் எள்ளி முன் வந்து நின்ருள்; பந்தாட்ட இலக்கணத்தைப்பற்றி ஒரு சொற்பொழிவு செய்தாள்; உட்கார்ந்துகொண்டு நல்ல பந் தாக இருபத்தொரு பந்துகளைத் தேர்ந்தெடுத்தாள்; அவற்றை எழுப்பிப் பைய எழுகின்ற அவள் செய்தொழிலுக்கேற்ப, அவளுடைய கையும் காலும் மெய்யும் இயைந்தன. பரத நாட்டியங் கற்றவர் அவள் அவிநயத்தை வியக்கிருர்கள். அவள் பந்தடிப்பதால் உண்டாகும் ஒலி தாளத்தோடு ஒத்த தாக இருக்கிறது; அதனுல் பாடல் வல்ல பெண்டிர் அவள் பாணியைப் பாராட்டுகின்றனர். அவள் இரண்டு காலையும் 'தம்' 'தம்' என்று பெயர்த்து வைக்கிற திறத்தைப் பார்த்து மத்தளங் கொட்டுவோர் கொண்டாடுகின்றனர். அவளால் எழுப்பப்படும் பந்துகள் நிலத்திற்கும் விசும்பிற்குமாகப் போனவண்ணம் இருக்கின்றன; சூறைக் காற்றிலே அகப் பட்டுச் சுழலும் இலைகளைப்போல உள. பந்துகள் வந்து வந்து திரும்பிப் போவதையும் ஏறுவதையும் இறங்குவதையும் ஆகாயத்தில் நிற்பனபோல இருப்பதையும் கொங்குவேள் அழகுபெறத் தீட்டியுள்ளார்.

8. இவளுக்கும் இரண்டு கைகளே. ஆயினும், வளைத்து வளைத்துப் பந்துகளை அடிப்பதை நோக்கினுல், பல கைகள் உள்ளவள் போல இவள் காணப்படுகிருள். தேர்ச் சக்கரத்தைப் போலச் சுழன்று சுழன்று அன்ருே அடிக் கிருள், நடக்கிருள், ஓடுகிருள், ஒடிகிருள், துவளுகிருள்! பந்து எழஎழ, அதனுடன் எழுகிருள்! 'இவள் கையெங்கே, கால் எங்கே, மெய் எங்கே தெரியவில்லையே!' என்கிருர் சிலர். 'இவள் மண்ணில் இருக்கிருளா, விண்ணில் இருக் கிருளா' என்கிருர் சிலர். இது, 'மாயமா, மந்திரமா' என் கிருர் சிலர்.

9. இவர்கள் கண்பட்டதுபோலக் கூந்தல் குலைந்தது; மாலை சுழன்றது; மேகலை கழன்றது; வியர்வை எழுந்தது; சாந்தம் இழிந்தது. அப்பொழுதும் பந்தடித்தலை நிறுத்த வில்லை மானனீகை; ஆடையைத் திருத்திக்கொண்டு அடிக்கிருள்; வியர்வையைத் துடைத்துக்கொண்டு அடிக்கிருள்; கண்ணை மூடிக்கொண்டு அடிக்கிருள்; சக்கரத்தைப்போலச் சுழற்றிவிட்டு அடிக்கிருள்; தோழியோடு பேசிக்கொண்டும் பாடிக்கொண்டும் அடிக்கிருள்; வாழ்த்திக்கொண்டு அடிக்கிருள்.

10. இவள் இப்படியெல்லாம் எண்ணுயிரம் முறை தன்னுடைய கைகளால் அடித்தாள். எடுத்துக்கொண்ட பந்துகள் இருபத்தொன்று. மொத்தத்தில் இவள் அடித்த முறை எண்ணுயிரம். அடிக்கும்போது, கூத்தும் பாட்டும் தாளமுஞ் சேர்ந்தன. இது வியக்கத்தக்க செய்தி அன்ருே! இப்படிப் பந்தடிக்கிற வழக்கம் அக்காலத்துத் தமிழ் நாட்டில் உண்டு. ஆதலினுலே கொங்குவேள் ஆகிய தமிழ்ப்புலவர் "பந்தடி கண்டது" என்று ஒரு தனிப்பகுதி தாம் இயற்றிய பெருங்கதையிற் புகுத்தினுர்.

11. பெருங்கதை, சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம் போன்ற தமிழ்க் காவியங்கள் துணையாகத் தமிழ் நாட்டு மகளிர் பண்டைக் காலத்திற் பந்தாட்டம் போன்ற ஆடல்களை இயற்றி மகிழ்ந்ததையும், மகிழ்வித்ததையும் அறிந்து இன்புறலாம்.

### அருஞ்சொற்பொருள்

பெருங்கதை - வத்தவ நாட்டு அரசனுன உதயணன் வரலாற்றைக் கூறும் காவியம். இதனைச் செய்தவர் கொங்குவேளிர்; கி. பி. 5-ஆம் நூற்ருண்டினர் என்னலாம். நொய்மை - மென்மை. எற்றி - எறிந்து. குள்ளன் × குள்ளி. மேகலை - மாதர் இடையில் அணியும் ஏழு அல்லது எட்டுக் கோவையுள்ள அணிவகை. ஆர்த்தது - ஒலித்தது. கலம் - நகை. எள்ளி - பரிகசித்து. பைய - மெல்ல. இயைந்தன - பொருந்தின. பரத நாட்டியம் - பரதர் என்ற முனிவர் எழுதிய நடனக்கலை நூல். அவிநயம் - மனக்கருத்தைக் குறிப்பாய் விளக்கும் அங்கச் செய்கை. பாணி - ரீதி (style, manner). விசும்பு - ஆகாயம். எழஎழ - அடுக்குத்தொடர். காவியம் - ஒப்பற்ற தலைவனது வரலாற்றைக் கூறும் பெரு நூல்.

## கேள்விகள்

1. பண்டைக்காலப் பந்துகளைப் பற்றிக் கொங்குவேள் யாது கூறியுள்ளார் ?
2. கூனி எவ்வாறு பந்தாடினுள் ?
3. குள்ளி பந்தாடிய விவரத்தைக் கூறுக.
4. தனக்குமுன் பந்தடித்தவர்களை எள்ளி முன்வந்த 'வேருெருத்தி' எவ்வாறு பந்தடித்தாள் ?
5. மானனீகை பந்தடித்த திறத்தை விளக்கிக் கூறுக.
6. "இது வியக்கத்தக்க செய்தியன்ருே !"—இடம் சுட்டி விளக்குக.
7. பெண்கள் பந்தாட்டம் பற்றிக்கூறும் தமிழ்க் காவியங்கள் எவை ?

## பயிற்சி

1. பிரித்துக் காட்டுக :—வெண்ணிறம், செந்நிறம், கருநிறம், அவ்விருவர், பொன்னிறம், பெருங்கதை, இரண்டல்ல, சிலப்பதிகாரம்.
2. வாக்கியங்களில் அமைத்துக் கூறுக :—வியக்கத்தக்க, அவிநயம், மேலும்கீழும், சொற்பொழிவு, நுண்மையாக, பல்வேறுவகை.
3. எதிர்ச் சொற்களைக் கூறுக :—அருமை, இமையாமல், அவிழ்ந்த, புறங்கை, குவிந்த.
4. ஆண்பாற் பெயர்களைக் கூறுக :—கூனி, குள்ளி, மனைவி, தோழிமார், ஒருத்தி, பெண்டிர்.
5. பந்தாடுவதனுல் பெண்களுக்கு ஏற்படும் நன்மைகளைக் குறிப்பிட்டு 15 வரிகளில் ஒரு கட்டுரை வரைக.
6. இக்கால வழக்கில் இருக்கும் பந்தாட்டங்களின் பெயர்களை எழுதுக.
7. இக்காலப் பெண்கள் விளையாடும் பல்வேறு விளையாட்டுக்களைக் குறிப்பிட்டு, அவற்ருல் அவர் எய்தும் நலன்களைக் குறிப்பிடுக.

# 5. மனோன்மணீயம்

**வித்துவான் R. பழநியாண்டி முதலியார் அவர்கள்**

[இவ்வாசிரியர் கடலூர் - செயின்ட் ஜோசப் உயர்நிலைப்பள்ளித் தலைமைத் தமிழாசிரியர்; நற்றமிழை நலமுறப் பயின்றவர். இப்பாடச் செய்தி, இவர் எழுதியுள்ள "முத்தமிழ்ப் புலவர்" என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.]

1. பேராசிரியர் **சுந்தரம் பிள்ளை** (கி. பி. 1855-1897) அவர்கள் ஆங்கில நூல்களை நிரம்பப் படித்தவர். லார்ட் லிட்டன் என்பார் எழுதிய 'இரகசிய வழி' என்ற நூற்பொருளை அடிப்படையாய்க் கொண்டு தமிழில் செய்யுள் வடிவில் ஒரு நாடகத்தைப் பாடி முடித்தார். அஃது ஆசிரியப் பாவினுல் இயன்றது. அந்நூற்பெயர் **மனோன்மணீயம்** என்பது. அதன் கதைச் சுருக்கத்தைக் கீழே காண்க.

2. ஜீவகவழுதி என்ற பாண்டிய மன்னன் கள்ளங்கபடு இல்லாதவன். அவன் மனைவி காலமானுள். அவனுக்கு மனோன்மணி என்ற மகள் ஒருத்தி இருந்தாள். அவள் பேரழகி; நற்குண நங்கை; நல்லொழுக்கம் மிக்கவள். தாயற்ற அம்மகளைத் தந்தை தன் உயிரினும் மேலாய்க் கருதி வந்தான். அரசனுடைய நற்குண நற்செயல்களைப் பாராட்டி நடராசன், நாராயணன் என்ற ஒழுக்கம் மிக்க வீரர் இருவர் அரண்மனைச் சேவகத்தில் இருந்துவந்தனர். அரசனிடமும் மனோன்மணியிடமும் மிக்க ஈடுபாடுடைய சுந்தர முனிவர் என்னும் துறவியார் அடிக்கடி பாண்டியன் அரண்மனைக்கு வந்து நல்லுரை புகன்று செல்வது வழக்கம். மனோன்மணியின் தோழியான வாணி என்பவள் கூர்த்த அறிவுடையவள்; சிறந்த ஒழுக்கம் உள்ளவள். அவள் மேற்சொன்ன நடராசனை உள்ளன்புடன் காதலித்துவந்தாள். ஆயின் அவள் தந்தை அவள் காதலுக்கு மதிப்புக் கொடாது, அவள் விரும்பாத செல்வன் ஒருவனுக்கு அவளை மணம் முடிக்க விரும்பினுன். அரசனும் அவளது களங்கமற்ற காதலை மதியாது, தந்தை சொற்படியே அவள் நடக்க வேண்டும் என அறிவுறுத்தினுன்.

3. பாண்டியனுக்குக் குடிலன் என்பவன் முதல் அமைச்சன். அவன் சச்சந்தனுக்குஅமைந்த கட்டியங்காரனை

ஒத்தவன் ; வஞ்சு நெஞ்சினன் ; சூழ்ச்சி அறியாத அரசனைத் தன் போலிப் பணிவினாலும் அடக்கத்தினாலும் தன் வயப் படுத்திக்கொண்டான். அவனுக்குப் பலதேவன் என்றொரு மகன் உண்டு. அவன் ஒழுக்கமற்ற இளைஞன். அவனுக்கு மனோன்மணியை மணம் முடிக்கவேண்டும், அதன் வழியாகப் பாண்டிய அரசைக் கைக்கொள்ள வேண்டும் என்பது குடிலன் விருப்பம். அதனால் அவன் இதற்குத் துணைபுரியும் செயல்களை ஒன்றன்பின் ஒன்றாய்ச் செய்யலானான்.

4. பாண்டியன் தலைநகரம் மதுரை. அங்கு இருந்தார் அனைவரும் பாண்டியனுக்கு மதிப்பீந்துவந்தனர். எனவே, தன் சூழ்ச்சி மதுரையிற் பலிக்காது என்பதைக் குடிலன் நன்குணர்ந்தான்; இதனால் தலைநகரை மதுரையிலிருந்து திருநெல்வேலிக்கு மாற்ற விரும்பினான் ; அரசனிடம் சென்று, "திருநெல்வேலியை அடுத்துள்ள நாஞ்சில்நாடு பாண்டிய அரசு தோன்றிய காலந்தொட்டுப் பாண்டியர்க்கே உரியதாய் இருந்தது. இடைக்காலத்தில் அது சேரரால் கைக்கொள்ளப் பட்டது. நமக்குரிய அந்நாட்டை மீண்டும் பெறவேண்டுவது நமது பிறப்புரிமையாகும். சமாதான முறையில் சேரன் அதனைக் கொடானாயின், அவன்மீது போர் தொடுத்து, அவனைப் போரில் வென்று, அதனைக் கைப்பற்ற வேண்டுவது நமது கடமையாகும். போர் நேருமாயின், நாம் மதுரையி லிருந்து படைகளைத் திருநெல்வேலிக்குக் கொண்டுசென்று போரிடுதல் அவ்வளவு எளிதன்று; ஆதலின், திருநெல் வேலியைத் தலைநகரமாய் அமைத்துக்கொண்டு, அங்குப் போர் அரண்களையுடைய சிறந்த அரண்மனை ஒன்றைக் கட்டிமுடிப்பது நல்லது," என்றான்.

5. இந்த யோசனையைச் சுந்தர முனிவரும் நாராயண னும் நடராசனும் மனோன்மணியும் ஏற்கவில்லை. எனினும் குடிலனது சூழ்ச்சியை அறியாத அரசன், குடிலன் விருப்பப் படியே தலைநகரை மாற்றியமைத்தான். குடிலன் தன் எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ள, விரைந்து வேலை செய் தான் ; தம் உயிரினும் மேலாய் அரசனை நேசித்துவந்த நாராயணனையும் நடராசனையும் வெவ்வேறு வேலைகளுக்கு அனுப்பிவிட்டான். ஆயினும் சுந்தர முனிவரை அகற்ற

அவனால் முடியவில்லை. அவர் அரண்மனையில் ஓர் அறையைப் பெற்று, ஆபத்து நேரிடின் அங்கிருந்து வெளியேறச் சுரங்கம் ஒன்றை அமைத்துக்கொண்டிருந்தார். நடராசனும் நாராயணனும் வெளிவேலைகளைச் செய்துகொண்டே குடிலன் செயல்களைக் கண்ணுங் கருத்துமாய்க் கவனித்துவந்தனர். இது நிற்க.

6. குடிலன் அரசனைத் தூண்டித் தன்மகன் பலதேவனைச் சேரனிடம் தூது போக்கினான். சேரமன்னனான புருஷோத்தமன் குடிலனையும் பலதேவனையும் பற்றித் தாழ்ந்த கருத்துடையவன். பலதேவன் அவனிடம் சென்று, "நாஞ்சில் நாட்டைப் பாண்டியனுக்குத் திருப்பிக் கொடுத்து விடவும்; இன்றேல் பாண்டியன் மகளை மணந்து, அந்த மணவுறவினால் நாஞ்சில் நாட்டைப் பெறுக. இரண்டிற்கும் நீர் உடன்பட வில்லையாயின், போர் புரிக," என்றான். மானவீரனான புருஷோத்தமன் போருக்கு எழுந்தான். சேரர்படை கொதித்து எழுந்தது; சேரநாட்டு எல்லையைக் கடந்து பாண்டிய நாட்டிற்குள் புகுந்தது; பல ஊர்களை நாசமாக்கித் திருநெல்வேலியை நோக்கி வந்துகொண்டிருந்தது.

7. குடிலன் பாண்டியன் படைகளை அணிவகுத்தான்; நாராயணனையும் நடராசனையும் அரசனை நெருங்கவிடாமல் தனித்தனி இடங்களில் நிறுத்தினான்; சேர்வீரர் அரசனை எளிதில் தாக்கிக் கொல்லும்படி வசதி செய்துவைத்தான். இதனைக் கவனித்துக்கொண்டேயிருந்த நடராசனும் நாராயணனும், சேரவீரர் அரசனைத் தாக்க நெருங்கியபோது, தத்தம் வீரருடன் நெருங்கி, அவர்களைக் கொன்று அரசனைக் காத்தனர். அப்பொழுதும் அரசன் குடிலனது சூழ்ச்சியை உணரவில்லை. தான் போரில் இறந்தால் மனோன்மணியின் நிலை யாதாகுமோ என்று அஞ்சி, குடிலன் யோசனைப்படி, உடனே அவளைப் பலதேவனுக்குத் திருமணம் செய்து கொடுக்க முடிவு செய்தான்; மணம் முடிந்தவுடன் அவளைச் சுந்தர முனிவருடன் அவர் அமைத்திருந்த சுருங்கைவழியே பாதுகாப்பு மிகுந்த இடத்திற்கு அனுப்பிவிட விரும்பினான்; அதனால் சுந்தர முனிவர் தனக்கு இரகசியமாகக் காட்டிய சுருங்கை வழியையும் குடிலனுக்குக் காட்டினான்.

8. மனோன்மணி தன் கனவில் சேரமன்னனாகிய புருஷோத்தமனைக் கண்டு அவனையே மணக்க உறுதி பூண்டாள். எனினும் தன்கனவில் தோன்றியவன் சேரமன்னன் என்பதை அவள் அறியாள். சேரநாட்டு ஓவியன் காட்டிய மனோன் மணியின் உருவப்படத்தைக் கண்ட புருஷோத்தமன், அவள் பாண்டியன் மகள் என்பதை அறியாத நிலையில் அவள்மீது அன்பு கொண்டான். தான் பலதேவனை மணக்கவேண்டும் என்று தன் தந்தை வற்புறுத்தியபோது, வேறு வழியின்றி மனோன்மணி இசைந்தாள். எனினும் அவள் மனம் முழுவதும் கனவிற் கண்ட புருஷோத்தமனையே நாடி யிருந்தது.

9. மண ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கையில், குடிலன் சுந்தர முனிவர் அமைத்த சுருங்கைவழியே சென்று புருஷோத்தமனை அடைந்து பணிந்து, பாண்டியனைக் கொன்று, அந்நாட்டைத் தனக்களிக்க வேண்டும் என்றும், தான் சேரனுக்கு அடங்கியிருப்பதாகவும் நயம்படக் கூறினான். சிறந்த ஒழுக்கமும் வீரவுணர்ச்சியும் கொண்ட புருஷோத்தமன், உடனே அவனைப் பிடித்து விலங்கிட்டு அழைத்துக்கொண்டு பாண்டியனிடம் வந்தான். மணவறை யிலே இருந்த அனைவரும் அவ்விருவரையும் கண்டு வியப்பும் திகைப்பும் கொண்டனர். புருஷோத்தமன் மணப்பெண் ணாகிய மனோன்மணியைக் கண்டு திடுக்கிட்டான்; ஓவியன் காட்டிய உருவம் இப்பெண்மணியினதே எனத் துணிந்தான். அவனது தோற்றத்தைக் கண்ட மனோன்மணி, தான் கனவிற் கண்ட அழகன் அவனே எனத் துணிந்தாள். அப்பொழுது புருஷோத்தமன் குடிலன் சூழ்ச்சியை அம்பலப்படுத்தினான். ஜீவகவழுதி அப்பொழுதுதான் உண்மையை உணர்ந்தான். உடனே சுந்தர முனிவர் வாழ்த்துக்கூற, சேரமன்னனுக்கும் பாண்டியன் பாவைக்கும் திருமணம் சிறப்புற நடந்தது. நடராசனுக்கும் வாணிக்கும் திருமணம் நடைபெற்றது. பாண்டியநாடும் சேரநாடும் உறவுகொண்டன.

10. மனோன்மணீயத்தில் அமைந்துள்ள தமிழ்த் தெய்வ வணக்கம் ஒரு தனிமுறை என்றே கூறவேண்டும். ஆசிரியர்தம் கண்ணிலும் கருத்திலும் காதிலும் நாவிலும்

எப்பொழுதும் நடம்புரிந்து வந்த தமிழன்னையைத் தனிப் பெருந் தெய்வமாய்க் கொண்டு வணங்கியுள்ளார்; நிலத்தை ஒரு மடந்தையாகவும், பரதகண்டத்தை அவள் வதன மாகவும், தெக்கணத்தை அம்மடந்தையின் பிறை நுதலாகவும், திராவிட நாட்டை அவள் நுதலில் வைக்கும் திலகமாகவும் உருவகித்து, அத்திலகத்திலிருந்து நாற்புறமும் பரவும் நறுமணம் போன்றது தமிழ் என்று குறித்துள்ளது, ஆசிரியரது கற்பனைத் திறனையும் தாய்மொழிப்பற்றையும் நன்கு தெரிவிப்பதாகும். [1] அடுத்த பாட்டில், ஆசிரியர் எல்லையறு பரம்பொருளோடு தமிழைச் சிறப்புற உவமித் துள்ளார்; ‘கடவுள் பல கோடி உயிர்களையும் உலகங்களையும் படைத்து அளித்து அழித்துக்கொண்டிருப்பினும் அழியாப் பொருளாய் விளங்குதல் போலத் தமிழணங்கு கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு என்னும் மொழிகளைத் தோற்று வித்து ஒன்று பலவாய்ப் பெருக்கிக்கொண்டிருப்பினும், தன் இளமை நலம் குன்றமல் கன்னியாகவே இருக்கின்றாள்’, என்று அழகுபடக் கூறியுள்ளார். [2]

### அருஞ்சொற்பொருள்

வழுதி - பாண்டியனைக் குறிக்கும் பெயர்களுள் ஒன்று. நங்கை-பெண் களிற் சிறந்தவள். நம்பி - ஆடவரிற் சிறந்தவன். கூர்த்த - கூர்மையான. நாஞ்சில் நாடு - நாகர் கோவிலும் அதனைச் சுற்றியுள்ள தமிழர் வாழ் பகுதியும். பாவை - பதுமை; இங்கு மனோன்மணி; உவமை ஆகுபெயர். எழில் - அழகு. வதனம் - முகம். அணங்கு - தெய்வப் பெண்.

---

1. நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தனித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திரவிடநல் திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே.

2. பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையா ளமும்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே.

### கேள்விகள்

1. பாண்டியன் தலைநகரம் திருநெல்வேலியாக மாற்றப்பட்டது ஏன்?

2. சுந்தரமுனிவர் குடிலனுக்குத் தெரியாது செய்த நல்லேற்பாடு யாது?

3. சேரன் பாண்டியன்மீது போருக்குவரக் காரணம் யாது?

4. அரசன் போர்க்களத்தில் மடியக் குடிலன் செய்த சூழ்ச்சி யாது? அஃது ஏன் வெற்றிபெறவில்லை?

5. மனோன்மணி பலதேவனை மணக்க ஏன் இசைந்தாள்?

6. குடிலன் புருஷோத்தமனை யாது வேண்டினான்?

7. பலதேவன் - மனோன்மணி திருமணம் தடைப்படக் காரணம் என்ன?

8. மனோன்மணீயத்தில் அமைந்துள்ள தமிழ்த் தெய்வ வணக்க முதற் செய்யுள் எவ்வாறு ஆசிரியருடைய கற்பனைத் திறத்தையும் தாய் மொழிப் பற்றையும் தெரிவிப்பதாகும்?

9. தமிழ்த் தெய்வ வணக்க இரண்டாம் செய்யுளில் கூறப்பட்டுள்ள செய்திகள் யாவை?

### பயிற்சி

1. ஈடுபாடு, பேரழகு, வஞ்சநெஞ்சம், கண்ணுங் கருத்துமாய், மணவுறவு, அம்பலப்படுத்தல்—இவற்றை வாக்கியங்களிற் பயன்படுத்துக.

2. சிறு குறிப்பு வரைக :—நாஞ்சில் நாடு, சுருங்கை வழி, மணவுறவு, மானவீரன்.

3. மனோன்மணீயத்தில் வந்த நாடகப் பாத்திரங்களை எடுத்து எழுதுக.

4. தமிழ்த் தெய்வ வணக்கப் பாடல்கள் இரண்டும் கற்றவர் எவ்வுணர்ச்சி எய்துவர் என்பதைக் கூறுக.

5. தமிழ்த் தெய்வ வணக்கம்பற்றிய இரண்டு பாடல்களின் திரண்ட கருத்தை நும் சொற்களில் எழுதுக.

6. குடிலனுடைய சூழ்ச்சிகளை விளக்கி ஒரு பக்கத்தில் ஒரு கட்டுரை வரைக.

7. இப்பாடச் செய்தியைக் குடிலனே நமக்குக் கூறுவதுபோல ஒன்றரைப் பக்கத்துள் வரைக.

8. இப் பாடப் பொருளைப் பாண்டியன் நமக்குச் சொல்வதுபோல ஒன்றரைப் பக்கத்தின் மிகாமல் ஒரு கட்டுரையாக எழுதுக.

# 6. எனது ஜப்பான் செலவு

திரு. சு. இராமசுவாமி நாயடு அவர்கள்

[இவ்வாசிரியர், சென்னை 'மேயர்' பதவியும், 'ஷெரீப்' பதவியும் வகித்துத் தொண்டாற்றியவர்; ஜப்பான் முதலிய கீழை நாடுகள் அனைத்திற்கும் சென்று வந்தவர்; செந்தமிழ் நடையிற் சொற்பொழிவாற்றும் ஆற்றல் உடையவர்; தமிழ் உரைநடை எழுதும் வன்மையுடையவர். இவர் எழுதிய "ஜப்பானில் சில நாட்கள்" என்னும் நூலிலிருந்து இக் கட்டுரை எடுக்கப்பட்டுள்ளது.]

1. நாடு காணும் அவா : உலகின் கீழ்த்திசையில் உயர்தனிச் சிறப்புடைய நாடாக ஜப்பான் மிளிர்கின்றது என அன்பர் சிலர் கூறக் கேட்டு, அந்நாட்டினைக் காணுதல் வேண்டும் என்னும் பேரவா என் உள்ளத்தே தோன்றிற்று. அந்த அவா நாளுக்குநாள் மிகுந்து ஜப்பானைக் காணச் செல்ல வேண்டுமென உந்தியமையால், நான் அக் கீழ்க்கோடி நாட்டிற்குப் போக முற்பட்டேன்.

2. செல்ல முயற்சி : ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்குச் செல்வதென்பது, எண்ணியவுடன் நிறைவேறத் தகும் செயலன்று. புறப்பாட்டுக்கு முன்னர்ச் செய்ய வேண்டும் இன்றியமையாச் செயல்கள் பல உள. நாம் வேறொரு நாட்டிற்குப் போக விரும்பினால், அந்நாட்டிற்குப் போதற்குரிய காரணம், அங்குத் தங்கியிருக்க விரும்பும் கால அளவு, அங்குப் போதற்குரிய நம் தகுதி முதலியவற்றை நம் நாட்டுக் குடியாட்சி அதிகாரிகளிடம் முறைப்படி தெரிவித்து, உரிய அனுமதிச் சீட்டைப் பெறுதல் வேண்டும். மேலும் அங்ஙனம் பெறும் அனுமதிச் சீட்டில், நம் நாட்டிலிருக்கும் அவ் வெளிநாட்டுத் தலைவரிடம் இசைவுக் கையொப்பம் பெறுதல் வேண்டும்.

3. எனவே, நான் மேற்கூறிய முறைப்படி அனுமதிச் சீட்டைப் பெற்று, டாட்டா கம்பெனியாரின் "ஏர் இந்தியா" என்னும் வானஊர்தியில் சென்னையிலிருந்து பயணத்தைத் தொடங்கி இலங்கைக்குப் போனேன்; அங்கிருந்து "பிரிட்டிஷ் ஓவர்சீஸ் ஏர்வேய்ஸ் கார்ப்பொரேஷனின்" (B. O. A. C.) வானவூர்தியில் சிங்கப்பூர் நோக்கிச் சென்றேன்.

4. **வான்வழிச் செலவு:** நான் ஏறிய வானவூர்தி கொழும்பு நகரை விட்டுப் புறப்பட்டவுடன், வானவெளியில் விரைந்து பாய்ந்தோடியது. வானத்தில் மிதந்து பறக்கும் வானவூர்தியில் பயணம் செய்தல் உள்ளத்திற்கு உவகை ஊட்டுவதாகும். கப்பலில் சென்ருல், பல நாட்கள் கடலில் மிதந்து கடக்க வேண்டும் தொலைவை வானத்திற் பறக்கும் வானவூர்தி மிக விரைந்து கடந்து செல்லுகிறது. மணிக்கு முந்நூறு மைல் வேகத்தில் பறந்து செல்லும் வானவூர்தி அசைவதாகவும் தோன்றவில்லை. அசையாமல் ஆகாய வெளியில் ஒரே இடத்தில் மிதப்பதுபோன்ற உணர்ச்சியே தோன்றுகிறது. புகைவண்டி முதலிய பிற ஊர்திகளில் பயணம் செய்கையில் எதனையும் எழுத முடியாது; முயன்று எழுதினுலும் கையெழுத்துக் கிறுக்கெழுத்தாக மாறிவிடும். ஆனுல் வானவூர்தியில் பயணம் செய்கையில் தெளிவாக எழுதலாம்.

5. **வெளிக் காட்சி:** வானவூர்தியில் உள்ள கண்ணு டிச் சாளரங்களின் வழியாக வெளியே நோக்கினுல், முகிற் கூட்டங்கள் ஆங்காங்கே ஆகாயத்தில் மிதப்பதைக் காண லாம். சில சமயங்களில் வானவூர்தி அம் முகிற் கூட்டங்க ளிடையே ஊடுருவிச் செல்லும்போது, நாம் எங்கிருக்கிறேம் என்பதை அறிய முடியாதவாறு மூடுபனியில் அல்லது புகைத்திரளில் அகப்பட்டவர்களின் நிலையை அடையநேரும். கடல்மீது வானவூர்தி செல்லுகையில், கடல் அமைதி மிக்க தொரு கருநிறப் பெருங்குளம் போன்ற காட்சி அளிக்கும். கடலிற் செல்லும் கப்பல்கள் ஒன்றிரண்டைக் காண நேர்ந் தால், அவை சிறுவர்கள் குட்டை நீரில் விட்டு விளையாடும் பதுமைக் கப்பல்கள்போலத் தோன்றும். வானவூர்தி பறந்து செல்லும்போது, கீழே இருக்கும் பெரிய மலைகள் சிறு மணற் குன்றுகள் போலத் தோன்றும்; நெடிய மரங்கள் தெள்ளிதிற் புலனுகா. ஆறுகள் வளைந்து வளைந்து ஓடும் காட்சி காண் பதற்கினிமை நல்கும்.

6. **வானவூர்தியின் அமைப்பு:** புகைவண்டியிலிருப் பதுபோன்ற வகுப்பு வேறுபாடுகள் வானவூர்தியில் இல்லை. அமர்ந்துகொள்ளவும் வேண்டுமானுல் அப்படியே சாய்ந்து

கொள்ளவும் கூடியவாறு இருக்கைகள் வானவூர்தியில் அமைக்கப்பட்டுள்ளன. இத்தகைய இருக்கைகள் வேறு எந்த ஊர்தியிலும் இல்லை. குறித்த அளவு சுமையைத்தான் வானவூர்தி தாங்கிச் செல்லுமாதலின் ஒரு வானவூர்தியில் இத்துணையர் போகலாம் எனவும், இவ்வளவு பொருள்கள் ஏற்றலாம் எனவும் அதிகாரிகள் வரையறுத்து விடுகின்றனர்; அதிற் போகவேண்டியவர் பெயர்களையும் குறிப்பிட்டுவிடுகின்றனர். நான் சென்ற வானவூர்தியில், வெளி ஓசை பிரயாணிகள் செவியிற் படாவண்ணம் செய்யப்பட்டிருந்தது. வெளியில் வெப்பம் இருப்பின் உள்ளே குளிர்ச்சியும், வெளியில் குளிர்ச்சி இருப்பின் உள்ளே வெப்பமும் உண்டாகுமாறு வானவூர்தி முழுவதும் அமைக்கப்பட்டிருந்தது.

7. **தாதி :** வானவூர்தியில் செல்லுகையில் மற்றெவ்வூர்தியிலும் இல்லாத உபசரிப்பு நடைபெறுகிறது. பிரயாணிகள் சோர்வும் வெறுப்பும் கொள்ளாதிருக்கும் பொருட்டு, ஓரழகிய தாதி (Air-Hostess or Stewardess) அடிக்கடி தேநீர், காப்பி, ரொட்டி, பிஸ்கட், மிட்டாய் ஆகிய வற்றைக் கொண்டுவந்து கொடுக்கிறார். வேண்டுவோர் அவற்றை வாங்கிக்கொள்ளலாம். படித்துக்கொண்டிருக்க விரும்புகிறவர்களுக்குக் கதைப் புத்தகங்கள், பத்திரிகைகள் முதலியன தருகிறார். அவர் புன்முறுவல்பூத்த முகத்துடன் இன்னுரையாடிப் பிரயாணிகளை உற்சாகப்படுத்துகிறார். இவ்வாறாக நான் பயணஞ் செய்த வானவூர்தி சிங்கப்பூரை அடைந்தது.

8. **சிங்கப்பூர் :** சிங்கப்பூர், மலேயா நாட்டின் தென் கோடியில் அமைந்துள்ள ஒரு சிறு தீவாகும். இதனை ஆங்கிலேயர் தமக்குரிமை செய்துகொண்டு, கீழை உலக 'ஜிப்ரால்டர்' ஆக்கியிருக்கின்றனர்; சிங்கப்பூர் அமைந்துள்ள இடம் கீழ்த்திசை நாடுகளுக்கு நடு நாயகமாக மிளிர்கின்றமையால், அதனைச் சிறப்பு மிக்கதோர் இடமாக அமைத்திருக்கின்றனர். போர்க் காலத்தில் சிங்கப்பூர் கீழ்த்திசை நாடுகளின் தலைமைப் பாடிவீடாக விளங்குகிறது.

9. சிங்கப்பூரில், உலக நாகரிகங்கள் அனைத்தும் கலந்து உறைவதைக் கண்டேன். உலகிலுள்ள பல்வேறு இனத்

தவரும் அங்கு வாழ்கின்றனர். கடின உழைப்புக்குரிய தொழில்களில் நம் தமிழகத்து மக்களும் சீன நாட்டவரும் ஈடுபட்டு வருந்தி உழைக்கின்றனர். சிங்கப்பூர் போன்ற நாகரிகத்திற் சிறந்ததும், செயற்கை எழில் செழித்ததுமாகிய நகரம், கீழ்த்திசையில் வேறு இல்லை எனக் கூறலாம்.

10. நான் சிங்கப்பூரைவிட்டுப் புறப்பட்ட பிறகு, இந்தோனேஷியா, சீயம், இந்தோ-சீனம் முதலிய நாடுகளுக்குச் சென்று, ஆங்குள்ள சிறப்பிடங்களைக் கண்டேன்.

11. **மகிழ்ச்சிக்குரிய விவரங்கள் :** மலேயா நாடும், இந்தோனேஷியா, தாய்லாந்து, இந்தோ சீனம் முதலியவைகளும் முன்னொரு காலத்தில் தமிழ் நாட்டுடன் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தன என்பதையும், இராஜேந்திர சோழன் கப்பற்படையுடன் வந்து இப்பகுதிகளிற் சில இடங்களைக் கைப்பற்றித் தன் ஆட்சியை நிறுவிச் சென்றான் என்பதையும் எண்ணிய போது, என் உள்ளம் பெருமித உணர்ச்சி கொண்டது.

12. இந்நாடுகளில் தமிழர் நாகரிகத்திற்கான சான்றுகள் பல ஆங்காங்கே காணக் கிடைக்கின்றன. தமிழரின் பண்பாடுகள், பண்டைய இறை வழிபாட்டு முறைகள் முதலியவை இப்பகுதி மக்களிடையே விரவிக் கிடக்கக் கண்டேன். உணர்ச்சிப் பெருக்கால் என் உள்ளம் துள்ளித் துடிப்புப் பெற்றது. கம்போடியா, அங்கோர்வாட் போன்ற இடங்களில் சிவலிங்க வழிபாடு நிகழ்ந்தது என்பதனை விளக்க வல்ல சான்றுகள் இன்னும் பல காணப்படுகின்றன.

13. **ஜப்பான் நாடு :** நான் பின்பு சிங்கப்பூருக்கு மீண்டு வந்து வான்வழியே ஹங்காங் நகரத்தைப் பார்த்துக் கொண்டு ஜப்பான் நாட்டை அடைந்தேன். வானவூர்தியில் போய்க்கொண்டிருக்கும் போதே, ஜப்பான் நாட்டு மலை வளம் புலனாயிற்று. ஜப்பானின் சிறப்பை உலகறியச் செய்துகொண்டிருக்கும் பூஜியாமா மலைச் சிகரத்தை வான வூர்தியில் இருந்தவாறே நன்கு காண முடிந்தது. எங்கள் விமானம் டோக்கியோ நகரத்திலுள்ள 'ஹனீதா' விமான நிலையத்தை நெருங்கிக்கொண்டிருந்த சமயம் எழில் மிக்க பல காட்சிகளைக் காண வாய்ப்புக் கிடைத்தது.

14. நக்கீரர் பெருமான் திருமுருகாற்றுப்படையில் குறித்த 'கைபுனைந் தியற்றாக் கவின்பெறு வனப்பு' என்னும் சொற்றொடரை ஜப்பான் நாட்டு இயற்கை வனப்புக்கு உரித் தாக்கலாம். 'எழு ஞாயிற்றுக்குரிய நாடு' என்னும் பொருளைத் தன்னகத்தே தாங்கியுள்ள ஜப்பான், எல்லா வகையாலும் சிறப்பித்துப் பாராட்டுதற்குரிய நலங்கள் அனைத்தும் ஒருங்கே அமையப்பெற்றுள்ளது எனல் பொருந்தும்.

15. காலை வானின் நீல நிற வனப்பும், அந்தி வானின் செந்நிறக் காட்சியும், வெள்ளிப் பனிமலைகளின் பொலிவும் கண்ணைக் கவர்வன. மழை நீர் அருவியாக ஓடும் அழகும், அவ்வருவியில் ஆறுகப் பெருகிப் பசுமை வளம் பெருக்கும் பொற்பும், நாடெங்கும் பச்சைப் பசேல் எனப் பெருங் காட்சி நல்கும் இயற்கை - செயற்கைப் பொழில்களும் கண்டு இன் புறத்தக்கன. வானுற ஓங்கி வளர்ந்து நிற்கும் மரங்களும் அவற்றினைக் கொழுகொம்பாகக் கொண்டு பின்னிப் பிணைந்து கிடக்கும் கொடிகளும், இப்பசுமையினூடே காணப்படும் பல நிற மலர்களும் அந்நாட்டினைக் காண்போர் உள்ளத்தைக் கொள்ளை கொள்வன. ஜப்பானில் சில நாட்கள் தங்கியிருப்பவரும் இவற்றினை நேரிற் கண்டு மகிழலாம்.

## அருஞ்சொற்பொருள்

உந்துதல் - தள்ளுதல். உவகை - மகிழ்ச்சி. முகிற்கூட்டம் - மேகக் கூட்டம். ஊடு + உருவி = ஊடுருவி - இடைநுழைந்து. குன்றுகள் - சிறு மலைகள். இத்துணையர் - இத்தனை மக்கள். பாடிவீடு - படை சென்று தங்கும் இடம். இறை வழிபாடு - கடவுள் வணக்கம். விரவி - கலந்து. கை புனைந்து - கையால் அலங்கரித்து. இயற்றா - செய்யாத. கவின் பெறு வனப்பு - மிகுந்த பேரழகு. எழு ஞாயிறு - தோன்றும் சூரியன். நலம் - சிறப்பு. பொழில் - சோலை. ஜிப்ரால்டர் - ஸ்பெயின் தேசத்துத் தென் கோடியில் உள்ள பெரிய துறைமுகம்; அட்லாண்டிக் பெருங் கடலும், மத்திய தரைக்கடலும் சந்திக்குமிடத்தில் உள்ளது. கம்போடியா, அங்கோர்வாட் என்பன இந்து சீனத்தில் உள்ள இடங்கள்.

## கேள்விகள்

1. ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்குச் செல்வோர் புறப்பாட்டுக்கு முன்னர்ச் செய்ய வேண்டிய செயல்கள் எவை?

2. வானவூர்தியில் செல்லும்போது நமக்கு எத்தகைய உணர்ச்சி தோன்றுகிறது?

3. வானவூர்தியிலிருந்து கீழே நிலப்பகுதியை நோக்கினுல் எக்காட்சிகள் தோற்றமளிக்கும் ?

4. வானவூர்தியின் அமைப்பு எவ்வாறு உள்ளது ?

5. வானவூர்தியில் நடைபெறும் உபசரிப்புகள் எவை ?

6. சிங்கப்பூர் எவ்வாறு காட்சியளிக்கிறது ?

7. மலேயா முதலிய நாடுகளைக் காணும் தமிழனுக்கு என்ன உணர்ச்சி ஏற்படுகின்றது ?

8. ஜப்பானில் காணப்படும் இயற்கை, செயற்கை அழகுகள் எவை ?

## பயிற்சி

1. வாக்கியங்களில் பயன்படுத்துக :—காலை வானம், எழுஞாயிறு, செந்நிறக் காட்சி, நடுநாயகம், கடினவுழைப்பு, தெள்ளிதிற் புலனுகா, செயற்கை எழில்.

2. எதிர்ச் சொல் கூறுக :—இசைவு, விரைந்து, உவகை, நெடிய, வெப்பம், வெறுப்பு, இன்னுரை, செயற்கை.

3. நீங்கள் வெளிநாடுகளுக்குச் செல்ல விரும்பினுல் முன்னேற்பாடாகச் செய்ய வேண்டுபவைகளைக் குறிப்பிடுக.

4. வெளி நாடுகளைக் காண்பதால் வரும் நன்மைகளைப் பற்றி 20 வரிகளில் ஒரு கட்டுரை வரைக.

5. நீங்கள் படித்த நூல்களை ஆதாரமாகக் கொண்டு, ஒரு வெளி நாட்டைச் சென்று கண்டு வந்ததாக ஒரு புனைந்துரைக் கட்டுரை 20 வரிகளில் எழுதுக.

6. வானவூர்தி ஏற்பட்ட பிறகு உலகிற்கு நேர்ந்திருக்கும் நன்மை தீமைகளைப் பற்றி (நீவிர் அறிந்தவரை) ஒரு சிறு கட்டுரை வரைக.

7. (1) புறப்பட ஆயத்தம் செய்தல், (2) இரயில் வண்டியில் ஏறுதல், (3) வண்டியிற் பிரயாணம் செய்தல், (4) வழியிற் காட்சிகளைக் காணல், (5) அவற்ருல் பெறும் மனவுணர்ச்சிகள், (6) சேரும் இடம் என்பவற்றைத் துணைக்கொண்டு, நீங்கள் செய்துள்ள இரயில் பிரயாணம் ஒன்றைப்பற்றி ஒன்றரைப் பக்கத்தின் மிகாமல் ஒரு கட்டுரை வரைக.

# 7. தொழிற்கல்வி

## (உரையாடல்)

திரு. ச. ஆறுமுக முதலியார் அவர்கள், M.A., B.O.L., L.T.

[இவ்வாசிரியர் சைதாப்பேட்டை, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இருப்பவர்; பல பாட நூல்களின் ஆசிரியர்; பேச்சிலும் எழுத்திலும் வல்லவர். இப்பாடம் இவர் எழுதியுள்ள "செந்தமிழ்க் கட்டுரை" என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.]

கண்ணன்: கட்டாய பாடம் தேவையில்லை என்பவன்; கமலத்திற்குத் தம்பி.

கமலம்: கட்டாய பாடம் தேவை என்பவள்; கண்ணனுக்குத் தமக்கை.

**கண்ணன்:** அக்கா, எங்கள் பள்ளியில் கைத்தொழிற் கல்வியை விருப்ப பாடமாக வைத்துள்ளனர்.

**கமலம்:** அப்படியா? அது தவறு.

**கண்ணன்:** தவறு? விருப்ப பாடமாக இருப்பது தான் நல்லது. விருப்பம் உள்ளவர் தொழிற் கல்வி பெறலாம்; விருப்பம் இல்லாதவர் வேறு பாடங்களைப் படிக்கலாம் என்று இருத்தலே நல்ல முறை என்று பலரும் பேசுகின்றனரே!

**கமலம்:** தம்பி, அஃது ஒரு வகையில் பொருத்தமான வாதம்; முற்றும் சரியன்று. தொழிற் கல்வி கற்பிப்பதன் நோக்கம், தொழில் இன்னது என்பதை அனைவரும் அறிந்திருத்தல் நல்லது என்பதே. வெறும் புத்தகப் படிப்பேதான் இதுவரை எல்லாப் பள்ளிகளிலும் இருந்துவந்தது. அதனால் நாடு அடைந்த பலன் யாது? படித்தவர் தொகை பெருகிற்று; ஆனால் பிழைக்க வழி தெரிந்தவர் தொகை பெருகவில்லை. 'பள்ளிக் கணக்குப் புள்ளிக்கு உதவாது' என்பதற்கு ஏற்ப, ஏட்டுக் கல்வி எல்லோருக்கும் பிழைப்புக்கு வழிகாட்டவில்லை. அதனால் வேலையில்லாதவர் தொகை பெருகியது. கணக்கற்ற குடும்பங்கள் வறுமைப்படலாயின. ஒரு சமுதாயத்தின் இளங்கொழுந்துகள் - எதிர் காலத்தில் இந்நாட்டின் குடிமக்களாக இருப்பவர் - இவ்வாறு வறுமைப்படின், நாடு எவ்வாறு உயர்வு பெறக்கூடும்? பதினான்காண்டுகள் படித்துப் பி. ஏ. பட்டம் பெற்றும் அப்படிப்பு, பிழைப்புக்கு வழிகாட்ட

வில்லையாயின், அப்படிப்பால் பயன் யாது? இதனை நன்கு ஆராய்ந்தே **காந்தியடிகள்,** கல்வித் திட்டத்தையே மாற்றி யமைக்க வேண்டும் என்று திட்டமிட்டார். ஏட்டுக் கல்வியும் கைத்தொழிற் கல்வியும் கலந்து புகட்டப்படின், பள்ளி யையோ, கல்லூரியையோ விட்டு வெளிவரும் பிள்ளைகள், வேலை கிடைக்கவில்லை ஆயின், தொழில் செய்தேனும் பிழைக்க வழியுண்டு.

**கண்ணன் :** நீ கூறுவது சரிதான். ஆனால் கட்டாய தொழிற் கல்வி வேண்டுவதில்லையே !

**கமலம் :** கண்ணா, நீ, 'கைத்தொழிற் கல்வி நமக்குத் தேவை இல்லை ; நாம் அப்பாவைப் போல வேலை பார்க்கலாம்' என்று நினைத்து உன் விருப்பம்போல வேறு பாடத்தைப் படிப்பதாகக் கொள்வோம். நீ பி. ஏ. பட்டம் பெற்ற உடனே வேலை கிடைக்கவில்லை. அப்பொழுது நீ என்ன செய்வாய்? அதே சமயத்தில் தொழிற் கல்வியிற் பயிற்சி பெற்ற உன் வகுப்பு மாணவன் வேலையைப்பற்றிக் கவலைப்படாமல், தான் கற்ற தொழிலைச் செய்ய முனைவான் ; பொருள் ஈட்டுவான். 'ஐயோ, நாம் அப்பொழுது தொழிற் கல்வியிற் பயிற்சிபெறத் தவறினோமே! இப்பொழுது வேலையின்றித் தவிக்கிறோமே !' என்று நீ கவலைப்பட நேரும். தொழிற் கல்வி கட்டாய பாட மாகக் கற்பிக்கப்படின், எல்லோரும் நலம் பெறுவர் அல்லவா? கண்ணா, இதனை நன்கு எண்ணிப் பார்.

**கண்ணன் :** அக்கா, நீ சொல்வது சிறந்த கருத்து எனினும், பட்டம் பெற்ற பிறகு எல்லோருமே வேலையின்றித் தவிப்பார்கள் என்று கூறமுடியுமா ? அதைக் கருதித் தொழிற் கல்வியைக் கட்டாயமாக்க வேண்டுமா ?

**கமலம் :** தம்பீ, நான் கூறுவது அது கருதி மட்டு மன்று. ஒவ்வொரு மனிதனும் ஒரு தொழிலிலே அறிவுபடைத் தவனாதல் வேண்டும். வேலை கிடைக்கவில்லையாயினும், கிடைத்த வேலை நிலைக்கவில்லையாயினும், வயிற்றுப் பிழைப்பு நடைபெற வேண்டுமே ! அதற்கென்ன செய்வது? மேலும் ஒரு தொழிலிற் பயிற்சி பெறுதல்—ஒன்றில் திறமை பெற்றிருத்தல்–கையிருப்புப் போன்றதன்றோ? அக்கையிருப்பு வேலை உன்னை அடிமைத்தனத்திலிருந்து நீக்கும்; உரிமை

மனிதனுக்கும் ; ஏறுபோல் பீடுநடை கொள்ளச் செய்யும் ; மானவுணர்ச்சியைக் கொல்லாமற் காக்கும். வேலை செய்து கொண்டே, நீ கற்ற தொழிலையும் ஓய்வு நேரத்தில் செய்து வருமானத்தைப் பெருக்கலாம். இத்தகைய பல நன்மைகளைச் செய்யும் தொழிற் கல்வி கட்டாயமாகக் கற்பிக்கப் படல் வேண்டும் என்பது என் கருத்து. கண்ணு! படிக்கும் பெண்களை எடுத்துக்கொள். அவர்கள் திருமணம் செய்துகொண்டு கணவருடன் வாழவேண்டுபவர்கள். கணவன் ஏழை ; வேலை செய்கிறான். அவன் திடீரென்று இறந்துவிடுகிறான். அப்பொழுது அவன் மனைவியின் கதி என்னவாகும் ? அவள் எட்டுக் கல்வி கற்றவள் ; அவளுக்குத் திடீரென்று வேலை கிடைக்குமா ? வேலை கிடைக்கும்வரை அவள் என்ன செய்வாள் ? அவள் பள்ளியில் ஏதேனும் ஒரு தொழிற் பயிற்சி பெற்றிருப்பின், எளிதில் அத் தொழில் செய்ய முற்படுவாள் அல்லவா ? அத்தொழில் அவளை ஒருவாறு காக்கக்கூடும் அல்லவா ? நம் நாட்டில் பின்னல், நூல் நூற்றல், கைத்தறியில் நெய்தல், கூடை முடைதல், பூமாலை கட்டுதல், ஜமக்காளம் நெய்தல், தையல் வேலை, நெட்டி வேலை, லேஸ் பின்னுதல், களிமண் வேலை முதலிய பல சிறிய கைத்தொழில்களைச் செய்து கணக்கற்ற பெண்கள் பிழைக்கிறார்கள் என்பதை நீ உணரவேண்டும். இங்ஙனம் ஆடவரை நோக்கினும், பெண்களை நோக்கினும் தொழிற் கல்வி கட்டாயமாகக் கற்பிக்கப்படவேண்டுவது என்பதில் ஐயமே உண்டாகாது.

**கண்ணன் :** அக்கா, நீ கூறியன யாவும் உண்மையே. ஆனால் உயர் அலுவலர் மகன் தச்சவேலை, ஆடை நெய்தல் முதலிய வேலைகள் செய்ய விரும்புவானா ? விரும்பினும், அவனால் எளிதில் கற்க முடியுமா ? தச்சன் மகனுக்குத் தச்சு வேலை எளிதாக விளங்கும் அல்லவா ?

**கமலம் :** தம்பீ, நீ நினைப்பது சரியன்று. அரசியல் அலுவல் போன்றவை தொழிலைப் போல உரிமை உடையவை அல்ல. அரசியல் அலுவல் வாழ்வு அடிமை வாழ்வு ; தொழில் உரிமை வாழ்வைத் தரும். அரசியல் அலுவல் செல்வ வளத்தைத் தராது. தொழில் செல்வ வளத்தைத் தரும்.

நாட்டில் செல்வராயிருப்பவர் தொழில் செய்பவரே தவிர அலுவலர் அல்லர். ஆதலால் பயிர்த்தொழில், கைத்தொழில் என்பவை பிற அலுவல்களைவிடப் பன்மடங்கு சிறந்தவை.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்"

என்னும் தமிழ் மறையை எண்ணிப் பார். இத்தகைய உயர்ச்சியைத் தரும் தொழிற் கல்வியை அனைவரும் கற்க வேண்டும். இது அனைவர்க்கும் எய்ப்பினில் வைப்புப்போன்றது; உற்றுழி உதவி புரிவது.

மேலும் இன்ன தொழிலை இன்னவர்தாம் செய்யவேண்டும் என்னும் வரையறை இருத்தல் முறையன்று. சலவைத் தொழிலாளி மகன் சலவைத் தொழிலாளியாகவே இருத்தல் வேண்டுமா? அங்ஙனம் இருப்பின், அச்சமூகம் உயர்நிலை அடைவது எப்பொழுது இயலும்? மேலும் ஒரே மரபினரிடம் ஒருதொழிலை ஒப்படைத்தல் அத்தொழில் வளர்ச்சியைக் கெடுப்பதாகும். தொழிலாளி மகன் படித்து அரசியல் அலுவல் செய்யலாகாதா? இப்பொழுது சிலர் அரசியல் அலுவல் செய்துகொண்டிருக்கின்றனரே. தொழிலைப் பரம்பரை உரிமையாகக் கொண்டதாற்றான் உலகத்தில் வேறெந்த நாட்டிலும் இல்லாத சாதிகள் நம் நாட்டில் மட்டும் ஏற்பட்டு வேரூன்றி, இன்று சமுதாய வாழ்க்கையின் அடிப்படையிலேயே அமைதியின்மையை உண்டாக்கிவிட்டது. அதனாற்றான், காந்தியடிகள் போன்றோர் 'தொழில்களை எல்லோருக்கும் பொதுவாக்க வேண்டும்' என்பதை வற்புறுத்தினர்; இன்றும் அறிஞர் பலர் வற்புறுத்தி வருகின்றனர். இந்த நாடு முன்னேற வேண்டுமாயின்—வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிய வேண்டுமாயின்—எல்லோரும் பிழைப்புக்கு வழிகாண வேண்டுமாயின்—எல்லோரும் எவ்வித வேறுபாடும் இன்றி அவரவர்க்கு விருப்பமான ஒரு கைத்தொழிலை நன்கு கற்பது தான் சிறந்த வழியாகும். ஆகவே, பள்ளிகளில் எல்லோரும் கட்டாயமாகத் தொழிற் கல்வியிற் பயிற்சி பெறும் திட்டமே நமது நாட்டுக்கு ஏற்றது.

**கண்ணன்:** அக்கா, எனக்கு இப்பொழுதுதான்

உண்மை விளங்குகிறது. நான் தொழிற் கல்வியிற் சிறப்புறப் பயிற்சி பெறுவேன்.

### அருஞ்சொற்பொருள்

தமிழ்மறை - திருக்குறள். உற்றுழி - வேண்டும்பொழுது. அலுவல் - வேலே. உரிமை - சுதந்திரம்.

### கேள்விகள்

1. வெறும் புத்தகக் கல்வியால் விளைந்த பலன் யாது?
2. காந்தியடிகள் குறிக்கப்பெற்ற சந்தர்ப்பம் என்ன?
3. ஆடவர்க்குத் தொழிற்கல்வி கட்டாயமாகக் கற்பிக்கப்படல் வேண்டும் என்பதற்குக் கமலம் கூறிய காரணம் யாது?
4. பெண்டிர்க்குத் தொழிற்கல்வி தேவை என்பது எவ்வாறு வற்புறுத்தப்படுகிறது?
5. 'தொழிலாளி மகனுக்கு மட்டும் தொழிற்கல்வி பயிற்றல் நலம்' என்பதை மறுத்துக் கமலம் கூறியது யாது?

### பயிற்சி

1. இது சரி அன்று - ஒன்றன்பால் வினைமுற்று. இவை சரி அல்ல- பலவின்பால் வினைமுற்று. இவற்றை நன்கு நினைவிற் கொள்க.
2. பிரித்துக் காட்டுக:—அறிந்திருத்தல், வேலையின்றி, கிடைக்கவில்லை, செல்வவளம், தொழிற்கல்வி, மானவுணச்சி, வேறெந்த, அமைதியின்மை.
3. இப்பாடச் செய்தியைக்கொண்டு தொழிற்கல்வியின் அவசியம் பற்றி ஒரு கட்டுரை வரைக.
4. உங்கள் பள்ளியில் கற்பிக்கப்படும் தொழில்கள், அவற்றின் பயன் என்பவற்றை விளக்கி ஒரு கட்டுரை எழுதுக.
5. நம் நாட்டுக் கைத்தொழில்களின் பெயரைக் குறிப்பிட்டு, அவை நடைபெறும் இடங்களைக் குறிப்பிடுக.
6. கைத்தொழிலால் முன்னேறியுள்ள நாடுகளைக் குறிப்பிட்டு, அங்கு நடைபெறும் கைத்தொழில்களையும் எழுதுக.
7. நூற்கல்வி—தொழிற்கல்வி, இவற்றின் இன்றியமையாமையைக் குறிப்பிட்டு, இருவர் உரையாடல் போட்டியிடுவதாக ஒரு பக்கத்துள் ஒரு கட்டுரை வரைக.

# 8. சோழமாதேவி

**திரு வி. நரசிம்ம ஐயர் அவர்கள், M. A.**

[இவர் ஓய்வு பெற்ற தமிழாசிரியர்; வரலாற்றுத் தொடர்புடைய நாடக நூல்களை வரைவதில் வல்லவர். இவர் பாடநூல்கள் பலவற்றையும் எழுதி யுள்ளார். இப்பாடப் பகுதி இவர் எழுதிய "சோழ மாதேவி" என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.]

## அங்கம் 2

## களம் 1

### கொள்ளிடக் கரைதனிலே

**இடம்:** கொள்ளிடக்கரை.

**காலம்:** மாலை.

**நடிகர்:** சோழமாதேவி, நந்தினி, விக்கிரமன், சோழவீரர், அவர் தலைவர் குடவரையர், பகைவீரர்.

[**கதைச் சுருக்கம்:** கங்கைகொண்ட சோழனை இராசேந்திர சோழனுடைய மக்களுக்கும் மேலைச் சாளுக்கிய மன்னனான சோமேசுவர னுக்கும் அவன் மக்களான விசயாதித்தன், ஆறும் விக்கிரமாதித்தன் என்பவர்க்கும் பல போர்கள் நடந்தன. விக்கிரமாதித்தன் பில்ஹண கவி யுடன் மாறுவேடத்தில் சோழ நாட்டிற் புகுந்து, சோழரது படை வலி மையை அறிய நாடு முழுவதும் சுற்றினான். அந்நிலையில் ஒரு நாள் அவனே வீர ராசேந்திர சோழன் மகளான சோழமாதேவியைப் பேராபத்திலிருந்து மீட்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இந்நிலையை விளக்கும் காட்சியே இது. இவ்வாறு பல சந்தர்ப்பங்களில் அவளைக் காத்து, முடிவில் அவளை மணந்துகொண்டான். இக்கதையைப் பல காட்சி களாக விளக்குவதே 'சோழமாதேவி' என்னும் நாடக நூல்.

**முன்தொடர்பு:** சோழமாதேவி தன் தோழியுடனும் படைவீரர் சில ருடனும் திருவானைக்காவில் உள்ள சிவன் கோவிலைத் தரிசித்துவிட்டு மாலையிற் புறப்பட்டுத் தலைநகரான கங்கைகொண்ட சோழபுரம் நோக்கிப் பல்லக்கில் வந்துகொண்டிருந்தாள். அவள் கொள்ளிடக்கரையை அணுகிய பொழுது, பொழுது சாய்ந்தது. அவ்வமயம் சோழ அரச குடும்பத்தையே ஒழிக்கச் சதி செய்த ஒரு கூட்டத்தாரால் ஏவப்பட்டார் சிலர் சோழமாதேவி யைச் சிறைப்பிடித்துச் செல்ல வந்தனர்; சோழ வீரரிடம் கடும்போரிட் டனர். அவ்வமயம் மேற்சொன்ன விக்கிரமாதித்தன் அங்குத் தோன்றிப் பகைவரை விரட்டியடித்தான்; சோழ வீரரை விசாரித்துப் பல்லக்கிலிருந் தவள் வீரராசேந்திரன் மகளான சோழமாதேவி என்பதை அறிந்தான். அவ்வளவில் மாதேவியும் அவள் தோழியான நந்தினியும் பல்லக்கினின் றும் வெளியே வந்தனர்.]

**மாதேவி :** நந்தினி, இவ்விசயர்க்கு நாம் என்றும் கடமைப்பட்டுள்ளோம் என்பதை அறிவிப்பாய்.

**விக்கிரமன் :** சோணாட்டு இளவரசியாரைப் பற்றிச் செவியுற்றிருக்கிறேன். நேரில் அவர்களை இவ்வகையில் யான் காணப்பெறும் பேறு கிட்டும் எனக் கனவிலும் கருதவில்லை. தக்க இடத்துக்கே உதவ நேர்ந்தமை பற்றி மகிழ்ச்சியடைகிறேன்.

**மாதேவி :** நந்தினி, தக்க தருணத்தில் வந்து இவர் உதவியிராவிடில், நாம் சிறைப்பட்டிருப்போம். நம்மைச் சிறை நீக்கிய இவ்வீரர் யார் என்று நாம் அறிந்துகொள்ள வேண்டாவோ? கேட்டுச் சொல்.

**விக்கிரமன் :** அம்மணி, நான் ஒரு நாடோடி. யாதும் எனது ஊர். யாவரும் என் கேளிர். யான் ஒரு சிறிது வாட் பயிற்சி பெற்றிருக்கின்றேன். அதனைச் செயலாற்றுவதற்கு நேரிட்ட நல்வாய்ப்பு இது. இவ்வாய்ப்பில் என் திறமையை நானே சோதித்துக்கொண்டேனே யன்றி, வேறொன்றும் நான் செய்து விட்டதாகக் கருதவில்லை.

**மாதேவி :** நந்தினி, இவ்வீரரின் தன்னடக்கத்தைக் கவனித்தாயா? இவர் சாதாரணப் போர்வீரர் அல்லர்; அரச குடும்பத்திற் பிறந்த காளை; யாதோ காரணம் கருதி மறைத்துக் கூறுகின்றார் அவர் யாவரேயாயினும், நாம் அவர்க்கு மிகவும் கடமைப்பட்டுள்ளோம். நம்முடன் கூடவே அவரும் நம் தலைநகர்வரை வந்து, நம் அரண்மனையில் சின்னாட்கள் தங்கியிருந்து செல்லலாம் என நான் கேட்டுக்கொள்வதாகக் கூறு.

**விக்கிரமன் :** தேவியார்க்கு அச்சம் அகலவில்லை போலும்! இனி எவரும் தங்களை மடக்கமாட்டார்கள். தங்கள் போர்வீரர்கள் தற்காத்துக்கொள்வதில் தலைசிறந்து விளங்குகிறார்கள். நான் வேறு எதற்கு வரவேண்டும்?

**மாதேவி :** நாம் விரும்புவதை மாறுபாடாகக் கொள்கிறார் போலும்! அச்சம் கருதி அவர் உடன் வரவேண்டுமென்று கொள்ளவில்லை என்று சொல், நந்தினி, அவரிடம். அரச குடும்பத்தவராகிய நமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளவும், அரசரைக் கொண்டு அவர்க்குத் தக்க மரியா

தைகள் செய்விக்கவும்தான் தலைநகருக்கு அவரை அழைத்தேனே ஒழிய, வேறெதற்கும் இல்லை என்று கூறுவாய்.

**விக்கிரமன் :** மாதேவியார் கூறுவது இயல்புதான். ஆனாலும் இப்போது நான் பின்தொடர்ந்துவர இயலாதவனாக இருக்கிறேன்; வேறோரிடத்திற்கு விரைந்துகொண்டிருக்கின்றேன். பிறிதொருகால் வாய்ப்பு நேரும்போது தலைநகருக்கு வந்து நானே அறிமுகம் செய்துகொள்ளத் தயங்கமாட்டேன்.

**மாதேவி:** (தன் கழுத்தில் அணிந்துள்ள முத்து மாலையைக் கழற்றிக்கொண்டே) நந்தினி, இவ்வீரருக்கு நாம் என்ன கைம்மாறு செய்யப்போகிறோம்! அவரும் அங்கு வர மறுக்கிறார்.

**விக்கிரமன் :** அம்மணி, நான் கைம்மாறு கருதும் கயவனல்லன்; பயன் கருதிப் பணிபுரிபவனும் அல்லன்; அறவிலை வாணிகனும் அல்லன். என் கடமையைச் செய்ததற்குக் கைம்மாறு எதற்கோ?

**மாதேவி :** செய்ந்நன்றி கொன்றார்க்கு உய்வில்லை. நாம் செய்ந்நன்றி மறவாச் செழுங்குலத்தில் தோன்றியோர் என்பது அவர் அறியாரா? கைம்மாறாகக் கொள்ளாது, நன்றியறிதலுக்கு உரியதாக நான் தரும் இம் முத்துமாலையை அவர் ஏற்றுக்கொள்ள வேண்டுகின்றேன் என்று கூறுவாய், நந்தினி.

**விக்கிரமன் :** என்னை ஏற்றுக்கொள்ளுமாறு நந்தினி கேட்கவேண்டா. தேவியார் கேட்டுக்கொள்வதே போதுமானது. மன்னிக்கவேண்டும். அடையாளம் வைத்து நினைவு கொள்ளவேண்டும் என்பதில்லை. நான் எதனையும் எவ்வகையானும் பெற்றுக்கொள்ள ஒருப்படேன். தேவியார் என்னை மன்னிக்கட்டும்.

**மாதேவி :** நந்தினி, அவர்க்கு நான் ஏதும் அளியாது போகேன். நம்மைச் சிறை நீக்கிய அவர் என்னிடமுள்ள எதை விரும்பிக் கேட்டாலும் உடனே தயங்காது அளிக்கக் காத்திருக்கிறேன்.

**விக்கிரமன் :** நந்தினி, நான் பிறிதொருமுறை தலைநகருக்கு வருகிறேன்; அங்கு வந்து எனக்கு வேண்டுவதைப்

பெற்றுக்கொள்வேன். ஆனால் நான் அங்கு வரும்போது தங்கட்கு அறிமுகப்படுத்துமாறு தேவியார் சிறுவிரலை அணி செய்யும் சிறிய மோதிரம் ஒன்றுமட்டும் என்வசம் இருந்தால் போதுமானது; கூடுமானால், தேவியார் அதை அளித்தால் உவப்புடன் ஏற்றுக்கொள்வேன்.

**நந்தினி :** என்ன ! மாதேவியாரின் மோதிரமா ?

**மாதேவி :** (சிறிது தயக்கத்துடன் மோதிரத்தைக் கழற்றி நந்தினியிடம் கொடுத்து) நந்தினி, அவர் விருப்பப் படியே இதனை எனது அன்பளிப்பாக ஏற்றுக்கொள்ளட்டும். அண்மையில் அவர் நமது அரண்மனைக்கு வந்துசேருமாறு நான் கேட்டுக்கொண்டதாகக் கூறுவாய்.

[நந்தினி விக்கிரமனிடம் மோதிரத்தை அளிக்கிறாள். விக்கிரமன் அதனைத் தன் சிறுவிரலில் அணிந்துகொள்கிறான்.]

**விக்கிரமன் :** மிக்க நன்றி. நான் மாதேவியார் பெருந் தகைமையைக் கண்கூடாகக் கண்டேன்; இயலுமாயின், விரைவில் தலைநகரில் காண்பேன்.

**மாதேவி :** நந்தினி, மகிழ்ச்சி என்று கூறுவாய்.

**விக்கிரமன் :** தேவியார்க்கு இன்னொரு விண்ணப்பம். இப்பொழுதே இரவு கவிந்துவிட்டது. இனித் தொடர்ந்து பயணப்பட்டாமல் திரும்பவும் திருவானைக்காவுக்கே சென்று, இரவு அங்குத் தங்கியிருந்து, வைகறையில் புறப்பட்டுப் பயணத்தைக் மேற்கொள்வது நலம் எனத் தோற்றுகிறது. எதிர்ப்பட்டவர்கள் கள்வராகத் தோன்றவில்லை; ஏதோ சூழ்ந்து செயலாற்றுவதாகத் தெரிகிறது. அதனால் சற்று எச்சரிக்கையாக இருப்பது நலம் எனத் தோற்றுகிறது.

**மாதேவி :** நந்தினி, அதுதான் தக்கது. குடவரையரே, அவ்வீரர் சொல்வது போலவே செல்வீராக.

**விக்கிரமன் :** நன்று; தேவி! யான் விடைபெற்றுக் கொள்கிறேன்.

[விக்கிரமன் குதிரை ஏறி மறைகிறான். வீரர்கள் பல்லக்கைச் சுமந்து, திரும்பி, வந்தவழியே செல்கின்றனர்.]

**மாதேவி :** நந்தினி, இவை யாவும் கனவிற் கண்டது போலிருக்கின்றன. அவர் ஐயமின்றி ஓர் அரசிளங்குமாரரே யாவர்.

## அருஞ்சொற்பொருள்

விசயர் - வெற்றிவீரர். கேளிர் - சுற்றத்தார். கயவன் - கீழ் மகன். அறவிலே வாணிகன் - தருமத்தைச் செய்து அதன் விலையாக எதிர்ப்பயனை அடைபவன். சூழ்ந்து - ஆராய்ந்து அறிந்து.

## கேள்விகள்

1. விக்கிரமன் தன்னடக்கம் உடையவன் என்பதை எதனுல் மாதேவி அறிந்தாள் ?
2. அரசியார் முத்துமாலையை விக்கிரமனுக்கு அளிக்க விரும்பிய காரணம் யாது ?
3. விக்கிரமன் அன்பு அளிப்பாக மாதேவியாரிடமிருந்து எதனை ஏற்றுக்கொண்டான் ? ஏன் ?
4. மாதேவிக்கு மற்றொரு விண்ணப்பமாக விக்கிரமன் கூறியது யாது ?

## பயிற்சி

1. வாக்கியங்களிற் பயன்படுத்துக :—பேறு, நல் வாய்ப்பு, கைம்மாறுக, செழுங்குலம், அறிமுகம், அன்பளிப்பு, வைகறை.
2. இடங் கூறி விளக்குக :—நான் கைம்மாறு கருதும் கயவனல்லன், மாதேவியாரின் மோதிரமா ?, எதிர்ப்பட்டவர் கள்வராகத் தோன்றவில்லை, இவையாவும் கனவிற் கண்டதுபோலிருக்கின்றன.
3. வழிப்பயணம் செய்வோர் இரவிற் செல்வதால் வரும் நன்மை தீமைகளைக் குறிப்பிட்டு எழுதுக.
4. மாதேவி யாத்திரை—வழியில் துன்பம்—துன்ப நீக்கம்—உரையாடல் என்னும் குறிப்புக்களைத் துணையாகக் கொண்டு இப்பாடப் பொருளை ஒரு கட்டுரையாக எழுதுக.
5. இப்பாடத்தை ஆதாரமாக வைத்து, மாணவர்களுக்கு உடற் பயிற்சி, சிலம்பப் பயிற்சி முதலியன இன்றியமையாதன என்பதை விளக்கி ஒரு சிறு கட்டுரை வரைக.
6. இப்பாடத்தைத் துணையாகக் கொண்டு, பண்டைக்காலத் தமிழ் மாதருடைய பழக்க வழக்கங்களைக் குறிப்பிடுக.

# 9. தமிழன் கண்ட மலேயா

திரு. அ. மு. பரமசிவானந்தம் அவர்கள், M.A., M. Litt.

[இவர் சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் துணைத்தமிழ்ப் பேராசிரியர்; பல நூல்களின் ஆசிரியர்; சிறந்த சொற்பொழிவாளர்; மலேயா சென்று மீண்டவர், இக்கடிதம் இவர் எழுதியுள்ள "தமிழன் கண்ட மலேயா" என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.]

## கடிதம் 7

மலாக்கா,
28—5—'48.

அன்பின் அரசி,

1. நான் இன்றுபகல் பத்தரை மணிக்கு மலாக்கா செல்லவேண்டும் என்று ஏற்படாகியிருந்தது. அந்த வழிப் பயணத்தைப்பற்றிச் சொல்லுமுன், சிங்கப்பூரைப் பற்றி மேலும் சில சொல்ல விரும்புகின்றேன்.

2. **சிங்கப்பூரின் சிறப்பு:** சிங்கப்பூர்த் துறைமுகம் உலகத் துறைமுகங்களில் மிக முக்கியமானது. உலகம் சுற்றிப் பெரும் வாணிக வகையிலும், பிற வகையிலும் செல்லும் மேலைநாட்டுக் கப்பல்களும், கீழைநாட்டுக் கப்பல்களும் இத் துறைமுகத்தைத் தொட்ட பின்பே செல்லவேண்டும். நாள்தோறும் நூற்றுக்குக் குறையாத கப்பல்கள் இங்கு வந்து செல்லுமாம். மலேயா நாட்டின் தென்கோடியில் சிங்கப்பூர் ஒரு தனித் தீவாகவுள்ளது. ஆளும் முறையிலும் இன்னும் இது தனியாகவே அமைந்துள்ளது. சிறு சிறு குன்றுகள் இடை இடை விளங்க, பலப்பல கலங்கள் கரையிடை நிற்க, மிக அழகிய இயற்கைத் தோற்றத்தோடு காட்சி அளிக்கும் தீவு இது. போர்க்குரிய பெரிய கடற்படைத்தளம் இங்கு உண்டு. சாதாரண மக்கள் இறங்கும் துறைமுகத்திற்கு எதிர்ப்பக்கத்தில் பதினேழு கல் தொலைவில் தீவின் மறு புறத்தே அக் கடற்படைத்தளம் அமைகின்றது.

* * *

3. குழந்தாய், சிங்கப்பூர் உலக முக்கியமான இடமாதலால், இங்கு எல்லா நாட்டு மக்களும் வாழ்கின்றனர். எனினும் சீனர் பெரும்பாலராக இருக்கின்றனர். அதற்

கடுத்தபடியாக இந்தியர் உள்ளனர். சிங்கப்பூரில் பத்து லட்சம் மக்கள் வாழ்கின்றார்களாம். அறுபதினாயிரம் தமிழர் அங்கு உள்ளனர். விளம்பரப் பலகைகளைப் பெரும்பாலும் ஆங்கிலத்திலும், சீனமொழியிலும்தான் காண்கின்றேன். சிற்சில இடங்களில் தமிழ்ப் பலகைகள் தெரிகின்றன. முஸ்லிம்களும் பெரும்பாலராக வாழ்கின்றனர். பெரு வாணிகத் தலமாதலால் எங்கும் கடைத்தெருக்கள் காட்சி அளிக்கின்றன. இராப்பகல் மூடாத பல கடைகள் உண்டாம். இங்கு மக்கள் வசதிக்காகச் செல்லும் 'பஸ்' முதலியன இரவு ஒரு மணிவரையில் ஓடுமாம். சென்னையில் ஒன்பது மணிக்குமேல் அவை ஓடா என்பது உனக்குத் தெரியுமே! இந்த நிலை, இவ்வூர் இரவிலும் ஒய்வற்ற பேரூர் என்பதை விளக்கவில்லையா! தெருக்கள் மிகத் தூய்மையாகப் பாது காக்கப்படுகின்றன. மக்கள் வாழ்வும் நலத்துறைவகையில் செம்மைப்படுத்தப்பட்டுத்தான் இருக்கிறது. உயரிய கட்ட டங்கள் நகரை அணி செய்கின்றன. ஒய்வற்ற உயரிய நகராக இஃது அமைகின்றது. மேலைக் கீழை நாடுகளை இணைக்கும் ஒரு இணைப்பிடமாக இஃது அமைகின்றது என்பது பொருந்தும்.

4. **நகர அமைப்புக்கள் :** சிங்கப்பூர் மட்டும் அல்லாது மலேயாவில் உள்ள அத்தனை ஊர்களும் மிகத் தூய்மை யாகத்தான் பாதுகாக்கப்படுமாம். நகரில் மாட்டுவண்டி களும், குதிரைவண்டிகளும் காணவில்லை. காரணம் அறிய விரும்பினேன். மோட்டார்கள் மிக்கிருத்தலால் பிற வண்டிகள் தேவை இல்லை என்பது ஒன்று. மற்றும் நகர நலம் கெடாவகையில் பசு, மாடு முதலியவற்றை ஊர்ப் புறத்தேதான் வைத்துக்கொள்ள வேண்டும் என்றார்கள். சில பேரூர்களில் நகர எல்லைக்கு ஐந்து கல் தொலைவிலும் கால் நடைகள் இருக்குமாம். அவை உலவுவதாலும், சாணம் முதலியவற்றாலும் நகர நலம் கெடும் என்பதை அறிந்து, அவற்றைச் சேர்க்காது, நகரத்தை அழகிய முறையில் காக்கி றார்கள். சொந்தப் பசு வைத்துக்கொள்ள விரும்புகின்றவரும் நகரில் வைத்துக்கொள்ளக் கூடாதாம். வெளியே வைத்துத் தான் பாலைமாத்திரம் கொண்டுவரவேண்டுமாம். சென்னை

நகரிலே—நம் தலைநகரிலே—மனிதன் வீட்டுக்கும், மாட்டுக் கொட்டிலுக்கும் வேறுபாடு காணுத நமக்கு இது வியப்பாகத் தோன்றவில்லையா ! இதுமட்டும் அல்லாது இன்னும் எத்தனையோ வகைகளில் நகரங்கள் நலத்துறை, குடிநீர், கல்வி, போக்குவரத்து ஆகிய பல வகைகளில் நம் நாட்டினும் நன்கு ஓம்பப்படுகின்றன. அவைகளைப்பற்றி வாய்ப்பு நேரு மிடந்தோறும் விவரமாக வரைவேன்.

5. **வண்டி வசதியும் சாலை நலனும் :** அருமைச் செல்வி ! மற்றும் இத்தகைய அரும்பெரும் நகரிடை நான் நம் நாட்டுக்குப் புறப்படுமுன், இன்னும் இரண்டு மூன்று முறை தங்குவேன் ; இன்னும் எழுதவேண்டி இருப்பின், அப்பொழுது எழுதுவேன். நான் பகல் பத்தரைமணிக்கு மலாக்காவுக்கு பஸ்ஸில் புறப்பட்டேன்.

* * *

பத்தரை மணிக்குப் புறப்பட்ட பஸ் சிங்கப்பூரின் பல தெருக்களையும் தாண்டி மலேயாப் பெருநிலத்தில் புகுந்தது. நகர நலங்கண்ட நான், பஸ்ஸில் இருந்தபடியே மலேயா நாட்டுப்புற நலங்களைக் கண்டேன். எப்புறம் நோக்கினும் பசுமை காட்சியளித்தது. நான் புறப்பட்டபொழுது நல்ல மழை பெய்துகொண்டிருந்தது. மழை பெய்வதும் விடுவதும் இந்நாட்டில் அடிக்கடி காணக்கூடிய ஒன்றுகும். இங்கு மழைக்காலம் என்று ஒன்று இல்லையாம். ஆண்டு முழுவதும் மழை இருக்குமாம். நான் மலாக்கா செல்வதற்குள் பலமுறை மழை வந்து வந்து சென்றது. எங்கும் இயற்கைநலம் காட்சி அளித்தது. சாலைகள் மிக்க அழகாகச் செப்பனிடப்பட் டிருந்தன. 160 கல் தொலைவு அந்த வண்டியில் வந்தும் அசதி சிறிதும் தெரியவில்லை என்றுல், சாலை நலத்தை எண்ணிப் பார். 40 கல் தொலையுள்ள காஞ்சீபுரத்திலிருந்து சென்னை வருவதற்குள் நாம் எவ்வளவு அசதி பெறுகின்றேம்! அதை இங்கு நினைத்தாலும் அச்சம் எழுகின்றது. வண்டி மிக்க விரைவாக வந்தது. இந்தச் சாலைகளை எண்ணும் காலத்து ஒருபுறம் மகிழ்ந்தேன் ; ஆனல் ஒருபுறம் வருத்த முற்றேன். இத்தகைய அழகிய சாலைகளை ஆக்கித் தந்தவன் யார் என நினைக்கிருய் ? மலாய் நாட்டுக்காரனு ? சீனனு ?

ஆங்கிலேயனு ? இல்லே. நம் அருமைத் தமிழன் கைதான் இந்தச்சாலேகளே அமைத்தன. பிறந்த நாட்டில் வாழ வகை இழந்த தமிழன் நாடோடியாய் இங்கு வந்து வயிற்றை வளர்க்க வழிகண்டான். அவன் அரும்பெரும் உழைப்புத் தான் மலேயாவைச் செல்வநாடாக மகிழ்விக்கின்றது. எத்தனே தமிழ்த் தாய்மார்கள் கல்லுடைத்திருப்பார்கள் ! வரம்பு கட்டியிருப்பார்கள் ! அவர்கள் உழைப்பெல்லாம் நம் நாட்டிற்குப் பயன்பட்டிருந்தால் எவ்வளவு நலமாக இருந் திருக்கும் ! ஆனுல் அன்றைய ஆளவந்தார்கள் அதை எண்ணவில்லே. இன்று வந்தவராவது இதை எண்ணி, இனித் தமிழ்மக்களேக் கூலியாட்களாகப் பிற நாடுகளுக்கு அனுப்பா திருப்பார்களாயின் நாடு உயரும் ; நாம் உயர்வோம்.

6. அரசி ! இப்படிக் கைவருந்தி உழைத்த தமிழன் இன்னும் இங்கு உயரவில்லே. ரப்பர்த் தோட்டங்களில் கூலி யாளராக வேலேபார்ப்பவருட் பெரும்பாலர் தமிழரேயாவர். இதை எண்ண உண்மையில் உள்ளம் நைகின்றது. அவன் இட்ட சாலேயில் அன்னிய நாட்டார் மோட்டார்களில் ஆடாது அசையாது அழகாகச் செல்லுகின்றனர். ஆனுல் சாலே அமைத்த தமிழன் அன்றைய நிலேயிலேயே இருக்கிறுன். தமிழன் செப்பனிட்ட அந்தச் சாலேயில் செல்லுங்கால் என் சிந்தையில் பல எண்ணங்கள் வந்துவந்து சென்றன. ‘ தமிழா, உன்கதி இதுவா ! பிறர்க்கு உழைத்தும் ஓட்டாண்டி யாக வாழவா நீ பிறந்தாய் !’ என்றது என் நா.

* * *

7. உழைத்துப் பாடுபடும் பாட்டாளி மக்கள் சாலே இருமருங்கிலும் சாதாரண வீடுகளே அமைத்துக்கொண்டு வாழ்கின்றுர்கள். அவர்கள் வீடுகளுக்குக் காற்ருேடப் பல கணி உண்டு. இயற்கைச் சோலேகளின் நடுவிலே—பறவை களின் இனிய ஒலிகளின் இடையிலே—இந்நாட்டுப் பழங்குடிமக்கள்—உழைப்பாளிகள்—பயமற்று, கொண்டதை மன நிறைவால் ஏற்று வாழ்க்கை நடத்துகின்றுர்கள். அம்மம்மா ! ஒய்வற்ற சிங்கப்பூர்த் தெருக்களுக்கும் இந் நாட்டுப்புறங்களுக்கும்தான் எத்தனே வேற்றுமை ! இவற்றை எல்லாம் எனக்கு இயற்கை அன்னே எடுத்து விளக்கிக்

கொண்டே வந்தாள். நான் கண்ணும் இமைக்காது அவள் காட்டிய காட்சிகளையும் உணர்த்திய பாடங்களையும் கண்டும் அறிந்தும் வந்தேன். சாலையின் இருமருங்கிலும் உயர்ந்த ரப்பர்த் தோட்டங்கள் காட்சி அளித்தன.

* * *

8. வீட்டு அமைப்பு : வழியிடைக் கண்ட தோட்ட வீடுகளாம் நாட்டு வீடுகள் புதுவகையாக இருந்தன. வீடுகள் எல்லாம் மரத்தால் ஆகியவை. நிலம் பெரும்பாலும் சதுப்பாக இருந்ததால், ஆழ்ந்த கடைக்கால் இட்டு வீடு கட்ட முடியாது போலும்! அடியில் மரத்தால் ஆகிய கால்கள் நட்டு, இடத்திற்கு ஏற்றபடி இரண்டோ, மூன்றோ, நான்கோ அடிகள் விட்டுப் பின்பு அதே மரத்தாலே தரை, சுவர் முதலான வற்றை இட்டு, மேலே தகரத்தாலோ அன்றி ஓலையாலோ கூரை வேய்ந்த வீடுகளே எங்கும் காணப்பட்டன. அவை மிக எளிய வீடுகள்தாம். சில வீடுகள் தென்னைபோன்ற ஒருவகை ஓலையால் வேயப்பட்டிருந்தன. நகரத்தில் கண்ட ஆடம்பர வாழ்க்கை இங்கெல்லாம் காணப்படவில்லை; மக்கள் சாதாரண முறையிலேயே காணப்பட்டனர். சில இடங்களில் ரப்பர்த் தோட்டங்களோடு பல தென்னஞ்சோலைகளும் காணப்பட்டன. மலாக்கா நெருங்க நெருங்கத்தான் தென்னஞ்சோலைகள் மிகுதியாக இருந்தன. தேங்காய்கள் மிகப் பெரியன. நம் நாட்டில் இவ்வளவு பெரிய தேங்காய்களைக் காணுதல் முடியாது. இங்கு உரித்த காய்கள் அங்கு மட்டையோடு கூடிய காய்களின் அளவு இருக்கும்.

9. வழிநெடுகப் பல இயற்கைக்காட்சிகள் கண்ணையும் கருத்தையும் கவர நூற்று அறுபது கல் தாண்டி ஜோகூர், மூவார், பத்துப்பகார் முதலிய ஊர்களை எல்லாம் கடந்து, மாலை ஐந்து மணிக்கு மலாக்கா வந்து சேர்ந்தேன். வழியில் ஓரிடத்தில் 'சன்மார்க்கத் தமிழ்ப் பாடசாலை' என்ற ஒரு தமிழ்ப் பள்ளிக்கூடம் இருப்பதை அங்கு மாட்டியிருந்த பலகையால் அறிந்தேன்.

அருஞ்சொற்பொருள்

கலம் - கப்பல். இயற்கை × செயற்கை. ஓடாது - ஒன்றன்பால் எதிர் மறை வினைமுற்று ; ஓடா - பலவின்பால் எதிர்மறை வினைமுற்று. கீழை

நாடுகள் - கிழக்கில் உள்ள நாடுகள். நலத்துறை - சுகாதாரத் துறை. பேரூர் × சிற்றூர். பலகணி - ஜன்னல். மன நிறைவு - மன அமைதி.

## கேள்விகள்

1. சிங்கப்பூர்த் துறைமுகம் உலகத் துறைமுகங்களில் மிகவும் முக்கியமானது.—எப்படி ?
2. சிங்கப்பூரில் இருப்பவர் யாவர் ?
3. சிங்கப்பூர் நகரத்தைப்பற்றிய பிற விவரங்கள் யாவை ?
4. மலேயாநாட்டு நகரங்கள் தூய்மையாக இருக்கக் காரணங்கள் யாவை ?
5. மலேயாவில் பஸ் பிரயாணம் எப்படி இருந்தது ?
6. மலேயாத் தமிழனைப்பற்றி ஆசிரியர் கூறும் விவரம் யாது ?
7. வழியிற் காணப்பட்ட நாட்டு வீடுகள் எவ்வாறு அமைந்து இருந்தன ?

## பயிற்சி

1. எதிர்ச் சொற்களைக் கூறுக:—சிறப்பு, கீழை நாடு, உண்டு, பெரும்பாலர், உள்ளனர், சிற்சில, தூய்மை, ஓடா, ஓய்வற்ற, கூடாது, தங்குவேன், மகிழ்ச்சி, உயர்வோம், ஏற்றபடி.
2. பிரித்துக் காட்டுக:—கடற்படை, படைத்தளம், கடைத்தெரு, நலத்துறை, இணைப்பிடம், நாடோடி, உழைப்பெல்லாம், ஓய்வற்ற, நாட்டுப்புறம், தென்னஞ்சோலை.
3. சிங்கப்பூரைப்பற்றி 25 வரிகளில் ஒரு கட்டுரை வரைக.
4. சாலை நலன் - பிரயாண இன்பம் - இயற்கைக் காட்சிகள் - ஆசிரியர்க்குத் தோன்றிய எண்ணங்கள் - நாட்டுப்புற வீடுகள்: இவற்றைக் குறிப்புக்களாகக் கொண்டு ஒரு கட்டுரை எழுதுக.
5. 'மலேயாவில் தமிழ் உழைப்பாளி' என்பதுபற்றி 20 வரிகளில் சிறு கட்டுரை எழுதுக.
6. நீங்கள் செய்த ஒரு பிரயாணம்பற்றித் தக்க குறிப்புக்களுடன் ஒரு கட்டுரை வரைக.

# 10. பூம்புகார் நகரம்–I*

டாக்டர் மா. இராசமாணிக்கனுர் அவர்கள்,
M.A., L.T., M.O.L., (Ph.D.)

[இவ்வாசிரியர் பள்ளிப் பாடநூல்களேயும் ஆராய்ச்சி நூல்களேயும் எழுதிவருபவர் ; சென்னே விவேகானந்தர் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளர் ; சொற்பொழிவாளர்.]

1. **பெயர் விளக்கம் :** 'புகார்' என்ற சொல்லுக்கு 'ஆற்று முகம்' என்பது பொருள். "புகாஅர்ப் புகுந்த பெருங்கலம்" என்பது புறநானூறு. காவிரி கடலோடு கலக்கும் இடமும் அதனேச் சார்ந்த மணற் பரப்பும் தாழம் பூக்காடு நிறைந்த பகுதியாகும். அங்குப் புன்னே முதலிய மரங்கள் செழித்திருந்தன. இக்காரணத்தால் புகார் என்பது "பூங்கானல்", "பூமலி பெருந்துறை" என்று பட்டினப் பாலே கூறும். எனவே, "பூங்கானல்" என்பது பூம்புகார் என வழங்குதல் இயல்பேயன்றே ! ஆற்று முகத்தை உணர்த் தும் 'புகார்' என்னும் பெயர், அவ்விடத்தில் அமைந்த நகரத் திற்கும் பெயராயிற்று.

2. **நகரப் பிரிவுகள் :** பூம்புகாரைப் பற்றிப் பேசும் சிலப்பதிகாரம், மணிமேகலே, பட்டினப்பாலே என்னும் பண்டைய நூல்களில் புகார் நகரப் பிரிவுகளும் அவை பற்றிய விளக்கமும் காணப்படுகின்றன. புகார் நகரத்தில் கடற்கரையைச் சார்ந்த பகுதி மருவூர்ப்பாக்கம் எனவும் அதற்கு அப்பாற்பட்ட பகுதி பட்டினப்பாக்கம் எனவும் பெயர் வழங்கின. இவ்விரண்டுக்கும் இடைப்பட்ட நிலப் பகுதி சோலேகள் நிறைந்ததாய்ப் பெருங்கடைத் தெருவைத் தன்னகத்தே கொண்டதாய் இருந்தது. அவ்விடம் நாளங் காடி எனப் பெயர் பெற்றது.

3. **மருவூர்ப்பாக்கம் :** பூம்புகார் கடற்கரைப் பட் டினமாதலின் கரையோரம் இருந்த மருவூர்ப்பாக்கத்தில், சோழ நாட்டுடன் வாணிகம் நடத்திவந்த அயல் நாட்டார் பெரிய மாளிகைகளே அமைத்துக்கொண்டு வாழ்ந்துவந்

*இது 'பூம்புகார்' எனப் பெயர் பெற்ற காவிரிப்பூம்பட்டினத்தில் நடைபெற்ற சிலப்பதிகார மகாநாட்டில் (15—6—51) டாக்டர் ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்கள் தலேமையில் ஆற்றிய சொற்பொழிவு.

தனர். பட்டு நூலாலும் எலி மயிராலும் பருத்தி நூலாலும் நுட்பமான தொழிலைச் செய்த பட்டுச்சாலியர் தெருவும், விலையுயர்ந்த மணிகளும் பொன்னும் சேமித்து வைக்கப் பட்ட தெருக்களும், நெல் முதலிய கூல வகைகளை விற்கும் தெருக்களும், பிட்டு வாணிகர், அப்ப வாணிகர், கள் விற் பவர், மீன் பிடிப்பவர், உப்பு விற்பவர், பலவகை இறைச்சி களை விற்போர், கற்பூரம் முதலிய வாசனைப் பொருள்களை விற்போர், ஆட்டு வாணிகர், எண்ணெய் வாணிகர், கன்னார், தச்சர், கொல்லர், ஓவியர், சிற்பர், குயவர், உருக்குத் தட் டார், இரத்தினப்பணித் தட்டார், சிப்பித் தொழில் செய்பவர், தோலைக்கொண்டு பலவகை உறைகளைச் செய்பவர், கிழி, நெட்டி இவற்றைக் கொண்டு மலர், வாடாத மாலை, பொய்க் கொண்டை முதலியவற்றைச் செய்பவர் வாழும் தெருக்களும் இசையில் வல்ல குழலர், பாணர், ஏவல் மக்கள் முதலியோர் வாழத்தக்க தெருக்களும் மருவூர்ப்பாக்கத்தில் இருந்தன.

4. **பட்டினப்பாக்கம்** : அரசனும் அரச மரபினரும் வாழும் பெருந்தெரு, தேரோடும் தெரு, கடைத்தெரு, செல்வ வணிகருடைய மாட மாளிகைகள் நிறைந்த தெரு, மறையவர் தெரு, வேளாளர், மருத்துவர், சோதிடர் தெருக்கள், முத்துக் கோப்பவர், சங்கறுப்பவர், அரசனை நின்று பாடுவார், இருந்து பாடுவார், வைதாளியாடுவார், கடிகையார் (Time-keepers), சாந்திக் கூத்தர், களத்தாடும் கூத்திகள், அகக்கூத்தாடும் பதியிலார், பரத்தையர், பணிப்பெண்கள், தோற்கருவி முத லிய பலவகைக் கருவிகளை இசைப்பவர், பரியாசகர் (விகடர்), குதிரைப்பாகர், யானைப்பாகர், தேர்ப்பாகர், காலாட்படை யினர் முதலியோர் வாழ்ந்த தனித்தனித் தெருக்கள் என்பன பட்டினப் பாக்கத்தை அழகு செய்தன.

5. **நாளங்காடி** : மேற்கூறப்பட்ட நகரப் பகுதிக ளிரண்டிற்குமிடையில் பொதுநிலமிருந்தது. அங்கு வரிசை வரிசையாக வளர்ந்த மரங்களைக்கொண்ட சோலை இருந்தது. அம்மரங்களையே தூணாகக்கொண்டு கட்டப்பட்ட கடைகள் மிகப் பலவாக விளங்கின. அவற்றின் தொகுதி நாளங்காடி எனப்பட்டது. அங்கு முசுகுந்தன் ஏவலால் நிலைத்த நாளங் காடிப் பூதத்திற்குக் கோயில் இருந்தது. சித்திரை மாதத்துச்

சித்திரை நாளில் மறக்குடிப் பெண்டிர் அப்பூதத்தை வழி பட்டு, "எம் மன்னனது நாடு முழுதும் வறுமை நீங்கி வளம் சிறப்பதாக," என வாழ்த்தித் துணங்கைக் கூத்தும், குரவைக் கூத்தும் ஆடுதல் வழக்கம். அரசன்மேல் அளவுகடந்த பற்றுடைய வீரர்கள் தம் வேந்தன் நலத்தைக் கருதித் தம் தலைகளை யறுத்துப் பூதத்திற்குப் பலியிட்டுவந்தனர். இந்நாளங்காடியைப் போலவே மருவூர்ப்பாக்கத்தில் இராக்கடைகள் இருந்தன. அவற்றின் தொகுதி 'அல்லங்காடி' எனப்பட்டது.

6. **பலவகை மன்றங்கள் :** பொருளைக் களவு செய்வோரை அம்பலப்படுத்தி அவமானப்படுத்தும் வெள்ளிடை மன்றம், பலவகை நோயாளர் நீராடிய அளவில் நலனைச் செய்யும் பொய்கையுடைய இலஞ்சி மன்றம், (இலஞ்சி-மடு) பித்துக்கொண்டவர், நஞ்சுண்டவர், விடக்கடியுண்டவர், பேய் பிடிக்கப்பட்டவர் ஒரு முறை சூழ்ந்து வருதலால் அவர்கள் தெளிவு பெறக் காரணமாகிற ஒளியை வெளிப்படுத்தும் நீண்ட கல் நிறுத்தப்பெற்ற மன்றம், பொய்த் தவ வேடங் கொண்டவரும், கணவரை வஞ்சித்தொழுகும் பெண்டிரும், தீய அமைச்சரும், பிறர் மனை விழைந்தோரும், பொய்க்கரி புகன்றோரும், புறங்கூறுவோரும் ஆகிய இவர்களைத் தண்டிக்கும் இயல்புடைய பூதம் நிலைபெற்ற பூத சதுக்கம், அரசனது செங்கோல் சிறிதளவு தவறினாலும் அவனது அறங்கூறவையத்தார் நடுவுநிலை தவறினும் நாவாற் கூருது நீர் உகுத்துக் கண்ணுற் கூறும் பாவையொன்று நிற்கும் பாவை மன்றம் ஆகிய ஐந்தும் பூம்புகாரில் குறிக்கத் தக்க மன்றங்களாகும்.

7. **கோயில்கள் :** பூம்புகாரில் இருந்த கோயில்களில் (1) சிவன் கோயில் (2) பெருமாள் கோயில் (3) பலராமன் கோயில் (4) இந்திரன் கோயில் (5) முருகன் கோயில் (6) சூரியன் கோயில் (7) சந்திரன் கோயில் (8) புத்தர் கோயில் (9) அருகதேவன் (சமணர்) கோயில் என்பன குறிப்பிடத் தக்கவை. சமணர் மடத்தில் துறவு பூண்ட ஆடவரும் இருந்தனர்; பெண்டிரும் இருந்தனர். அவருள் ஆடவர் அடிகள் என்றும், பெண்டிர் அடிகள், குரத்திமார் என்றும் அழைக்கப் பட்டனர். பௌத்த மடத்திலும் ஆண் துறவிகளும் பெண்

துறவிகளும் இருந்தனர். ஆண் துறவிக்குப் பிக்கு என்றும் பெண் துறவிக்குப் பிக்குணி என்றும் பெயர்கள் வழங்கின.

8. **தெருக்களும் வீடுகளும் :** பூம்புகார் நகரத் தெருக்கள் அகன்றும் காற்றோட்ட வசதிக்கேற்பவும் அமைந் திருந்தன. தெருக்களிலிருந்த பெரும்பாலான வீடுகள் மாடமாளிகைகளாகக் காணப்பெற்றன. சில மாளிகைச் சுவர்களில் தேவர், மக்கள், விலங்குகள், பறவைகள் முதலிய உயிர்களைக் குறிக்கும் சுதையுருவங்கள் காணப்பெற்றன. மானின் கண் போன்ற தொளையிடப்பட்ட சாளரங்கள் மாளி கைகளில் இருந்தன. அயல் நாட்டவர் தமக்கென அமைத் துக்கொண்ட கட்டடங்கள் காண்போர் கண்களை அயலிற் செல்ல விடாமல் தடுத்தனவாய் மிக்க வேலைப்பாடு கொண் டிருந்தன என்று சிலப்பதிகாரம் செப்புகின்றது. சில வீடுகள் தட்டை ஓடுகள் இடப்பெற்றுச் சாந்து பூசப்பெற்றவை. அவை வேயா மாடங்கள் எனப்பட்டன. சில மாடங்கள் மிக உயர்ந்து காணப்பட்டன. அவை சொர்க்கத்தை ஒத்தன என்று பட்டினப்பாலை பகர்கின்றது. அவற்றில் வாழும் மகளிர் தென்றல் காற்று வீசும் சாளரங்களின் எதிரே நின்று, அங்காடித் தெருவில் மாதர்பாட, குழல்ஊத, யாழ்வாசிக்க, முரசுகொட்ட, முழவு ஒலிப்ப நடைபெறும் முருக விழாவைக் காண்பர் ; முருகக் கடவுளையும் பிறதெய்வங்களையும் அங் கிருந்தபடியே தம் கைகளைக் குவித்து வணங்குவர். மாளிகை யில் மேற்பகுதி நிலவு காயத்தக்க திறந்த வெளியாக அமைக் கப்பெற்றிருந்தது. அது ‘நிலா முற்றம்’ எனப் பெயர் பெற்றது.

9. **வனங்கள் :** பூம்புகார் நகரத்து வனங்களில் குறிப்பிடத்தக்கவை சில. அவற்றுள் தண்ணீரை நிரப்பவும், அத்தண்ணீரை வெளியேற்றவும் வல்ல இயந்திர அமைப் புடைய வாவியைத் தன்னகத்தே பெற்ற அழகிய பூஞ்சோலை ஒன்று. அஃது அரசர் அமைச்சர் முதலியோர்க்கு உரிய இட மாகும். மற்றொன்று உய்யான வனமென்பது. சூரிய கிர ணத்தால் சிறகையிழந்த சம்பாதி என்ற பறவையிருந்த சம்பாதி வனமொன்று. காவிரியின் தந்தையென்று கூறத் தக்க கவேரன் தவம் செய்த கவேரவனம் ஒன்று. உவவனம்

என்பது ஒன்று. அவ்வனத்தில் தன் அகத்துள் இருப்பவர் ஓசையை வெளிப்படுத்தாமல் அவர்தம் உருவங்களை மட்டும் வெளிப்படுத்தும் பளிங்கு மண்டபம் ஒன்று இருந்தது. அம் மண்டபத்தினுள்ளே மாணிக்கச்சோதி பரந்த பதுமபீடம் ஒன்று இருந்தது. பூம்புகார் நகர் தோன்றிய காலத்தே உடன் தோன்றியதான நன்காடு சக்கரவாளக்கோட்டம் எனப் பெயர் பெற்றது. அது நாற்புறத்தும் வாயில்களுடைய மதிலால் சூழப்பட்டது; காளிகோட்டமும் பலவகை மன்றங் களும், அருந்தவர், அரசர், பத்தினிப் பெண்டிர் இவர்கட்கு எழுப்பிய கோட்டங்களும் பிறவும் கொண்டது.

10. **அரங்குகள் :** அறிவாலும் திருவாலும் செழித் திருந்த பூம்புகார் நகரில் கலேகள் நன்கு வளர்க்கப்பட்டன என்று அரங்கேற்று காதையால் நன்கு அறியலாம்; அக் காதையில் கூறப்பட்டுள்ள மாதவி பாடிய நடன அரங் கத்தின் சிறப்பினே நன்கு தெளியலாம்.

11. **நகரப்பரப்பு :** கோவலன் கண்ணகியை அழைத் துக்கொண்டு பூம்புகாரை விட்டு நீங்கிய முறையைக் கூற வந்த இளங்கோவடிகள், நகரத்தின் மேற்குப் பக்கத்தில் ஊர் வாசலுக்கப்பால்—இலவந்திகை இருந்ததாகவும் குறிப்பிட் டுள்ளார். அதற்கப்பால், இருமருங்கும் சோலே சூழ்ந்த பெரிய சாலே வழியே பூம்புகார் மக்கள் சென்று நீராடும் திரு முகத் துறையைக் குறிப்பிடுகின்ருர்; அக்காலத்தில் அங் கொரு வாயில் இருந்ததாகவும் குறித்துள்ளார்; அதற்கப் பால் கோவலன் மேற்குத் திசையில் மதுரை நோக்கிச் சென் ருன் என்று குறித்துள்ளார். இவற்றை நோக்க, நகரத்தின் மேற்குப் பகுதியின் கடைசி எல்லே, காவிரிக் கரையில் திரு முகத் துறையிடத்து அமைந்த வாசல்வரை இருந்ததெனக் கொள்ளலாம். சதுக்கப் பூதம், "அவ்வூர் நாற்காத எல்லே யும் கேட்கும்படி தனது கடிய குரலால் உணர்த்தியது" என வரும் இளங்கோவடிகள் கூற்றையும், "காத நான்கு........ ஊர் சூழ்ந்த நாற்காத வட்டகையும்," என்னும் அரும்பத வுரையாசிரியர் குறிப்பையும் நோக்க, பூம்புகார் நகரம் நான்கு காதம் அதாவது நாற்பது மைல் சுற்றளவுடையது என்னும் உண்மை புலனுகும்.

12. திருவெண்காட்டில் தோன்றிய அடிகள் "திருவெண் காட்டு அடிகள்" என்று கூறப்படாமல், பட்டினத்தடிகள் என்று கி. பி. 10-ஆம் நூற்றாண்டில் கூறப்பட்டிருப்பதை நோக்கத் திருவெண்காடு, பழைய காவிரிப்பூம்பட்டினத்தின் ஒரு பகுதியாகவே பண்டையோர் கருதிவந்தனர் என்பது நன்கு விளங்கும். இவ்வாறு நுணுக்கமாகக் கவனித்துவரின், இன்றுள்ள காவிரிப்பூம்பட்டினத்தைச் சுற்றியுள்ள பல சிற்றூர்கள் பண்டைப் பூம்புகாரின் நகரப் பகுதிகளே என்பதை நன்கறியக் கூடும்.

### அருஞ்சொற்பொருள்

பட்டினப்பாலை - காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பையும், கரிகாற் சோழனுடைய ஆட்சி, கொடை, போர்ச் சிறப்புக்களையும் கூறும் நீண்ட பாட்டு. இது பத்துப் பாட்டு என்னும் நூற்றொகையுள் ஒன்று. கலம் - கப்பல். நாள் அங்காடி - பகல் கடைத்தெரு. கிழி - துணி. சங்கு அறுப்பவர் - சங்கினை அறுத்து வளையல் செய்பவர். வைதாளி - ஒரு வகைக் கூத்து. அல் - இரவுப் பொழுது. பொய்க்கரி - பொய்ச் சாட்சி. அறங்கூறு அவையம் - நீதிமன்றம். சுதை உருவங்கள் - சுண்ணம்பால் செய்த உருவங்கள். வாவி - குளம். பதும பீடம் - தாமரை மலர் போன்ற உருவம் அமைந்த மேடை. அருந்தவர் - முனிவர். அரங்குகள் - இயல், இசை, நாடகப் புலவர் தம் புலமையை வெளிப்படுத்தும் கலை மேடைகள். திரு - செல்வம். இலவந்திகை - பெரிய குளத்தைச் சூழ்ந்த சோலை.

### கேள்விகள்

1. பூம்புகார் என்ற பெயர் நகரத்திற்கு எக்காரணத்தால் வந்தது ?
2. பூம்புகாருக்கு இப்பொழுது வழங்கும் பெயர் யாது ?
3. மருவூர்ப்பாக்கத்தில் காணப்பட்ட தெருக்கள் எவை ?
4. பட்டினப்பாக்கத்தை அழகு செய்தன எவை ?
5. நாளங்காடியில் நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சிகள் எவை ?
6. பூம்புகாரில் இருந்த ஐவகை மன்றங்களின் சிறப்புக்கள் எவை ?
7. பூம்புகாரில் இருந்த தெருக்களும், மாளிகைகளும் எவ்வாறு விளங்கின ?
8. பூம்புகாரில் இருந்த வனங்கள் எவை ?
9. கலை வளர்ச்சி பூம்புகாரில் அமைந்திருந்தது என்பதை எவற்றால் அறியலாம் ?
10. பூம்புகார் நகரத்தின் பரப்பு அளவு எவ்வளவு ?

### பயிற்சி

1. சிறு குறிப்பு வரைக :—மருவூர்ப்பாக்கம், பட்டுச் சாலியர், அல்லங்காடி, பூதசதுக்கம், குரத்திமார், சுதை உருவங்கள்.

2. இப்பாடத்தின் துணையைக் கொண்டு, பண்டைப் பூம்புகாரில் நடைபெற்ற தொழில்களைக் கூறுக.

# 11. பூம்புகார் நகரம்–II

டாக்டர் மா. இராசமாணிக்கனுர் அவர்கள்,
M.A., L.T., M.O.L., (Ph.D.)

1. **புகார்க் கடற்கரை :** புகார்த் துறையில் கடலில் வரும் மரக் கலங்களைக் கரை நோக்கி அழைக்கும் கலங்கரை விளக்கம் இருந்தது. துறைமுகத்தில் பல நாட்டுக் கப்பல் களும் தத்தம் கொடிகள் அசைந்தாட நின்றுகொண்டிருந் தன. அவற்றில் மலைதரு பண்டங்களும், கடல்தரு பண்டங் களும், நிலமளிக்கும் பண்டங்களும் ஏற்றப்பட்டன ; இறக்கப் பட்டன. அயல் நாட்டுக் கண்ணுடிப் பொருள்கள், பட்டா டைகள், குடிவகைகள், பலவகை இயந்திரப் பொருள்கள் முத லியன இறக்குமதியாயின. கடலோரமாகவே கங்கைவரை சென்று வட இந்தியப் பொருள்களை இறக்குமதி செய்த சோழ நாட்டுக் கப்பல்களும் துறைமுகத்திலிருந்தன. இப் பொருள்களை இறக்கிக் கணக்கெடுக்கவும் ஏற்றுமதிப் பொருள்களைக் கணக்கிட்டுச் சோழர் முத்திரையாகிய புலி முத்திரை பொறிக்கப்பட்ட மூட்டைகளைக் கப்பலில் ஏற்றவும், நூற்றுக் கணக்கான மக்கள் துறைமுகத்தில் வேலை செய் தனர். இறக்குமதியாகும் பொருள்களைத் தீர்வை வரை யறுத்துக் கடமை (Custom) கொள்ளும் ஆயத்துறை (Cus- tom House) கள் இருந்தன ; பிறகு அப்பண்டங்கட்குச் சோழனது இலச்சினையை இட்டு அவற்றை இட்டு வைக்கும் பண்டசாலைகள் (Ware Houses), கிடங்குகள் (Godowns), உயர்ந்த மேடைகள் (Docks and Piers) இருந்தன. காவிரி கடலொடு கலக்கும் சங்கமுகத்திற்கு அயலதாகிய பூக்கள் மலர்ந்த நெய்தற்கானலிடத்துச் சோமகுண்டம், சூரிய குண் டம் என்னும் பெயரையுடைய இரண்டு குளங்கள் இருந்தன. அவற்றில் மூழ்கிக் காமனைத் தொழுபவர் இம்மையிலும் மறு மையிலும் கணவனைவிட்டு நீங்கார் என்று தேவந்தி என்ற ஒரு தோழி கண்ணகிக்குக் கூறினுள்.

2. காவிரிப்பூம் பட்டினம் வாணிகச் சிறப்பால் அக் காலத் தமிழகத்தில் சிறப்புற்றிருந்தது. அதனுற்ருன் இளங் கோவடிகள்,

"இருநில மன்னற்குப் பெருவளங் காட்டத்
திருமகள் புகுந்ததிச் செழும்பதி யாம்"

எனப் பாராட்டி,

"காலை யரும்பி மலருங் கதிரவனும்
மாலை மதியும்போல் வாழியரோ—வேலை
அகழா லமைந்த அவனிக்கு மாலைப்
புகழா லமைந்த புகார்."

என்று உளமார வாழ்த்தி அருளினர்.

3. **பிற்காலத்தில் பூம்புகார்:** கோவலனுக்குப் பிறகு மாதவியும் மணிமேகலையும் வாழ்ந்த காலத்தில் பூம்புகார் கடல்கொண்டு விட்டதாக மணிமேகலைக் காவியம் கூறுகிறது. அஃதாவது, கடல் உள்நோக்கி வந்ததென்பது பொருள். இதனால் காவிரிப்பூம்பட்டினம் முழுவதுமே அழிந்துவிட்டது எனக்கருத இடமுண்டாகிறது. ஆயின், கி. பி. 5-ஆம் நூற்றாண்டில் இருந்த புத்ததத்தர், கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞான சம்பந்தர் என்பவர் கூற்றுக்களிலிருந்து காவிரிப்பூம்பட்டினம் வளத்துடன் இருந்ததென்பது தெரிகிறது. மேலும் சம்பந்தர்க்கும் சுந்தரர்க்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்தவராகக் கூறத் தகும் இயற்பகை நாயனார் காலத்திலும் பூம்புகார் ஓரளவு நன்னிலையில் இருந்ததாகத் தெரிகிறது. இவற்றை நோக்க, மணிமேகலை கூறும் கடல்கோள், நகரத்தின் கடற்பகுதியை அழித்திருக்கும் என்று கொள்ளுதலே பொருந்தும்.

4. **புத்ததத்தர் கூற்று:** மேலே கூறப்பெற்ற புத்ததத்தர் ஒரு பௌத்த சமயப் பெரியார். இவர் "அபிதர்மாவதாரம்" என்னும் நூலைச் சோழ நாட்டில் இருந்து எழுதியவர். இவர், "காவிரிப்பூம்பட்டினம் செல்வ வணிகரைக் கொண்டது; மாட மாளிகைகள் நிரம்பியது; இனிய பூஞ்சோலைகளை உடையது; அரண்மனைகளைக் கொண்டது. கண்டதாசன் கட்டிய புத்தவிகாரத்தில் நான் இருந்து என் மாணவி சுமதியின் வேண்டுகோளால் இந்நூலை எழுதினேன்," என்று மேற்சொன்ன தமது நூலின் ஈற்றிற் குறித்துள்ளார். இக் கூற்றுக் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் பூம்புகார் இருந்த நிலையை ஒருவாறு உணர்த்துகிறது அன்றோ?

5. **சம்பந்தரும் பூம்புகாரும்:** இன்றுள்ள சாய்க் காட்டுக் கோயிலும் அதற்குக் கிழக்கேயுள்ள பல்லவன் ஈச் சரமும் சம்பந்தர் பாடல் பெற்றவை. "மாளிகைகள் நிறைந்த வளப்பம் மிகுந்த புகாரை அடுத்துச் சாய்க்காடு இருந்தது. அங்கு மலர்கள் பூத்த வாவிகள் பல. அங்குச் சோலைகள் மிகுதி; புன்னைமரங்களும் உண்டு. சோலை களில் மயில்கள் ஆடும். கோவிலில் பேரி முதலிய வாத்தி யங்கள் முழங்கும்" என்று சம்பந்தர் திருச்சாய்க்காட்டுப் பதிகத்துள் கூறியுள்ளார். மேலும் அவர்,

"வெண்மாட நெடுவீதித் தண்புகார்ச் சாய்க்காடு,"
"பூம்புகார்ச் சாய்க்காடு,"
"காவிரிப்பூம் பட்டினத்துச் சாய்க்காடு,"
"மங்குல்தோய் மணிமாடம் மதிதவழும் நெடுவீதிச்
சங்கெலாம் கரைபொருது திரைபுலம்புஞ் சாய்க்காடு"
"தையலார் பாட்டோவாச் சாய்க்காடு"

என்று கூறியிருத்தலை நோக்குக. "குழல், வீணை, மொந்தை, முழவு இவை ஒலிக்க, நடனமாதர் கழலின் ஓசை ஆர்க்க, மக்கள் பூம்புகாரைச் சேர்ந்த பல்லவனீச்சரத்தை வழிபடுகிறார்கள். தண்டு, உடுக்கை, தாளம், தக்கை ஒலிக்கப் பல்லவனீச்சரத்தில் நடனமாதர் நடமிடுகின்றனர்," என்று சம்பந்தர் பல்லவனீச்சரப் பதிகத்தில் குறித்துள்ளார். இத் தகைய சான்றுகளால் கி. பி. 7-ஆம் நூற்றாண்டுவரை யில் பூம்புகார் போற்றத்தக்க வளநகரமாக இருந்திருப்பதை நன்கறியலாம். ஆயின், இந்நகரம் இன்று வளமற்ற சிற்றூ ராகக் காணப்படுகின்றது.

6. **இன்றைய புகார்:** * மாயூரத்திலிருந்து காவிரிப் பூம்பட்டினம் போகும்பாதையில், 12-கல் அளவில் கைகாட்டி மரம்ஒன்று இருக்கின்றது. அதிலிருந்து கடற்கரைவரை ஒரே சாலை மூன்றுகல் தொலைவிற் போகின்றது. அதன் இரு புறமும் வீடுகள் இருக்கின்றன. அங்கிருப்பவர் பழங்குடி மக்கள். இரண்டு அக்கிரகாரங்கள் இருக்கின்றன. அங்கு மறை யவர் இருக்கின்றனர். சாலையிலிருந்து பிரிந்து செல்லும்

* இப்பண்டை நகரம் இருந்த இடத்தை யான் 12–3–'43-இல் சென்று பார்வையிட்டேன்.

கிளைப்பாதைகள் மேடுபள்ளங்கள் உடையன. சாலைக்கு இடப்புறமே சிறு குடியிருப்புகள் மிகுதியாக இருக்கின்றன. சாலைக்கு இருபுறத்திலும் பழைய உறைகிணறுகள் இருக்கின்றன. ‘இங்கு நாங்கள் கிணறுகள் தோண்டுவதில்லை; இவையெல்லாம் பழைய காலத்துக் கிணறுகள்,’ என்று அங்குள்ளார் கூறுகின்றனர். நெடுந்தெருவிற்கு இடப்புறம் சிறிது தொலைவில் பெருந்திடல்கள் இருக்கின்றன. ‘அவை அக்கிரகாரம் இருந்த இடம், வேளாளர் தெரு இருந்த இடம் என்று எங்கள் பாட்டனார் சொல்லக் கேட்டோம்,’ என்று 80 வயதுடைய கிழவர் ஒருவர் சொன்னார். அத்திடலைச் சுற்றிலும் வயல்கள் இருக்கின்றன. திடல்கள் மட்டும் தோண்டப்பட்டில. எங்குத் தோண்டினாலும் பழைய செங்கற்களும் மட்பாண்டச் சிதைவுகளும் காணக்கிடக்கின்றன.

7. **கோவில்கள்** : இம்மூன்று கல் நீளமுள்ள பாதை நெடுகப் பல சிறிய பழைய கோவில்கள் இருக்கின்றன. இவை பலவகைப் பட்டவை : (1) கீற்றுக் கூரையும் சுவர்களும் உடைய கோவில்கள்; (2) செங்கற் சுவர்களும் ஓட்டுக் கூரையும் கொண்ட கோவில்கள்; ஒரே அறை; அதைச்சுற்றி நாற்புறமும் அகன்ற திண்ணை; அறையுள்ளே சுதையால் இயன்ற சிலைகள்; சுவர்மீது கடவுளர் ஓவியங்கள்; சில உள்ளறைகளில் கற்சிலைகள் இருக்கின்றன. கூரைமீது கலசம் கொண்ட கோவில்கள் பல; சில இடங்களில் மூன்று கலசங்கள் இருக்கின்றன. இத்தகைய பழைய கோவில்கள் பிற இடங்களில் காண்டல் அருமை. சம்பாதிக் கோவில் என்னும் பெயருடன் இடிந்து பாழ்பட்ட மிகச்சிறிய கோவிற் பகுதி ஒன்று இருக்கின்றது.

8. **காவிரிக்கு வலப்புறம்** : காவிரிக்கு அப்பால் பெரிய மேடான இடம் பரந்து கிடக்கிறது. அதுவே பழைய பூம்புகார் நகரின் சிறந்த பகுதி என்று அங்குள்ளோர் கூறுகின்றனர். அம்மேட்டின்மீது பரதவர் குடில்கள் அமைத்து வாழ்கின்றனர். அவ்வழிவந்த அம்மை ஒருத்தியைக்கண்டு, ‘அம்மணல் மேட்டை எவரேனும் தோண்டிப் பார்த்தனரா?’’ என்று கேட்டேன். அவ்வம்மை, “அங்குஅகழ்ந்தது இல்லை,’’ என்று விடையிறுத்தாள். நான் திடுக்கிட்டேன். ஏன்?

"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை."

என்ற குறள் என் நினைவிற்கு வந்தது. இக்காலத்தில் பண்டிதரும் பயன்படுத்தாத 'அகழ்தல்' என்னும் தூய தமிழ்ச் சொல்லைக் கல்வி அறிவற்ற ஓர் அம்மை எளிமையாக உச்சரித்தாள் என்பது வியப்பே அன்றோ? பூம்புகார் அழிந்தாலும், பூம்புகார்க் காலத்துத் தமிழ்ச்சொல் அழியவில்லை என்பதை உணர்ந்து மகிழ்ந்தேன். சங்கமுகத் துறையில் தமிழ் உணர்ச்சி உடையார் நிற்பின், சங்ககால நினைவு எழும் என்பதிலோ—மாதவி பாடிய கானல் வரிப்பாடலின் நினைவு எழும் என்பதிலோ ஐயமில்லை.

வாழ்க பூம்புகார் !

### அருஞ்சொற்பொருள்

சோமன் - சந்திரன். இலச்சினை - அடையாள முத்திரை. சாய்க்காடு - பூம்புகாரின் ஒரு பகுதி ; பாடல்பெற்ற கோவில் உள்ள இடம். பல்லவன் ஈச்சரம் - பல்லவன் கட்டிய ஒரு கோவில். மங்குல் - மேகம். கானல்வரிப் பாடல் - கடற்கரை இடங்களிற் பாடப்பெறும் ஒருவகைப் பாடல்.

### கேள்விகள்

1. புகார் நகரத்தின் கடற்கரையில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் யாவை ?

2. சோமகுண்டம், சூரியகுண்டம் - இவைபற்றித் தேவந்தி யாது கூறினாள் ?

3. மணிமேகலை காலத்துப் புகார் நகரத்தின் ஒருபகுதி மட்டுமே கடலாற் கொள்ளப்பட்டிருக்க வேண்டும் என்பது எவற்றால் வலியுறுத்தப் படுகிறது ?

4. இன்றுள்ள காவிரிப்பூம்பட்டினத்தில் பழைய புகாரின் அடையாளங்கள் எங்கு - எவ்வாறு காணப்படுகின்றன ?

5. புகார் அழிந்தாலும் பண்டைக் காலத்துத் தமிழ்ச்சொல் அழியவில்லை என்பது எதனால் விளங்குகிறது ?

### பயிற்சி

1. இவ்விரண்டு பாடப் பகுதிகளையும் துணையாகக் கொண்டு, பூம்புகாரின் அமைப்பினை ஒரு கட்டுரையில் விளக்கி வரைக.

2. பூம்புகார் போல இப்பொழுது பொலிவிழந்து கிடக்கும் பண்டை நகரங்கள் சிலவற்றின் பெயர்களைக் குறிப்பிடுக.

3. நீவிர் அறிந்துள்ள இக்கால நகரம் ஒன்றின் அமைப்பு முறையை விளக்கி வரைக.

# 12. பல்லவர் காலத்துச் சிற்பங்கள்

திருவாட்டி R. ஜனுபாய் அம்மையார் அவர்கள், B. Sc. (Hons.)

[இவர் திருச்சிராப்பள்ளி - சீதாலட்சுமி இராமசுவாமி மகளிர் கல்லூரியில் வேதிக்கலை விரிவுரையாளர் ; சிற்ப ஓவியக் கலையுணர்ச்சி மிக்கவர்.]

1. உயர்திணை அஃறிணைப் பொருள்களைப் படமாக வரைந்து காட்டும் கலை ஓவியக்கலை எனப்படும். கல், உலோகம், செங்கல், மரம், சுதை, தந்தம், மெழுகு முதலிய வற்றில் உருவங்களைத் திறம்பட அமைக்கும் கலை சிற்பக்கலை எனப் பெயர் பெறும். இக்கலையைப் பலபட விரித்துக்கூறும் **மயம்** முதலிய சிற்பக்கலை நூல்கள் முப்பத்திரண்டு நமது நாட்டில் இருந்தன எனின், நம் முன்னோர் பெற்றிருந்த சிற்பக்கலை அறிவை என்னென்பது !

2. வேதகாலத்திற்கு முற்பட்ட சிந்து வெளி நாகரிகப் புதை பொருள்களில் வெண்கலத்தால் இயன்ற நடனமாதின் உருவச்சிலை கண்டெடுக்கப்பட்டது. அஃது இந்தியச் சிற்பக் கலையின் பழைமையைப் பாங்குற உணர்த்துவதாகும். காந்தாரச் சிற்பங்கள், எல்லோராக் குகைச் சிற்பங்கள், அஜாந்தாச் சிற்பங்கள், அமராவதிச் சிற்பங்கள் என்பன இந்தியாவின் சிற்பக்கலை அறிவை உலகறியச் செய்வன.

3. இச்சிற்பக் கலைப் பயிற்சியில் நமது தமிழகம் பிற்பட்டதன்று. கி. பி. ஏழாம் நூற்றுண்டின் முற்பகுதியில் காஞ்சியை ஆண்ட மகேந்திரபல்லவன் குடைவித்த மண்டபப் பட்டுக் குகைக்கோவிற் கல்வெட்டில், ‘ அழியத்தகும் மண், மரம், சுதை என்பவற்ருல் கோவில் அமைப்பதை விடுத்து, விசித்திர சித்தன் மும்மூர்த்திகட்கு இக்கற்கோவில் அமைத் தான் ’ என்னும் செய்தி காணப்படுகின்றது. இதனை நோக்க, அவன் காலத்துக்கு முற்பட்ட தமிழ்நாட்டுக் கோவில்கள் (கட்டடங்கள் உட்பட) அழியத்தக்க பொருள்களால் ஆனவை என்பதை ஐயமற அறியலாம். ஆதலால், அவை இன்று நாம் கண்டு களிக்குமாறில்லை.

4. மகேந்திரன் காலத்தவரான திருநாவுக்கரசர் திருப்

பதிகங்களையும் மகேந்திரன் காலத்தை அடுத்து வாழ்ந்த திருஞான சம்பந்தர் திருப்பதிகங்களையும் காண, தமிழகத்தில் ஏறத்தாழ ஐந்நூறு சிவன் கோவில்கள் கி. பி. ஏழாம் நூற்றுண்டில் இருந்தன என்பது உறுதிப்படுகின்றது. அப்பாடல் பெற்ற கோவில்களே பல்லவர் காலத்திலும் பிற்பட்ட சோழர் காலத்திலும் கற்றளிகளாக மாற்றப்பட்டன என்பதை நாமறிவோம். அப்பழங்கோவில்கள் பலவற்றில் சுதையாலான வாயிற் காவலர், கஜலட்சுமி உருவங்கள் இருத்தலை இன்றும் காணலாம். திருவாரூர்ப் பூங்கோவிலிலும் திருவிடைமருதூர்ப் பெருங்கோவிலிலும் உள்ள சுதைச் சிற்பங்கள் கண்ணையும் கருத்தையும் கவர்வனவாகும். திருநாவுக்கரசரைச் சைவத்திற் புகுத்திப் பேறு பெறச்செய்த திருவதிகையில் உள்ள சிவபெருமான் கருவறை தேர்வடிவில் அமைந்துள்ளது. அதனிடம் காணப்பெறும் சுதைச் சிற்பங்கள் விழிகட்கு விருந்தளிப்பன அல்லவா? அவற்றை



குடைவரைக் கோவில், மகேந்திரவாடி.

ஒவ்வொரு தமிழரும் தம் செல்வமாகக் கருதிக் கண்டு களிக்க வேண்டும்.

5. இக்கோவில்கள் அல்லாமல், பல்லவர் (கி. பி. 600-900) அமைத்த மூவகைக் கோவில்கள் தமிழகத்தில் உண்டு. அவை (1) குடைவரைக் கோவில்கள், (2) ஒற்றைக் கற் கோவில்கள், (3) திருச்சுற்றும் விமானமும் கொண்ட கற்கோவில்கள் என்பன.

6. மலைச்சரிவில் அல்லது பெரும்பாறையின் ஒரு பக்கத்தில் குடையப்பட்டதே குடைவரைக் கோவில். இக்



குடைவரைக் கோவில், சாளுவன் குப்பம்.

கோவிலில் இரண்டு அல்லது மூன்று தூண்கள் அமைந்த முன் மண்டபமும், கடவுளர் திருவுருவங்களை வைக்க எதிர்ப்புறப் பாறைச் சுவரில் சிறிய புரைகளும் அமைந்திருக்கும். அப்புரைகளின் இருபுறங்களிலும் வாயிற்காவலர் உருவங்கள் செதுக்கப்பட்டிருக்கும். அக்காவலர் பாகையணிந்து, இடக் கையைக் கதைமீது ஊன்றி, அக்கையின்மீது வலக்கையை வைத்துக்கொண்டு, சிறிது முன்புறம் சாய்ந்து, பெருமிதத் தோற்றத்துடன் காணப்படுவர். இவ்வாறு அமைந்த குடை



ஒற்றைக் கற்கோவில், மாமல்லபுரம்.

வரைக் கோவில்கள் மாமண்டூர், மகேந்திரவாடி, பல்லாவரம் (பல்லவபுரம்), சீயமங்கலம், தளவானூர், மண்டபப்பட்டு,

வல்லம், திருச்சிராப்பள்ளி, திருமய்யம், குடுமியான்மலை முதலிய இடங்களிற் காணப்படுகின்றன.

7. மகேந்திரவாடியில் உள்ள குடைவரைக்கோவில் மகேந்திர பல்லவன் காலத்தது; அவனுக்கு அறுபதாண்டுகட்குப் பின் வந்த இராஜசிங்கன் காலத்தது; மாமல்லபுரத்தை அடுத்த சாளுவன் குப்பத்தில் இருப்பது. குகைவாயிலைச் சுற்றியும் புலித்தலைகளைப் பாருங்கள். அப்புலித்தலைகளிலும் குகைத் தூண்களிலும் அமைந்துள்ள நுண்ணிய சிற்ப வேலைப்பாட்டினைக் கூர்ந்து நோக்குக.

8. ஒற்றைக் கற்கோவில்களை அமைக்கத் தொடங்கிய பேரரசன் நரசிம்ம பல்லவன். அவைதாம் மாமல்லபுரத்தில் உள்ள—உலகத்தார் கண்டு வியப்புறுகின்ற—பஞ்சபாண்டவர் இரதங்கள். அவற்றுள் ஒன்றனைப் படத்திற் காண்க. இக் கோவிலின் புறச்சுவர்களில் காணப்படும் உருவங்களின் வேலைப்பாடும் கட்டடத்தின் பிற வேலைப்பாடுகளும் அக்காலச் சிற்பக் கலைத்திறனை நமக்கு நன்முறையில் அறிவிப்பனவாகும். தமிழகத்துச் சிற்பக் கலைக்கூடமாகவுள்ள மாமல்லபுரம் சென்று கலையுணர்ச்சியோடு இவற்றைக் காண்பவரே இவற்றின் வேலைப்பாட்டை நன்கறிதல் கூடும்.

9. செங்கற்களை அடுக்கிக் கோவில் அமைப்பது போலக் கருங்கற்களை அடுக்கிக் கட்டப்பட்டவையே இராஜசிங்கன் எடுப்பித்த மாமல்லபுரத்துத் கடற்கரைக் கோவில்; காஞ்சியிலுள்ள கயிலாசநாதர் கோவில். கடற்கரைக் கோவிலைப் படத்திற் கண்டு மகிழ்க. காஞ்சி கயிலாசநாதர் கோவிற் சிற்பங்கள் காணத்தக்கவை. அவற்றுட் சிவபிரான் ஆடிய நடன வகைகள் விழிகளைக் கொள்ளை கொள்வனவாகும்.

10. பல்லவர் வரலாற்று நிகழ்ச்சிகள் அனைத்தையும் சிற்பங்களாகக் காட்டுவது காஞ்சி–வைகுந்தப்பெருமாள் கோவில். அங்குள்ள திருச்சுற்றுச் சுவர்களில் எண்ணிறந்த சிற்பக் காட்சிகளைக் கண்டு களிக்கலாம். இத்தகைய சுவர்ச் சிற்பங்களில் இன்றளவும் சிறந்த வேலைப்பாட்டுடன் காணப்படுவது திருச்சிராப்பள்ளிக் குகைக்கோவிலில் உள்ள கங்காதரர் சிற்பமாகும். படத்தைப் பாருங்கள் : சிவபெருமான்

நான்கு கைகளுடன் காணப்படுகிருர். அவற்றுள் ஒன்று சடையிலிருந்து விழும் கங்கையைத் தாங்குகின்றது ; ஒரு கை உருத்திராக்க மாலையை வைத்துள்ளது ; வேருெரு கை மார்பின்மீதுள்ள பையரவின் தலையைப் பிடித்துள்ளது ; பிறிதொரு கை இடைமீது பொருந்தியுள்ளது. சிவபெருமானை அடியார் வழிபடுகின்றனர். மேற்புறத்திற் பக்கத்துக்கு ஒருவராகக் கந்தருவர் காட்சியளிக்கின்றனர்.



கடற்கரைக் கோவில், மாமல்லபுரம்.

11. ஓவியம், சிற்பம், இசை, நடனம், நாடகம் என்பன நாகரிகக் கலைகள். இவை 'நுண்கலைகள்' எனப்படும். உள்ளத்தின் உணர்ச்சிப் பெருக்கை நுட்பமாக வெளிக்காட்டுவதே 'நுண்கலை' என்பது. அந்நுண்கலைகளுள் சிற்பம் ஒன்று. இதனிற் பயிற்சி பெறும் சிற்பி, முதலில் தான் அமைக்க விரும்பும் உருவத்தைச் சித்திரமாகத் தீட்டிக் கொள்ளவேண்டும். எனவே, அவன் ஓரளவேனும் ஓவியக் கலையில் அறிவு பெற்றவனுக இருத்தல் வேண்டும் ; அடுத்துக்



கங்காதரர் சிற்பம், திருச்சிராப்பள்ளி.

காவியப் புலவனாக - தான் செதுக்கும் திருவுருவத்தின் நிலையை நன்கறிந்தவனாக - இருத்தல் தேவையாகும். அவன் இசை, நடனக் கலைகளையும் நன்கு அறிந்திருந்தாற்றான் அக்

கலைகளை விளக்கும் சிற்பங்களைச் சிறந்த முறையில் அமைத்தல் இயலும். இப் பல்வகை அறிவும் பொருந்திய சிற்பி அமைக்கும் சிற்பமே காண்பவர் விழிகளைக் கவர வல்லது. இத்தகைய உயர்நிலையில் அமைந்துள்ள சிற்பங்களுள் ஒன்றே மேலே கூறப்பட்ட கங்காதரர் சிற்பம். இவ் வுயர் வகைச் சிற்பங்கள் நம் தமிழகத்தில் கி. பி. 7, 8-ஆம் நூற்றுண்டுகளில் செய்யப்பட்டன எனின், அக்காலத் தமிழகம் சிற்பக் கலையிற் கொண்டிருந்த பெருவிருப்பையும் அதனோடு ஒருபடித்தான பிற கலைகளிற் பெற்றிருந்த மேம்பாட்டையும் நாம் நன்கறியலாம் அல்லவா ?

### அருஞ்சொற்பொருள்

சுதை - சுண்ணும்பு. மயம் - மயன் என்பவன் எழுதிய சிற்பக்கலை நூல். வேதகாலம் - சுமார் கி. மு. 1500-க்கு முற்பட்ட காலம். சிந்து வெளி நாகரிகம் மொஹெஞ்சொதாரோ, ஹரப்பா என்னும் இடங்களில் (சிந்து நதியும் அதன் துணையாறுகளும் பாயப்பெற்ற சமவெளியில்) பரவி யிருந்த நாகரிகம். பாங்குற - அழகு பொருந்த. காந்தாரம் - இன்றுள்ள மேற்குப் பஞ்சாப் மாகாணம். அமராவதி - கிருஷ்ணையாற்றங்கரையில் சாதவாகனர் ஆட்சிக் காலத்தில் பெரும்புகழுடன் விளங்கிய ஊர். அங்குப் பௌத்த மடங்களும் கோவில்களும் இருந்தன. அவற்றில் காணப்பெற்ற சிற்பங்கள் உலகப் புகழ் பெற்றவை. விசித்திர சித்தன் - மகேந்திர பல்லவனுடைய விருதுப் பெயர்களுள் ஒன்று. பிற்பட்ட சோழர்காலம் - கி. பி. 900 முதல் 1300 வரை. சுதை உருவம் - செங்கல், களிமண், சுண்ணும்பு, மரம் இவற்றுலாகிய உருவம். பூங்கோவில் - திருவாரூரில் உள்ள பெரிய சிவன் கோவிலின் பெயர். திருவதிகை - பண்ணுருட்டிப் புகைவண்டி நிலையத்திலிருந்து ஒரு கல் தொலைவில் கெடில ஆற்றங்கரையில் இருப்பது. கருவறை - மூலஸ்தானம். குடை - குடையப்பெற்ற. வரை - மலை. திருச்சுற்று - பிராகாரம். மாமல்லன் - முதலாம் நரசிம்ம வர்மன் (கி. பி. 630-660). இவன் பெயர் கொண்டதே மாமல்லபுரம் (மகாபலிபுரம்). பையரவு - விஷப்பையையுடைய பாம்பு.

### கேள்விகள்

1. சிற்பக்கலை என்பது யாது ?
2. சிந்துவெளி என்பது யாது ? அங்கிருந்த நாகரிகத்தின் காலம் யாது ?
3. இந்தியாவின் சிற்பக்கலை அறிவை உலகறியச் செய்வன யாவை ?
4. மண்டபப்பட்டுக் கல்வெட்டு அறிவிக்கும் செய்தி யாது ? அதனுல் வெளிப்படும் உண்மை என்ன ?

5. திருவாரூர்ப் பூங்கோவில், திருவிடைமருதூர்ப் பெருங்கோயில் - இவை குறிக்கப்பெற்ற சந்தர்ப்பம் என்ன ?

6. திருவதிகைக் கோவிலில் காணத்தகுவன யாவை ?

7. பல்லவர் அமைத்த மூவகைக் கோவில்கள் எவை ?

8. குடைவரைக் கோயிலின் அமைப்பு யாது ?

9. குடைவரைக் கோவில்கள் உள்ள இடங்கள் எவை ?

10. சாளுவன் குப்பத்தில் உள்ள குடைவரைக் கோவிலைப் பற்றி யாது அறிவீர் ?

11. பல்லவர் அமைத்த இரண்டாம் வகைக் கோவில்கள் எவை ?

12. பல்லவர் எடுப்பித்த மூன்றாம் வகைக் கோவில்கள் யாவை ?

13. காஞ்சி - வைகுந்தப் பெருமாள் கோவிலிற் காணத்தகும் சிற்பங்கள் எவை ?

14. கங்காதரர் சிற்பம் பற்றி யாது அறிவீர் ?

15. நாகரிகக் கலைகள் எவை ?

16. சிற்பி எக்கலைகளை அறிந்தவனாக இருத்தல் வேண்டும் ?

### பயிற்சி

1. சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறுக :—நுண்கலை, கண்ணையும் கருத்தையும், விழிகட்கு விருந்து, கண்டுகளிக்க, திருச்சுற்று, கருவறை, வேலைப்பாடு, கலையுணர்ச்சி.

2. சேர்த்துக் கூறுக :—வரை + கோவில், புலி + தலை, திரு + சிராப்பள்ளி, நன்கு + அறிதல், கல் + கோவில், அமைக்க + தொடங்கிய, காண + தக்கவை, திரு + சுற்று, பை + அரவு, மேல் + புறம், காட்சி + அளிக்கின்றனர், உணர்ச்சி + பெருக்கு.

3. பிரித்துக் காட்டுக :—நுண்கலை, நன்முறை, அறுபதாண்டு, வியப்புறு, கலைக்கூடம், கலையுணர்ச்சி, எண்ணிறந்த, ஐந்நூறு, பெருங்கோயில், பூங்கோவில், திருப்பதிகம்.

4. பல்லவர் அமைத்த மூவகைக் கோவில்களைப்பற்றி மூன்று பத்திகளில் ஒரு கட்டுரை வரைக.

5. 'பல்லவர் காலத்துச் சிற்பங்கள்' பற்றித் தக்க குறிப்புக்கள் தந்து ஒரு கட்டுரை எழுதுக.

6. நீவிர் கண்ட வேறு சிற்பங்களைப்பற்றி விளக்கம் தருக.

# 13. கிராமப் பொருளாதாரம்

திரு. நேமம் நா. நடராசன் அவர்கள், M. A., M. Litt.

(இவ்வாசிரியர் சென்னை - விவேகானந்தர் கல்லூரியில் பொருளாதார விரிவுரையாளர்; பொருளாதாரத் துறையில் ஆராய்ச்சிப்பட்டம் பெற்றவர்; இத்துறைபற்றிப் பல கட்டுரைகள் எழுதிவருபவர். அவற்றுள் இஃது ஒன்று.)

1. **முன்னுரை :** நமது இந்திய நாட்டில் கிராமங்களே மிகுதி; கிராம மக்களே நாட்டின் மக்கள் தொகுதியில் முக்கால் பகுதியினர் ஆவர். ஆதலால் கிராமப் பொருளாதார முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டுதான், எல்லாச் சீர்திருத்தங்களும் செய்யப்படல் வேண்டும். நம் நாட்டிலே செல்வம் ஈட்டும் துறைகளில் முதல் துறை பயிர்த் தொழிலே ஆகும். விவசாயத்தையும் கிராமத்தையும் அடிப் படையாகக் கொண்டுதான் புதிய சமுதாயம் ஏற்படுத்தல் வேண்டும். கிராமங்களின் செல்வநிலை உயர்ந்தால்தான் நாடு முன்னேற்றம் அடைய முடியும் என்பதை நாம் நன்கு உணரவேண்டும்.

2. **பயிர்த்தொழில் சீர்திருத்தத்தின் தேவை:** பிற நாடுகளைவிட நம் நாட்டில் பயிர்த்தொழில் சீர்திருத்தம் மிகவும் முக்கியமானது. நம் நாடு பயிர்த் தொழிலாளர் மிக்குள்ள நாடு. பெரும்பான்மையோர் உழவை ஒட்டியே வாழ்க்கை நடத்துகின்றனர். நூற்றுக்குத் தொண்ணூறு பேர் கிராமங்களில் வாழ்கின்றனர். மேலும் நம் நாட்டில் உழவு ஒரு தொழில்மட்டும் அன்று. அது தொன்றுதொட்டு வரும் ஒரு வாழ்க்கை முறையாகும். நீண்ட காலமாகவே நம் நாட்டில் பிற தொழில்களைவிட உழவுக்கு அதிக மதிப்பு உண்டு. நம் நாட்டின் கலை, பண்பாடு ஆகியவையும் பயிர்த் தொழிலாகிய உழவை ஒட்டியே வளர்ந்திருக்கின்றன.

3. பயிர்த் தொழில்தான் சிறப்புத் தொழில். அத்தொழி லாளரே சிறப்பானவர்கள் என்பது நம்முடைய பழங்காலக் கருத்துக்களில் ஒன்றாகும்.

> " உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
> தொழுதுண்டு பின்செல் பவர்."

என்ற வள்ளுவர் வாக்கே இதற்குச் சரியான சான்று ஆகும்

ஆனால் இன்று உழவுத்துறையில் மிகுந்த கவனமும் இரக்கமும் போதிய அளவு காட்டப்படவில்லை என்பது மிகவும் வருந்தத்தக்கது. ஆதலால், உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத உழவினை எப்படி வளரச்செய்யலாம் என்று நாம் யோசிக்க வேண்டும். இக்காலத்தில் பயிர்த்தொழில் மிகப் பழைய கால முறைகளை ஒட்டியே நடந்துவருகிறது. துண்டு நிலப்பகுதிகள், கிராமக் கடன்சுமை, குடியானவரின் அறியாமை, இயற்கையில் நிகழும் மாறுதல்கள் முதலிய பல துன்பங்கள் இத் தொழிலில் இருக்கின்றன. மேனாட்டார் உழவுத் தொழிலில் கையாளும் புதிய முறைகளை நன்கு அறிந்து, அவற்றை நம் நாட்டிற்கு ஏற்ற முறையில் நாம் பயன்படுத்தினால், மேற்சொன்ன குறைகள் நீங்கலாம்; உழவுத் தொழிலும் உயர்நிலையை அடைதல்கூடும்.

4. **துண்டு நிலச் சாகுபடி:** நிலங்கள் மிகச் சிறிய பாகங்களாகப் பிரிக்கப்பட்டுத் தனித்தனியாக உழப்பட்டு வருகின்றன. இதுவே நம் பயிர்த்தொழிலின் இலாபமின்மைக்கு ஒரு சிறப்புக் காரணமாகும். மிகப் பெரிய பண்ணைகள் அமைக்க இயலாவிடினும், பண்ணைகள் ஓர் அளவுக்குக் குறைவாக இருக்கலாகாது. அஃது ஓர் அளவுக்குக் குறுகினால், அதிலிருந்து குறைந்த இலாபமும் அடைய முடியாது. பண்ணைகள் இவ்வாறு துண்டுகளாகப் பிரிக்கப்படுவதற்கு இந்து முஸ்லிம் வாரிசுச் சட்டங்களே சிறப்புக் காரணம் என்னலாம். பெரிய பண்ணைகள் இரண்டு மூன்று தலைமுறைகளில் சிறிய பண்ணைகளாகப் பிரிக்கப்படுகின்றன. நிலத்தின்மேலுள்ள மக்கள் நெருக்கம், துணைத் தொழில்கள்[1] இல்லாமை, வாரிசுச் சட்டங்கள், நிலமிருப்பதால் சமூகத்தில் இருக்கும் மதிப்பு என்பன அனைத்தும் சேர்ந்து இந்த நிலைமையை உண்டாக்கியுள்ளன. நமது மாகாணத்தில் மொத்தக் குடும்பங்களில் நூற்றுக்கு ஐம்பதுபேர் ஏறத்தாழ இரண்டு ஏக்கர் நிலம் பெற்றுள்ளனர். பத்து ஏக்கர் நிலத்திற்குமேல் உள்ளவர்கள் நூற்றுக்குப் பத்துப் பேருக்குமேல் இல்லை. இவ்வாறு இலாபமற்ற பல துண்டு நிலப்பகுதிகள்

[1] Subsidiary Industries

இருக்கின்றன. கூட்டுறவு முறையால் பஞ்சாபிலும் மத்திய மாகாணத்திலும் பல துண்டு நிலப்பகுதிகள் ஒன்று சேர்க்கப்பட்டு, பெரிய பண்ணைகளாகச் செய்யப்பட்டுள்ளன. தக்க வழிகளால் துண்டு நிலப்பகுதிகளை ஒன்றுசேர்த்து இலாபம் தரக்கூடும் பண்ணைகளாகச் செய்யவேண்டுவது ஓர் சிறப்புச் சீர்திருத்தமாகும். மேலும் ஒரு குறிப்பிட்ட அளவுக்குமேல் வயல்களைப் பிரிப்பதைத் தடை செய்யச் சட்டம் இயற்றவேண்டும். அத்துடன் ஒருவன் எவ்வளவு நிலம் மிகுதியாக வைத்துக்கொள்ளலாம் என்பதையும் வரையறுக்கவேண்டும். ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேலுள்ள நிலங்களைத் தனிப்பட்டவரிடமிருந்து அரசாங்கத்தார் வாங்கி, மற்றவர்களுக்குக் கொடுக்கலாம்.

5. **கிராமக் கடன் சுமை :** இந்தியாவிலுள்ள கிராமக் கடனின் முழுத்தொகை 1500 கோடி ரூபாய்க்கு மேலுள்ளது. நம் சென்னை மாகாணத்தில் உள்ள கிராமக் கடனின் முழு அளவு இருநூற்றுப் பதினெட்டுக்கோடி ரூபாய்க்குக் குறைவில்லை. உணவுப் பொருள்களின் விலைகள் ஏறியிருப்பதால் கடன்சுமை இப்பொழுது சரியாகத் தெரியவில்லை. ஆனால் பொருளாதார மந்தம் ஏற்பட்டுப் பொருள்களின் விலைகள் விழுந்தால் கிராமக் கடன்சுமை மிகுதியாகும். இக் கடன் சுமைக்குப் பல காரணங்கள் இருக்கின்றன. அவற்றுள் குடியானவர்களின் ஏழ்மை நிலையே இதற்குச் சிறப்புக் காரணமாகும். கணக்கு வைத்துக்கொள்ளும் பழக்கமும் சேமித்துவைக்கும் வழக்கமும் அவர்களிடம் இல்லை. அவர்கள் சாதாரண காலங்களில் எளிய வாழ்வைக் கைப்பற்றி வந்த போதிலும், திருமணம் முதலிய சிறப்புக் காலங்களில் கணக்கின்றிக் கடன் வாங்கிச் செலவு செய்கின்றனர். மேலும் கடன் பல தலைமுறைகளாக இருந்துவருகிறது. நம் நாட்டு உழவர்கள் கடனிலே பிறந்து கடனிலே வாழ்ந்து கடனிலே இறக்கின்றனர். கடன் எளிதில் கிடைப்பதும் நமது சட்ட முறைகளும் இச்சுமையை அதிகரிக்கின்றன. கொடுக்கல் வாங்கல் செய்பவருடைய முறைகளும் மிகுந்த வட்டியும் கடன்களின் தொகைகளை மிகுதிப்படுத்துகின்றன. சென்னை அரசாங்கத்தார் அண்மையில் 'உழவர் கடன் நிவாரணச்

சட்டத்'தைத் திருத்தியிருக்கின்றனர். கிராமக் கடன் நிவாரணமும் கூட்டுறவு முறைகளும் வேண்டும் அளவு முற்போக்கு அடையவில்லை. நில அடமான பேங்குகள், கூட்டுறவு இலாக்கா ஆகியவற்றின் உதவியைக்கொண்டு கடன் ஒழிப்புக்கான பல வழிகள் ஆராயப்படவேண்டும்; உழவர்க்குப் போதுமான பண வசதி செய்யப்படவேண்டும்.

6. **துணைத் தொழில்கள்:** நம் நாட்டில் குடியானவர்களுக்கு ஆண்டுமுழுவதும் வேலையில்லை. நிலத்திலிருந்து கிடைக்கும் வருமானம் குறைவானது. அதனால் கிராமங்களில் வறுமை தாண்டவமாடுகிறது. இதனைப் போக்க, கரும்புச்சாறு பிழிந்து வெல்லம் செய்தல், எண்ணெய் ஆட்டுதல், பருத்தியிலிருந்து கொட்டையை நீக்குதல், பாய்கள், கூடைகள், மேஜை, நாற்காலி, தோல் சாமான்கள் முதலியன செய்தல்போன்ற பல கைத்தொழில்கள் கூட்டுறவு முறையில் அமைக்கப்படுதல் வேண்டும். இவ்வமைப்புக்கு வேண்டும் பணவுதவியைக் கூட்டுறவுச் சங்கங்களும் அரசாங்கமும் அளித்தல் வேண்டும்.

7. **கால் நடையின் வளர்ச்சி:** உழவிற்குக் கால் நடைகள் தேவை. ஐரோப்பா, அமெரிக்கா முதலிய நாடுகளில் கால்நடைகளின் வளர்ச்சி மிகுதியாகக் கவனிக்கப்படுகிறது. நம் நாட்டில் கால்நடைகள் தக்க முறைகளில் வளர்க்கப்படுவதில்லை. நாம் அவற்றிற்குரிய மேய்ச்சல் தீனி வசதிகளை மிகுதிப்படுத்துதல் வேண்டும். உயர்தரமானவையும் உடல்வளமுள்ளவையுமான கால்நடைகளை வளர்க்கவேண்டுவது நமது கடமையாகும். தொத்துநோய்களை அடியோடு அகற்றுவதற்கு உரிய விலங்கு மருத்துவக்கூடங்களை ஏற்படுத்துதல் வேண்டும்.

8. **நீர்ப்பாசனம்:** வயல்கட்குத் தண்ணீர் உதவுவதில் நீண்டகாலமாகவே நமது நாட்டில் பல திட்டங்கள் இருந்திருக்கின்றன. அவற்றுள் ஏரிகள், கிணறுகள், அணைக்கட்டுகள், கால்வாய்கள் என்பன சிறப்பானவை. இவை நன்கு பாதுகாக்கப்படல்வேண்டும். இவற்றுடன் வருங்கால நலனுக்குரிய புதிய நீர்த்தேக்க திட்டங்கள் தேவையாகும். இந்திய அரசாங்கத்தார் இத்துறையில் மிகுந்த கவ

னம் செலுத்திவருகின்றனர். நமது சென்னை அரசாங்கம் புதிய நீர்த்தேக்க திட்டங்களைத் தொடங்கும் முயற்சியில் மிகுந்த கவலை காட்டிவருதல் பாராட்டத் தக்கது. பல ஆண்டு களாகக் கவனிக்கப்படாத இத்துறை இப்பொழுது திட ரென்று எல்லோராலும் ஆராயப்பட்டுவருகிறது. நீர்ப்பாய்ச் சலுக்குரிய நிலங்களை மிகுதிப்படுத்தினால் பஞ்சங்களின் அச்சம் அகலும். அமெரிக்காவில் நிறுவப்பட்டிருக்கும் 'டென்னிஸி பள்ளத்தாக்குத் திட்டம்' போன்ற பல திட் டங்கள் இந்தியாவில் நிறைவேற்றப்படல் வேண்டும். இராம பாத சாகர், துங்கபத்திரை - கிருஷ்ணை - பெண்ணையாறு - நீர்த்தேக்க திட்டங்கள் நிறைவேற்றப்படின், இம்மாகாணத் தின் பயிர்த்தொழில் மிகுதிப்படும். அதன் வாயிலாகப் பொருளாதார நிலை மிகவும் உயரும் என்பதில் ஐயமில்லை. உணவுப் பொருள்கள் வளர்ச்சிக்கு இத்திட்டங்கள் தேவை யாகும். நம் நாட்டிலுள்ள இயற்கை வளங்களை நன்கு பயன்படுத்தி அளவுக்கு மேற்பட்ட உணவுப் பொருள்களை உண்டாக்குதல் வேண்டும். இவை நிறைவேறின், இப் பொழுது போல அயல் நாடுகளுக்குச் சென்று உணவுப் பொருள்களுக்காக மடிப்பிச்சை கேட்க வேண்டும் தேவை ஏற்படாது.

9. **நிலவரிச் சீர்திருத்தம் :** நிலவரி மிகவும் பிற் போக்கான முறையில் விதிக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது நடைமுறையில் இருக்கும் நிலவரியின் சுமை மிகுதியாகும். இதை மாற்ற வேண்டுவதன் தேவையைப் பற்றி நாம் சொல்ல வேண்டுவதில்லை. இதற்குப் பதிலாக நிலத்தின் பரப்பு, வளமை முதலியவற்றைக் கவனித்து ஒரு சிறு வரி விதிக்கப் படல் வேண்டும். மேலும் பயிர்த் தொழில் வருமானத்தின் மீது படிப்படியாய் உயரும் வருமானவரி விதிக்கப்படல் வேண்டும்.

10. **குத்தகை-வார முறைகள் :** நம் சென்னை மாகா ணத்தில் ரயத்வாரி முறையிலுள்ள நிலங்கள் விரிவாகப் பிரித் துக் கொடுக்கப்பட்டுள்ளன. ஜில்லாவுக்கு ஜில்லா வாரம், குத்தகை முறைகள் வேறுபடுகின்றன. பொதுவாக நம் மாகாணத்தில் ஏறக்குறைய நாலாயிரத்துக்கு மேற்பட்ட

கிராமங்களில் ஆராய்ச்சி விசாரணை நடத்தியதிலிருந்து, வாரவிகிதங்களும் குத்தகை முறைகளும் கூடுமளவு நியாய மாகவும் நிலையாகவும் உள்ளன என்பது தெரிகிறது. பெரும் பாலான நிலங்களை அவற்றின் உரிமையாளரே பயிர் செய்து வருகின்றனர். வெள்ளத்தாலும் பருவ மழையின்மையாலும் அடிக்கடி நஷ்டம் ஏற்படுகிறது. இது நில உரிமைக்காரர் கள், குத்தகை வாரக்காரர்கள் ஆகிய எல்லோருக்கும் துன் பத்தை உண்டுபண்ணுகிறது. இச்சமயங்களில் நம் அர சாங்கத்தார் செய்யும் சிறிதளவு வரிக்குறைவு போதாது. வரிநீக்கம் செய்வதில் அரசாங்கத்தார் தாராளமான கொள் கையைப் பின்பற்றல் வேண்டும் ; அமெரிக்காவில் இருப்பது போல் விரிவான 'பயிர்த் தொழில் பாதுகாப்புத் திட்டம்' ஒன்றை நிறுவுதல் வேண்டும்.

11. **உழவுத் தொழிலாளர்:** நிலமில்லாத உழவுத் தொழிலாளர் நமது மாகாணத்தில் உள்ள எல்லாக் கிராம மக்களிலும் பதினைந்து சதவிகிதத்திற்குமேல் இல்லை. இவர் கட்குப் போதிய கூலி தரப்படாமையின், இவர்தம் கிளர்ச்சி நமது மாகாணத்தில் மிகுதிப்பட்டுவருகிறது. அதனை ஒடுக்க வேண்டுமாயின், இவர்களுக்கு நியாயமான கூலி விகிதங்கள் வரையறுக்கப்படல் வேண்டும். கூலி விகிதங் களை வரையறுக்கும்போது, நாம் பயிர்த் தொழிற் செலவுகளை மறத்தல் கூடாது. நம் நாட்டில் பயிர்த் தொழில் பருவகால மழையில் ஒரு சூதாட்டம். உழவரின் வருமானம் அதிர்ஷ் டத்தைப் பொறுத்திருக்கிறது. மேலும் நல்ல விளைச்சல் இருந்து பொருள்களும் நல்ல விலைக்கு விற்கப்பட்டால்தான் நிலக் கிழவர்களால் மிகுதியான கூலி விகிதங்கள் கொடுத் தல் முடியும். கூலி விகிதங்களை வரையறுக்கும் பொழுது இச்செய்திகளை நாம் மறத்தல் கூடாது. ஆனால் தொழி லாளர்க்குத் தேவைப்படும் குறைந்த அளவு வாழ்க்கை வசதி களை வழங்க வேண்டுவது சமூகத்தின் கடமையாகும். எவ்வகை வேறுபாட்டையும் மறந்து, பயிர்த்தொழிலில் ஈடு பட்டுள்ள எல்லோரும் விளைச்சலைப் பெருக்க முயற்சித்தல் வேண்டும். இஃது அனைவரையும் வாழ வைக்கும் முயற்சியாகும் ; நாட்டுக்குரிய பெரிய திருப்பணியாகும்.

12. **மற்ற முறைகள்:** விதைகள், நல்ல உரம் முதலியன தக்க முறையில் உழவர்களுக்குக் கொடுக்கப்படல் வேண்டும். உழவர்களுக்குப் பொருளுதவி செய்யவும், அவர் தம் சரக்குகளுக்குத் தக்க விலைகள் கிடைக்கவும் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ஏற்படுத்தப்படல் வேண்டும். இங்ஙனம் ஏற்பட்ட சங்கங்கள் ஏறத்தாழ இருநூறு நமது மாகாணத்தில் இருக்கின்றன. விளைபொருள்களை இலாபகரமாக விற்பதற்கு எல்லா வழிகளிலும் அரசாங்கத்தார் உதவுதல்வேண்டும்.

13. பள்ளிகளில் பயிர்த்தொழில், குடிசைத் தொழில்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட கல்வி கற்பிக்கப் படல் வேண்டும். அத்துடன் சமூக கலாசார வளர்ச்சிக் கான விவரங்களும் கற்பிக்கப்படலாம். வருங்காலத்தில் பள்ளிகளில் தொழிற்கல்வி மிகுதியாகப் போதிக்கப்படல் வேண்டும். மாணவர்களை அந்தந்த மாகாணப் பயிர்த் தொழில் சார்பான துணைத்தொழில் துறைகளில் பழக்குவிக்க வேண்டுவது இன்றியமையாதது. நாம் நமது பயிர்த் தொழிற் கல்வி முறையை முழுவதும் சீர்திருத்தி அமைத்தல் வேண்டும். புதிய முறைகளைப் பின்பற்றுவதற்குத் தக்க வாறு உழவர்க்கும் போதிய கல்வி கற்பித்தல் வேண்டும். மனித சக்தியைக் கவனிக்காத பயிர்த்தொழில் தொடர்பான எந்தச் சீர்திருத்தமும் வெற்றி பெறுதல் முடியாது. நமது மாகாணத்தில் இப்பொழுது மதுவிலக்கு முற்றிலும் நடை முறைக்கு வந்துவிட்டது. இதனால் உழவர் சமூகப் பொரு ளாதாரத் துறைகளில் முன்னேற அரிய வாய்ப்பு இருக்கிறது. உழவர் இதனை நன்கு பயன்படுத்திக்கொள்ளின், நன்மை அடையலாம்.

14. முடிவுரை: நாம் பலவகைச் சீர்திருத்தங்களைப் பற்றி மேலே கூறியுள்ளோம். துண்டு நிலங்களை ஒன்று படுத்தல், நிலவரிச் சீர்திருத்தம், நில நீதிமன்றங்களை அமைத் தல், நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்குதல், கிராமக் கல்வி யைப் பரப்புதல், விஞ்ஞான ஆராய்ச்சிக்கு ஊக்கமளித்தல் போன்ற துறைகளில் அரசாங்கத்தார் சட்டங்களை இயற்றி, ஊக்கமாகப் பங்கு எடுத்துக்கொள்ளல் வேண்டும். மேலும் கிராமச் சீர்திருத்தத்தில் சுயநலமின்றிப் பொதுநலச் சேவை

யில் ஆர்வம் கொண்ட ஆண்களும் பெண்களும் செய்யும் தொண்டு சிறப்பானதாகும்.

## அருஞ்சொற்பொருள்

ஈட்டும் - சம்பாதிக்கும். கலை - கல்வி. பண்பாடு - நாகரிகம். தொழுது - வணங்கி, பண்ணை - பல காணி நிலங்களை ஒன்று சேர்த்துப் பயிரிடும் ஓர் அமைப்பு. வாரிசு - பரம்பரை. ரயத்வாரி முறை - பயிரிடுவோர் நிலத்திற்கு உரிமை கொண்டாடும் முறை. நிவாரணம் - நீக்கம்; நீங்குதல். கால்நடை - ஆடுமாடு முதலியவை. வளமை - செழிப்பு. உரம் - எரு.

## கேள்விகள்

1. கிராமங்களின் செல்வ நிலை உயர்ந்தால் ஏற்படும் நன்மைகள் எவை?
2. பயிர்த்தொழிலைத்தான் முதலில் சீர்திருத்த வேண்டும் என்று கூறுவதன் நோக்கம் யாது?
3. பயிர்த்தொழிலில் இப்பொழுது இருக்கும் துன்பங்கள் எவை?
4. துண்டுநிலச் சாகுபடியைவிடப் பண்ணை முறையே சிறந்தது என்று ஏன் கூறவேண்டும்?
5. கிராம மக்களுக்குக் கடன் சுமை ஏற்படக் காரணங்கள் எவை? அவற்றை எவ்வாறு நீக்கலாம்?
6. பயிர்த்தொழிலாளர் செய்யக்கூடிய துணைத்தொழில்கள் எவை?
7. கால்நடை வளர்ச்சிபற்றிச் செய்ய வேண்டும் சீர்திருத்தங்கள் எவை?
8. நீர்ப்பாசன திட்டங்களால் ஏற்படும் நன்மைகள் எவை?
9. உழவுத் தொழிலாளருக்குக் கூலி முறைகள் எவ்வாறு ஏற்படுத்தல் வேண்டும்?
10. கூட்டுறவுச் சங்கங்கள் பயிர்த்தொழிலாளருக்கு எவ்வாறு உதவி செய்தல் கூடும்?
11. பள்ளிக்கூடங்களால் உழவர் அடையக் கூடிய நன்மைகள் எவை?
12. கிராமப் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவி செய்யவேண்டுபவர் யாவர்?

## பயிற்சி

1. சிறு குறிப்பு வரைக:—பண்ணை முறை, கால்நடை மருத்துவ நிலையம், பருவக்காற்றுகள், நீர்ப்பாசன வசதிகள், வரி நீக்கம், நில நீதி மன்றங்கள்.
2. வாக்கியங்களில் அமைத்து எழுதுக:—துண்டு நிலங்கள், நாட்டுத் திருப்பணி, முற்போக்கு, ஈடுபட்டு, பாதுகாப்புத் திட்டம், அரிய வாய்ப்பு.
3. ‘பயிர்த்தொழில் நம் நாட்டில் அவமதிக்கப்படுதற்குரிய காரணங்கள்’—என்ற பொருள்பற்றி 20 வரிகளில் ஒரு கட்டுரை வரைக.
4. குடியானவர் என்னென்ன கைத்தொழில்களைச் செய்யலாம் என்பதைப் பற்றிச் சிந்தித்து ஒரு கட்டுரை எழுதுக.

# 14. பழந்தமிழ் உரைநடை

## அடியார்க்கு நல்லார்

[அடியார்க்கு நல்லார் ஏறத்தாழக் கி. பி. 14-ஆம் நூற்றாண்டினர் என்று அறிஞர் கருதுகின்றனர். இவர் சிலப்பதிகாரம் என்னும் நூலுக்கு விரிவான உரை கண்டவர். இவர் உரை மிகச் சிறந்த உரையாகப் பாராட்டப்படுகின்றது.]

### (1) மதுரைக்குச் செல்லும் வழி

[கோவலனும் கண்ணகியும் கவுந்தியடிகளுடன் மதுரை நோக்கிச் சென்றபோது வழியில் உறையூரில் தங்கினர்; பிறகு அவ்விடத்தைவிட்டுத் தெற்கு நோக்கி நடந்தனர்; வெய்யிலின் கடுமையால் ஓர் இளமரக்காவில் இருந்த மண்டபத்தில் தங்கினர்; அப்பொழுது திருவேங்கடம் முதலிய இடங்களைக் கண்டுவந்த மறையவன் ஒருவன் மதுரைக்குச் செல்லும் வழிகளை அவர்களுக்கு விளங்க உரைத்தான். அவ்வழிகளுள் கீழ்வருவது ஒன்று.]

[மறையவன்] ''விரிந்த தலைகளையுடைய வெண் கடம்பும், உலறிய தலைகளையுடைய ஓமையும், பொரிந்த தாளையுடைய வாகையும், தண்டுமுளிந்த புறக்காழாகிய மூங்கிலும், வரியை யுடைய மரல் நீர் வற்றித் திரங்கிய கரிந்து கிடக்கின்ற இடங் களும், அவ்விடத்தே நீருண்டலை விரும்பி அவ்விருப்பத் தாலே உழைமான் நின்று உளைக்குங் காடும், எயினரூரை யடுத்த வழியுமாகிய அவை கடத்தற்கரிய; அவற்றைக் கடந்துபோனால், அவ்விடத்து மலைச்சாரலில் விளையும் நெற் பயிரும், முறிக்கும் பருவத்தைத் தன்னிடத்துடைய கரும்பும், கொய்யும் பருவத்தையுடைய தினையும், வளவிய புனத்தில் விளைந்த வரகும், வெள்ளுள்ளியும், மஞ்சளும், அழகிய கொடி யையுடைய கவலையும், தலைதாழ்ந்த குலையையுடைய வரை வாழையும், கமுகும் தெங்கும் மாவும் பலாவுமென்னு மிவை தனக்குச் சுற்றெங்கும் சூழப்பட்டு ஓங்கிய தென்னனுடைய சிறுமலையென்னும் பெயரையுடைய மலை விளங்கித் தோன் றும்; அம்மலையை வலப்பக்கத்துக்கொண்டு இடப்பக்கத்து நெறியிற் சென்று மதுரையிற் புகுமின்,'' என்றான்.

## (2) தேவகுமரன் வரலாறு

[கண்ணகியை மாதரி என்னும் இடைக்குலத் தலைவியிடம் அடைக்கலமாக அளித்தபொழுது, கவுந்தியடிகள் அடைக்கலப் பொருளின் சிறப்பினை விளக்கும் முறையில் கீழ்வரும் வரலாற்றை மாதரி உள்ளத்திற் பதியுமாறு எடுத்துக் கூறினர்.]

கீழ்வரும் பகுதியின் முன் தொடர்பு :—பூம்புகார் நகரில் ஒரு காலத்தில் சமண முனிவர்கள் இல்லறத்தார்க்கு அறவுபதேசம் செய்துகொண்டிருந்தனர் ; அப்பொழுது அங்கு அனைவரும் காணப் பேரழகுடைய தேவகுமரன் ஒருவன் குரங்குக் கையுடன் தோன்றினன். அவனைக் கண்ட இல்லறத்தாரும் பிறரும் அவன் வரலாற்றையும் அங்குத் தோன்றிய காரணத்தையும் அறிய விரும்பினர். அப்பொழுது அங்கிருந்த சமண முனிவர் ஒருவர் அவனது வரலாற்றைக் கீழ்வருமாறு விளங்கவுரைத்தார்.

"எட்டிப் பட்டத்தையுடைய சாயலனென்னும் வாணிகன் துறவாது இல்லறத்திருந்தவன்றனது உண்ணாவிரதத்தையுடையோர் பலரும் புகும் மனையகத்தே அவன் மனைக்கிழத்தி ஒரு பெரிய தவமுதல்வனைத் தன்வினை நீங்க எதிர்கொள்கின்ற பொழுதின்கண் அவ்வூரிடத்துத் துரப்புண்டு உணவும் பெறுது சிறுமையுற்றதொரு கருங்குரங்கு அச்சத்தோடு ஒதுங்கிவந்து உள்புக்கு, அருளறத்தின் பகுதிப்பட்ட மாதவனுடைய பாதத்தின் வணங்கி, அவன் உண்டொழிந்த அன்னத்தையும் கை கழீஇய நீரையும் சிறிதருந்திப் பெரும் பசி தீர்ந்து எதிர்முகம் நோக்கிய முகச் செவ்வியைக் கண்டு சலியாவுள்ளத்தையுடைய அறிவனும் மனமகிழ்ந்து, இல்லறக் கிழத்திதன்னை, 'நீ நின்மக்களின் ஒருதன்மையாக ஓம்புக' வெனக் கைப்படுப்ப, அவளும் மிக்கோனுற் கூறப்பட்ட மெய்ம்மொழியைத் தப்பாமற் பரிகரித்தொழுகா நிற்கின்றுழி, அங்ஙனங் காதலித்த அக்குரங்கு மரிக்க, அதனுடைய ஒரு கூற்றைத் தானஞ் செய்கின்ற மனைக்கிழத்தி, 'இதன் தீய பிறப்பறுக'வெனச் செய்தனளாதலானே, மத்திம தேசத்து வாரணவாசி யென்னு நகரியின் உத்தரகௌத்தனென்னு மரசனுக்கு ஒரு மகனுய் அழகினேடும் மெய்ப்பொறியோடும் உணர்வோடுந் தோன்றி, மிக்க தானசூரனுய்ப் பலவகைப் பட்ட தானங்களையுஞ் செய்து, அந்த அரசுரிமையிலே முப்பத்திரண்டாண்டிருந்து, பின்பு தெய்வயாக்கை பெற்றனன் ; ஆதலானே அங்ஙனம் பெற்ற சீமத்தான பெரும்பயனெல்

லாம் தன்னைக் காத்தளித்தவள் செய்த தானத்தாற் பெற்ற சிறப்பென்று உட்கொண்டு, முற்பிறப்பில் கருங்குரங்கான வடிவிற் சிறிய கையைத் தனது பெரிய ஒரு பாகத்தே கொண்டு, 'நன்மைக் கூற்றிலே பொருந்திய சாயலனுடைய மனையாள் தலைநாளிற் செய்த தானத்தாலே இந்த வடிவாயினேன்; இதனை நீங்கள் அறிமின்', என்று சாவக நோன்பிகட்கெல்லாம் விளங்க அறிவித்தற்குத் தேவகுமாரன் இங்ஙனம் தோன்றினன்."

## அருஞ்சொற்பொருள்

### மதுரைக்குச் செல்லும் வழி

உலறிய - காய்ந்த. புறக்காழ் - வெளியில் வைரம் பாய்ந்த, புல்வகை. முளிதல் - காய்தல். மரல் - நாரையுடைய ஒரு வகைச் செடி. திரங்கிய - சுருங்கிய. உழைமான் - ஒரு வகை மான். உளைக்கும் - ஒலிக்கின்ற. எயினர் - மறவர்; பாலைநில மக்கள். வெள்ளுள்ளி - வெண்காயம். கவலை - கொடியையுடைய கிழங்கு. வரைவாழை - மலைவாழை. கமுகு - பாக்கு மரம். தெங்கு - தென்னை.

### தேவகுமரன் வரலாறு

துரப்புண்டு - துரத்தப்பட்டு. மாதவன் - சிறந்த முனிவன். கழீஇய - கழுவிய. முகச்செவ்வி - முகத்தின் நிலை. சலியா - கலங்காத. ஓம்புக - பாதுகாத்துக்கொள்க. கைப்படுப்ப - கொடுக்க. பரிகரித்து - பாதுகாத்து. நிற்கின்றுழி - நின்றபோது. ஒரு கூறு - மக்களுக்கு உள்ள செல்வம்போல் பிரித்து வைக்கப்பட்ட செல்வம். தான சூரனாய் - தானம் செய்வதில் வல்லவனாய்; பெருவள்ளலாய். சீமத்தான பெரும் பயன் - சிறந்த தானத்தால் வரும் பயன். சாவக நோன்பிகள் - சைனரில் இல்லறத்தார்.

## கேள்விகள்

1. மதுரைக்குச் செல்லும்போது கடத்தற்கு அரிய வழியில் காணப்படுபவன எவை?
2. தென்னனுடைய சிறுமலை எவ்வாறு விளங்கித் தோன்றும்?
3. சாயலன் மனைவி கருங்குரங்கை வளர்த்த காரணம் யாது?
4. சாயலன் மனைவி செய்த தானப் பயனால் கருங்குரங்குக்கு ஏற்பட்ட நன்மைகள் எவை?
5. தேவகுமரன் சாவகநோன்பிகள் முன்னிலையில் தோன்றிய காரணம் யாது?

## பயிற்சி

1. பின்வரும் சொற்றொடர்களை அமைத்து வாக்கியங்கள் வரைக:— மலைச்சாரல், வலப்பக்கம், மனைக்கிழத்தி, தலைநாளில், அறிமின்.
2. 'மதுரைக்குச் செல்லும் வழி' என்னும் பகுதியில் வரும் மரங்களின் பெயர்களை எடுத்து எழுதுக.
3. தேவகுமரனே தன் வரலாற்றைக் கூறுவதுபோல எழுதுக.

———

135560

R.F.R
844

SCANNED

SCANNED

# NATIONAL TAMIL MALAI

FORM IV—GENERAL COURSE

EDITOR: Dr. M. RAJAMANIKKANAR
*Vivekananda College, Madras*

THE NATIONAL PUBLISHING Co.,
6, KONDI CHETTY STREET, MADRAS-1

*Copyright*]

[*Price* Re. 1/4.